# வெள்ளோடு சாத்தந்தை குலம் இராசாக்கள் வரலாறு



V2111;91 V N87
132967

ச. இராசு

# வெள்ளோடு
# சாத்தந்தை குலம்
# இராசாக்கள் வரலாறு

ஆசிரியர்

புலவர் செ. இராசு எம்.ஏ.,
கல்வெட்டியல் துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்-613 005

வெளியீடு

அருள்மிகு இராசாக்கோயில்
குடமுழுக்கு விழாக் குழுவினர்
வெள்ளோடு-638 112

முதல் பதிப்பு : 8-7-1987 குடமுழுக்கு விழா நாள்.

விலை : ரூபாய் 5-00

நூல் கிடைக்குமிடம் :

(1) இராசாக் கோயில்
வெள்ளோடு - 638 112

(2) நூலாசிரியர்

மாருதி பிரஸ்,
173, பீட்டர்ஸ் ரோடு,
சென்னை - 600 014.

# இராசாக்கள் அருளுடன்...

குலப்பெருமக்கள் அனைவரும் மகிழ்வடையும் வகையி லும், குன்றாத வளம்பெற்றுக் குடிமக்கள் வாழவும், நாடு நன்மை பெற்று உய்யவும் அருள்மிகு இராசாக்கள் அருளால் இராசாக் கோயில் குடமுழுக்கு விழா சிறப்புடன் நடைபெற்றுள்ளது.

நாடெங்குமிருந்து சாத்தந்தை குலப் பெருமக்கள் இராசாவின் அருளை நாடிக் குடமுழுக்கு விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளனர்.

வெள்ளோடு சாத்தந்தை குலம் இராசாக் கோயில் பற்றிய வரலாற்றுச் செய்திகளை ஒருசேரத் தொகுத்து அச்சிடவேண்டும் என்று கூறியவுடன், அனைத்துப் பெரு மக்களும் ஆர்வமுடன் முயற்சியை வரவேற்றனர்.

மிகக் குறுகிய காலத்தில் இந்நூலைத் தொகுத்து வெளியிடவேண்டியிருந்ததால் தொடர்புடைய எல்லா இடங்களுக்கும் நேரில் வர இயலவில்லை. சாத்தந்தை குலப் பெருமக்கள் தங்கள் வட்டாரச் செய்திகளை அறிவித்தால் உடனே வந்து ஆய்வுசெய்து அடுத்த பதிப்பில் அவைகளைச் சேர்த்துக் கொள்ள வசதியாகஇருக்கும்.

நமது திருக்கோயில் சார்பில் இந்நூல் வெளிவரு கிறது.

இந்நூல் வெளிவர குடமுழுக்கு விழாக் குழுவினர் அனைவரும் மிகுந்த ஆர்வம் காட்டினர். தலைவர் திரு ஒ.எஸ். ரங்கசாமிக் கவுண்டர், திரு கே.சி. சுப்பையா, திரு கே. சண்முக இராமசாமிக் கவுண்டர் ஆகியோர் அரிய ஆலோசனைகளை வழங்கினர்.

அனைவருக்கும் என் நன்றி உரித்தாகுக.

அன்பன்,

வெள்ளோடு
27-6-87

செ. இராசு

# நூலின் உள்ளே


| | பக்கம் |
|---|---|
| இராசாக்கள் அருளுடன் | ... 3 |
| கொங்கு நாடு | ... 5 |
| பூந்துறைநாடு | ... 9 |
| வெள்ளோடு | ... 19 |
| வெள்ளோட்டு இலக்கியங்கள் | ... 26 |
| வெள்ளோட்டுக் கோயில்கள் | ... 33 |
| சாத்தந்தை குலம் | ... 44 |
| சாத்தந்தை குலக் காணிகள் | ... 55 |
| செப்பேடு, பட்டயங்களில் சாத்தந்தை குலம் | ... 60 |
| சாத்தந்தை குலத்தாரின் சமயத் திருப்பணிகள் | ... 69 |
| சாத்தந்தை குலத்தாரின் குல குருக்கள் | ... 85 |
| சாத்தந்தை குலம்-அரசர் தொடர்புகள் | ... 89 |
| சாத்தந்தை குலத்தார் சாதனைகள் | ... 97 |
| அருள்மிகு இராசாக் கோயில் | ... 104 |



'எண்டிசை மதிக்கவரு தண்டிகைத் துரையான
எங்கள் குல இராசாக்கள்'

# கொங்கு நாடு

நம் செந்தமிழ் நாடு, சேர சோழ பாண்டிய நாடுகளைப் போலவே தொண்டைநாடு, கொங்கு நாடு என்ற இரண்டு தனிப் பிரிவுகளையும் பழங்காலத்தில் தன்னகத்தே கொண்டிருந்தது.

கொங்கு நாடு தனக்கென்று எப்பொழுதும் தனியான எல்லைகள், வரலாறு, கலை, பண்பாடு, நாகரிகம், பழக்க வழக்கம் ஆகியவைகளைக் கொண்டது. இதனைப் பழங்கால இலக்கியங்களும் கல்வெட்டுக்களும் உறுதிப் படுத்துகின்றன. நீலகிரி, கோவை, பெரியார், சேலம், தருமபுரி மாவட்டங்களின் சில பகுதிகளும், மதுரை மாவட்டம் பழனிப் பகுதியும், திருச்சி மாவட்டக்கரூர், குளித்தலைப் பகுதிகளுமே கொங்கு நாடாகும்;

'வடக்குப் பெரும்பாலை வைகாவூர் தெற்கு
குடக்குப் பொருப்புவெள்ளிக் குன்று—கிடக்கும்
களித்தண் டலைமேவும் காவிரிசூழ் நாடு
குளித்தன் டலையளவு கொங்கு'

என்பது தனிப்பாடல். கொங்கு நாட்டு எல்லை கூறும் எல்லாப் பாடல்களுமே வெள்ளியங்கிரி மலையை மேற்கு எல்லையாகக் கூறுகின்றன. மேற்குத் தொடர்ச்சி மலைக்கு மேற்கே சேர நாடு என்பதே இதன் கருத்தாகும்.

அதனால்தான் தொண்டைநாடு, கொங்கு நாடு ஆகியவைகளைச் சேர்த்துத் தமிழ்நாடு ஐந்து என்ற கருத்து முன்பே இருந்தது. தண்டியலங்காரம் என்னும் நூலின் மிகப் பழமையான மேற்கோள் பாடல் ஒன்று,

'வியன் தமிழ்நாடு ஐந்து'

என்று கூறுகிறது. சைவ சமய நூல்களில் மிகத் தொன்மையானதாகக் கருதப்படுகின்ற திருமந்திரம்,

'தமிழ் மண்டிலம் ஐந்து'

என்று தமிழ்நாட்டின் ஐந்து பிரிவுகளைச் சுட்டிக் காட்டுகிறது. எனவே கொங்கு நாடு தனிப்பிரிவு என்பது இவற்றால் புலப்படுகிறது. வரலாற்று ஆசிரியர்கள் பலரும் இக்கருத்தை ஏற்றுக் கொள்கின்றனர்.

சங்க இலக்கியத்தில் பல இடங்களில் 'கொங்கு நாடு' தனி நாடாகவே குறிக்கப்படுகிறது. இந்நாட்டு மக்கள் 'கொங்கர்' என்று சங்க இலக்கியத்தில் அழைக்கப்படுகின்றனர். சங்கப் பாடல்களில் கொங்கின் குறுநில மன்னர்கள் பலர் தனியாகக் குறிக்கப் பெறுவதுடன் கொங்கு நாட்டின் கால்நடைச் செல்வம், ஆழ்கிணறு, தண்ணீர்ப் பற்றாக்குறை, கொங்கரின் உழைப்பு, அவர்தம் போர்த்திறன் ஆகியவை பல்வேறு இடங்களில் பரக்கப் பேசப்படுகின்றன. மேலும் கொங்கு நாட்டு மணிகள், வண்ணக் கற்கள், வேலைப்பாடு மிக்க நல்ல அணிகலன்கள் புகழ்ந்து பாராட்டப் பெறுகின்றன.

சேரன் செங்குட்டுவன், தனக்குச் சமமான அரசனாகக் கொங்கு நாட்டு இளங்கோசரைத் தமிழ்நாட்டு மூவேந்தருக்கு ஒப்ப மதித்துப் போற்றியிருக்கின்றான். நூற்றுவர் கன்னர், இலங்கைக் கயவாகு, மாளுவ வேந்தர், சோழன் பெருங்கிள்ளி ஆகியோர் போலக் கொங்கு நாட்டு மன்னனையும் நட்பாகக் கொண்டிருக்கிறான். இதனைச் சிலப்பதிகாரத்தின் மூலம் அறிகின்றோம்.

பேரூரை 'மேற்குக் கொங்கு' என்று பாண்டியர் பழஞ் செப்பேடும் இலக்கியங்களும் கூறுவது கொங்கு நாடு தனிநாடு என்பதாலேயாகும். கொங்கு நாட்டிலிருந்து சமய அடியார்கள் சேரநாடு நோக்கிச் சென்றதை,

'கொங்குநாடு கடந்துபோய்க் குலவுமலைநாட்டு
எல்லையுற'
'மலைநாடு கடந்தருளி......திருமுருகன் பூண்டிவழிச்
செல்கின்றார்'

என்று பெரியபுராணம் குறிப்பிடும். சிலப்பதிகாரத்திலும் கொங்கின் மேற்குப்பகுதி அரசர் குறிக்கப் பெறுகின்றார்.

நூற்றாண்டுகள்தோறும் கல்வெட்டுக்களும் செப்பேடு களும் கொங்கு நாடு தனி நாடெனக் கூறுகின்றன. சிலர் தொண்டை நாட்டைச் சோழ நாட்டுடனும் கொங்கு நாட்டைச் சேர நாட்டுடனும் அடக்குவர். அது பொருந்தாது என்பது மேற்கண்ட சான்றுகளால் விளங்கும்.

'கொங்கு நாட்டு வரலாறு' எழுதிய கோவைக் கிழார் தன் நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார் :

'சோழர்கள், ஒயிசளர், விசய நகரத்தார், மைசூர் மன்னர்கள் ஆகிய வம்சத்தாரிடம் கொங்குநாடு சென்றது. இக்காலங்களிலெல்லாம் வெவ்வேறு இராச்சியங்களுடன் கொங்கு நாடு இணைக்கப்பட்ட போதிலும் தனது தனிப்பட்ட வாழ்க்கையை இந்நாடு இழக்கவில்லை. இந்நாட்டின் அமைப்பு மாத்திரம் அன்றி இந்நாட்டுக் குடிகளின் பழக்க வழக்கங்களும் பண்டைக்காலம் தொட்டு ஒரேவிதமாக இருந்து வந்தன. சமூக வழக்கங்களிலும் இவர்களுடைய வழக்கங்கள் ஏனைய நாட்டார்களிடமிருந்து சிறிது வேறுபட்டேயிருக்கும். இவ்விதக் காரணங்களினால் கொங்கு நாட்டைத் தனிநாடு என்று நிச்சயிக்கக்கூடும்.

வராக மிகிரர் தன் நூலில் கொங்கு நாடு தனி நாடு என்று குறிக்கின்றார். அசோகன் (கி.மு. 278—232) கல்வெட்டிலும் தனி அரசராகக் குறிக்கப்பெறும் சதிய புத்திரர் கொங்கு நாட்டு மன்னன் அதியமானே என்பது ஜம்பைக் கல்வெட்டால் உறுதிப்படுகிறது.

'கொங்கு நாடு' என்னும் வரலாற்று நூலில் புலவர் குழந்தை அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார் :

'...தொன்றுதொட்டே கொங்குநாடு சேர சோழ பாண்டியர்களாகிய முடியுடை மூவேந்தராட்சிக்கு

உட்படாது தனியாட்சி நாடாகவே இருந்து வந்தது. வேளிர் என்னும் சிறப்புப் பெயருடைய வேளாண்குடிச் செல்வராகிய கொங்கு நாட்டுத் தனி அரசர்கள் தமக்குள் பகையின்றி ஆண்டு வந்தனர். அவர்கள் முடியுடை மூவேந்தரிடத்தும் அன்பொடு நண்பும் அமைவும் உடையவரா்க இருந்து வந்தனர். முடியுடை மூவேந்தர்க்கும் மைத்துனரும் மாமனாருமாகிய அவர்கள் பின்னர் எவ்வாறு இருந்திருப்பர். கேரளோற் பத்தி, கேரள மான்மியம் போன்ற நூல்களும், திருவாங்கூர்ச் சரித்திர ஆசிரியர் சங்குண்ணி மேனன் அவர்களும், டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்களும் கொங்கு தனியாட்சி நாடு என்பதைத் தக்க எடுத்துக் காட்டுக்கள் காட்டி நிறுவியுள்ளனர்.'

தொல்பொருட் சிறப்பும், கல்வெட்டுப் பரப்பும், சிற்பச் செல்வமும், வரலாற்றுப் பெருமையும் உடையது நமது கொங்கு நாடு. கொங்கு 24 நாடுகளில் பூந்துறை நாடும் ஒன்று.

# பூந்துறை நாடு

## பெயர்க்காரணம்

கொங்கில் தொன்மையான வரலாற்றுப் பெருமை உடைய நாடு பூந்துறைநாடு. இதன் பெயர்க்காரணம் பற்றிய பல கருத்துக்கள் கூறப்படுகின்றன.

கொங்கு நாட்டில் முதன் முதலில் மக்கள் புகுந்து உறைந்த (வசித்த) நாடு ஆதலின் இந்நாட்டுக்குப் பூந்துறை நாடு என்று பெயராயிற்று என்று ஒரு சாரார் கூறுகின்றனர்.

மற்றும் சிலர் பூக்கள் மிகுதியான நீர்த்துறைகளைப் பெற்று வளம் பெற்ற நாடு இது ஆதலின் பூந்துறைநாடு என்று பெயராயிற்று என்று கூறுவர். இதற்கு ஆதாரமாக மேழி விளக்கம் என்னும் நூலிலிருந்து

'திந்திருணி மாஅரசு தேங்கமுகு வாழைபலா
வந்து குலைசாய்ந்து மடல்விரிந்து—சிந்தினதால்
வாய்ந்தரச மொடுபெருகி வயலதனில் செந்நெல்விளை
பூந்துறைசெய் நாடு'

என்று வளத்தைப் படம்பிடித்துக் கூறும் பகுதியைச் சுட்டிக் காட்டுவர்.

வேறு சிலர் சங்க காலத்தில் 'புன்றுறை' என்ற கொங்கு நாட்டுக் குறுநில மன்னன் இங்கு ஆட்சி புரிந்ததாக அகநானூறு 44ஆம் பாடல் மூலம் அறிகின்றோம். அந்தப் புன்றுறை என்ற சங்க காலக் குறுநில மன்னன் பெயராலேயே இந்நாட்டுக்குப் பூந்துறை என்று பெயராயிற்று என்று கூறுவர்.

காவிரிக்கு மேற்கே இருக்கும் காரணத்தால் இந் நாட்டுக்கு மேல் கரைப் பூந்துறை நாடு என்று பெயர்

வழங்கிற்று. கொங்கு 24 நாடுகளில் பூந்துறை நாடும் ஒன்றாயிற்று.

## கொங்கு 24 நாடும் பிற்காலப் பெருக்கமும்

1. பூந்துறை நாடு, 2. தென்கரை நாடு, 3. காங்கேய நாடு, 4. பொன்கலூர் நாடு, 5. ஆறை நாடு, 6. வாரக்க நாடு, 7. திருவாவினன்குடி நாடு, 8. மண நாடு, 9. தலைய நாடு, 10. தட்டய நாடு, 11. பூவாணிய நாடு, 12. அரைய நாடு, 13. ஒடுவங்க நாடு, 14. வட்டகரை நாடு, 15. கிழங்கு நாடு, 16. நல்லுருக்கா நாடு, 17. வாழவந்தி நாடு, 18. அண்ட நாடு, 19. வெங்கால நாடு, 20. காவடிக்கா நாடு, 21. ஆனைமலை நாடு, 22. ராசிபுர நாடு, 23. காஞ்சிக் கோயில் நாடு, 24. குறுப்பு நாடு.

என்பன கொங்கு 24 நாடுகள். இதனைக் கீழ்வரும் நாட்டுப் பாடல் விளக்கும்.

சொல்லஅரி தானபூந் துறைசைதென் கரைநாடு
தோன்றுகாங் கேயநாடு
தோலாத பொன்கலூர் நாடுதிகழ் ஆறையணி
தோய்ந்தவா ரக்கநாடு
வல்லமை செறிந்ததிரு வாவினன் குடிநாடு
மணநாடு தலையநாடு
வரதட்டை பூவானி அரையநாடு ஒடுவங்க
வடகரை கிழங்குநாடு
நல்லுருக் காநாடு வாழவந் தியும்அண்ட
நாடுவெங் காலநாடு
நாவலர்கள் சொல்கா வடிக்காநா டானைமலை
ராசிபுர நாடுநிதமும்
இல்லறம் வளர்த்துதவி மல்குகாஞ் சிக்கோயில்
இயல்செறி குறுப்புநாடு
இனியபுகழ் சேர்கொங்கு மண்டலம் தனிலான
இருபத்து நான்குநாடே.

பிற்காலத்தில் பூந்துறை நாட்டின் இணை நாடுகளாகக் கீழ்க்கரைப் பூந்துறைநாடு, பருத்திப்பள்ளி நாடு, ஏழூர் நாடு இவைகள் தோன்றின. பொன்கலூர் நாட்டிலிருந்து தென்பொங்கலூர் நாடு தனியாகப் பிரிந்தது. அரைய நாடு மேல்கரை, கீழ்க்கரை என இரண்டாயிற்று. வாழவந்தி நாட்டுக்குத் துணை நாடுகளாகத் தூசூர் நாடு, விமலை நாடு என இரண்டு நாடுகள் ஏற்பட்டன. வெங்கால நாட்டுக்கு இணை நாடாக இடைப்பிச்சநாடும், இராசிபுர நாட்டுக்கு இணை நாடாகச் சேலம் நாடும் புதிதாக ஏற்பட்டன.

இராம பத்திரனின் நாடுகளின் விவரப் பட்டயத்தில் சிற்றெழுந்தூர் நாடு, மதிவள நாடு, நன்னாமதிவள நாடு, பாரிஒடுவெங்கல் நாடு, வண்டிக் கோட்டை நாடு, வடகரைப் பேரூர் நாடு எனப் புதிய நாடுகள் கூறப்படுகின்றன. மேட்டூர்ப் பகுதியில் வஞ்சி நாடு என்பதும் ஆறை நாட்டின் பெரும்பகுதி வடபரிசார நாடு என்பதும் கல்வெட்டுக்களில் காணும் புது நாடுகளாகும். பூந்துறை நாட்டில் ஈரோடு சார்ந்த சில பகுதி காஞ்சித்துண்டம் எனப்பட்டது.

தனிப் பாடல்கள் சில கொங்கு 42 நாடுகள் என்று கூறுகின்றன. 'பூந்துறை நாட்டுக் கட்டளை' என்னும் ஏட்டிலும் 'தாராபுரம் சூழ்ந்த நாடு 24, தணாயக்கன் கோட்டை சூழ்ந்த நாடு 6, குன்றத்தூர்த் துர்க்கம் வட கொங்கு நாடு 12 ஆக நாற்பத்து இரண்டு' என்ற பகுதியைக் காணுகின்றோம்.

பிற்காலப் பட்டயம் ஒன்றும் கொங்கு நாடு 42 பிரிவு களை உடையது என்று கூறுகிறது.

## எல்லைகள்

பூந்துறை போன்ற 24 நாடுகளுக்கும் பழங்காலத்திலே எல்லைகள் வகுத்தனர். அந்த எல்லைகள் ஏரி, குளம், ஆறு, மலை, பெருவழி இவைகளை வைத்துப் பிரிக்கப்

பட்டன. அதனால் இவை மாறாமல் தொன்றுதொட்டு விளங்கி வந்துள்ளன. சில நாடுகட்கிடையே எல்லை பற்றிய சண்டைகளும் வந்துள்ளன என்பதால் இவ்வெல்லைகள் பண்டைக்காலத்திலிருந்து அந்த அந்த நாட்டு மக்களால் போற்றிக் காக்கப்பட்டன என்பதை அறிகின்றோம்.

மேல்கரைப் பூந்துறை நாட்டுக்கு வடக்கு எல்லை பவானியாறு, கிழக்கு எல்லை காவிரியாறு, தெற்கு எல்லை நொய்யல் என்னும் காஞ்சியாறு, மேற்கு எல்லை சென்னி மலை ஆகியவைகளாகும். இதனை,

'உன்னிய தெற்கில் காஞ்சி உயர்நதி வடக்கு வானி
பொன்னிமா நதியே கீழ்ப்பால் புகன்றிடும் மேற்குத் திக்கில்
சென்னிமா மலையே ஆகும் சிறக்குமுப் பத்தி ரண்டூர்
மின்னுமேல் கரையாய்க் கொண்டு விளங்குபூந் துறைநன்
நாடு'

என்ற பூந்துறைப் புராணப் பாடல் விளக்கும்.

## முதன்மை

'நாலாறு நாட்டினில் மேலான பூந்துறை'

என்று கூறுவர். பூந்துறை நாட்டுக்குரிய முதன்மைச் சிறப்புக்கு ஒரு வரலாற்றுச் செய்தி கூறப்படுகிறது.

மூவேந்தர்களும் கரூர்ப் பசுபதி ஈசுவரனுக்குக் கோயில் கட்டிக் கலசம் வைக்க முற்பட்டனர். அவர்கள் கலசம் வைக்கும்போது அது நிற்கவில்லையாம். அதனால் பூந்துறை நாட்டுக்கு வந்து பூந்துறை நாட்டு மக்களை அழைத்துச் சென்று பூந்துறை நாட்டார் கையில் கலசம் வைக்க அது நின்றதாம். அதனால் மூவேந்தர்களுமே பூந்துறை நாடு அதிகம் சிறப்புள்ளது என்று கூறி இந்நாட்டில் தலயாத்திரை செய்து பூந்துறை, வெள்ளோடு, நசியனூர், எழுமாத்தூர் போன்ற இடங்களில் ஆலயத் திருப்பணிகள் பல செய்தனர் என்பது இலக்கியச் செய்தியாகும். இதனை

'மூவரையர் பசுபதிபாற் கன்பு கூர்ந்து
முந்தியகோ புரம்பட்டி முடிநில் லாமல்
காவலரும் மற்றவரும் பிடிமண் வைக்கக்
கலசம்நில்லாது இந்நாட்டைக் கருதித் தேடி
ஆவலுடன் இவர்கையால் கலசம் வைக்க
அதுநிற்க மூவர்முடி அன்பாய்ச் சூட்டிப்
பூவுலகில் கொங்கிலிரு பத்து நாட்டில்
பூந்துறைநாடு அதிகம்எனப் புகன்றிட் டாரே'

என்ற பாடல் மூலம் அறியலாம்.

## இலக்கியங்களில் பூந்துறை நாடு

பூந்துறை நாட்டின் பெருமைகளைப் பல்வேறு இலக்கியங்கள் புகழுகின்றன. அவற்றுள் ஒருசிலவற்றைக் கீழே காணலாம்.

## சென்னிமலைத் தலபுராணம்

வெண்ணி லாத்திரு நீற்றொளி மெய்யினில் விளங்க
நண்ணி னோர்க்கருள் இருநிதி வழங்கிநன்கு அளித்துப்
பண்ணி சைப்புரா ணம்பயின்று அறம்பயின் றிடலால்
புண்ணி யந்தரு நாடது பூந்துறை நாடு

## ஐயனாபரன் பள்ளு

காடெல்லாம்சிறு செந்நெல் விளையும்
கதிரவன்வந்து கமலங்கள் சேரும்
நாடெல்லாம்வெண் தரளம் கொழிக்கும்
நல்லஅல்லியில் வெண்மதி சேரும்
வீடெல்லாம்திரு மின்விளை யாடும்
வேதகாவிய புராணங்கள் ஓதும்
பாடெல்லாம்பைந் தமிழதை ஆக்கும்
பன்னுபூந்துறை நாடெங்கள் நாடே,

### பூந்துறைப் புராணம்

கொட்டுதல் மேள தாளம் குவிப்பது வளர்செஞ் சாலி
கட்டுதல் கோட்டை யானை கவனவாம் புரவி வெள்ளம்
அட்டுதல் கருப்பஞ் சாறே அழித்தல்தேன் பலாப்ப ழங்கள்
கிட்டுதல் தான தன்மம் கிடைக்கும்பூந் துறைநன் னாடு

### தனிப்பாடல்

பூமாது வாழும் புகழ்மாது போற்றிசைக்கும்
நாமாதெந் நாளும் நயக்குமே—கோமேவு
கோட்டங் கரமாகும் கொங்கென்னும் செல்விக்கு
நாட்டமாம் பூந்துறையூர் நாடு

இன்னும்,

'நாட்டிலுயர் பூந்துறைசை நாடு'
'பொன்மேவும் பூந்துறை'
'பூரணமாம் தாரணிசூழ் பூந்துறைசேர் நன்னாடு'
'பொன்னின்மழை பொழியும் பூந்துறை நன்னாடு'
'வாய்ந்தபுகழ்ப் பூந்துறைசை'

*என்றெல்லாம் இலக்கியங்களில் புகழப்பெறுவது மேல்கரைப் பூந்துறை நாடு.*

### தலைமைத் தலம்

பூந்துறை நாட்டின் தலைமைத் தலம் சென்னிமலை. *சென்னிமலை சங்க இலக்கியத்தில் 'சென்னிக்கோடு' என்று சிறப்பிக்கப்படுவது.*

சந்திரசூ ரியர்வந்து சாளரத்தைக் காக்கும்
    தழைத்தபொன்னாட்டு அரம்பையர்கள் சாபமதைத் தீர்க்கும்
மந்திகள்மாங் கனிபறித்துப் பந்தடித்து மகிழும்
    வாழைபலாக் கனிச்சாறு வயலோடிப் பாயும்

சுந்தரம்சேர் கருநொச்சி வெண்சாரை காணாச்
சுனைகளுடன் மாமாங்கச் சுரர்தீர்த்தம் வாழும்
புந்திமிகு சென்னிமலைப் புத்தேட்கும் அன்பாய்ப்
பூசத்தேர் நடத்திவைக்கும் பூந்துறைநன் னாடே

என்ற பாடல் சென்னிமலைத் தேரைப் பூந்துறை நாட்டார் நடத்துவதைக் கூறும். இன்னும் பூந்துறை, வெள்ளோடு, நசியனூர், எழுமாத்தூருக்குரிய மடங்கள் சென்னிமலை மாடவீதிகளில் இலங்குவதைக் காணலாம். சென்னிமலை சென்னியப்பன், குழந்தை, குழந்தைவேல் என்று சாத்தந்தை குலத்தார் பெயர்கள் வைத்துக் கொள்வது சென்னிமலையின் தொடர்பை விளக்கும். சென்னிமலைக்குச் சென்றுவழிபடும் வழக்கத்தைச் சாத்தந்தை குலத்தினர் மிகுதியாகக் கொண்டுள்ளனர்.

## பூந்துறை நாட்டு ஊர்கள்

பூந்துறை, வெள்ளோடு, நசியனூர், எழுமாத்தூர், பிடாரியூர், ஈங்கூர், பெருந்துறை, சாத்தம்பூர், காளமங்கலம், குழாநிலை, கிழாம்பாடி, முடக்குறிச்சி, அனுமன் பள்ளி, பழமங்கலம், குலவிளக்கு, காகம், அறச்சலூர், விளக்கேத்தி, ஈஞ்சம்பள்ளி, சத்திமங்கலம், சேமூர், மங்கலம், வீரகநல்லூர், ஈரோடு, பேரோடு, சித்தோடு, திண்டல்புதூர், இலவமலை, திருவாச்சி, பனயம்பள்ளி, ஓடாநிலை, முருங்கைத்தொழு ஆகிய 32 பழம்பெரும் ஊர்களைக் கொண்டது பூந்துறை நாடு. இதனைப் பின்வரும் ஊர்த் தொகைப் பாடல் தொகுத்துக் கூறுகிறது.

பூந்துறைசை வெள்ளோடை நசியனூர் எழுமாதை
புகழ்சேர் பிடாரிநகரம்
பூங்கமழும் ஈங்கியூர் பெருந்துறை சாத்தனூர்
பொன்காள மங்கலமதும்
ஆய்ந்ததமிழ் கூறும் குழாநிலை கிழாம்பாடி
ஆண்மைகொள் முடக்குறிச்சி

அனுமநகர் பழமங்கை குலவிளக்குக் காகம்
அறச்சலூர் விளக்கேத்தியும்
வேந்தர்மகிழ் ஈஞ்சநகர் கத்திமங் கலமதும்
மிக்கசே மூர்மங்கலம்
வீரநகர் ஈரோடு பேரோடு சித்தோடு
மிக்கான திண்டல்புதூர்
சேர்ந்துமழை பெய்திடும் இலவமலை திருவாச்சி
திகழ்பனசை ஓடாநிலை
தென்முருங் கைத்தொழுவு முப்பத்தி ரண்டூர்
சிறந்தபூந் துறைசைநாடே.

இவ்வூர்களில் சிவன், பெருமாள் கோயில்கள், கல்வெட்டுக்கள், நடு கற்கள், ஊர்நத்தம், பழைய ஊர் இருக்கைகள் ஆகியன காணப்படும். முன்பு இந்த ஊர்களிலும் இதனை ஒட்டியும் மக்கள் வாழ்ந்தனர். பழைமையான 32 ஊர்கள் இன்று புதிய துணை ஊர்கள் பல அமைந்து நூற்றுக்கணக்காகப் பெருகிவிட்டன.

## நான்கு தலைநகர்கள்

புகழ்மிக்க பூந்துறை நாட்டுக்கு 4 தலைநகரங்கள் இருந்தன. பூந்துறை முதல் தலைநகர். வெள்ளோடு இரண்டாவது தலைநகர், நசியனூர் மூன்றாவது தலைநகர், எழுமாத்தூர் நான்காவது தலைநகர். இந்நான்கு ஊர்கள் 'நகர்' என்றும் அழைக்கப்பட்டன. பிற ஊர்கள் 28. இதனைக் கீழ்வரும் சென்னிமலை ஆண்டவர் பிள்ளைத் தமிழ்ப் பாடல் நன்கு விளக்கும்.

நற்கா விரிக்குமேல் கரைதனில் பூந்துறைசை
நளிர்கொண்ட வெள்ளோடையூர்
நசையனூர் எழுமாதை எனுமுயர் புகழ்பெரிய
நகரமொடு நான்கதாகச்
சொற்சேர வேவகுத் துப்பின்னும் அவைதனைச்
சூழ்பதிகள் நாலேழ்எனத்

தூய்தாக்கி யாகமுப் பத்திரண் டதன்மிசைத்
தொல்பதிகள் சிறப்பதல்லால்
பொற்பான கீழ்க்கரையில் நாலெட்டு நகரம்
புரப்பதற் காகமுன்னம்
புரிதரு செங்கோட்டில் வீற்றிருந் தழகுதிகழ்
பூந்துறைநன் னாடனாகிச்
சிற்சோதி யாகிச் செகச்சோதி ஆனவா
சிறுதேர் உருட்டியருளே
சிகரா சலத்தில்வளர் தெண்டாயு தக்கரா
சிறுதேர் உருட்டியருளே.

## பூந்துறை நாட்டுச் சபை

பூந்துறை நாட்டு நிர்வாகத்திற்காகவும் நீதிபரிபாலனம் செய்யவும் ஆலயங்களுக்குக் கொடைகள் அளிக்கவும் அளித்த கொடையின் பயன்கள் தவறாது ஆண்டவன் திருக்கோயில்களைச் சென்றடையவும் பூந்துறை நாட்டுச் சபை இருந்தது. முக்கியமான முடிவுகளை இச்சபை கூடி முடிவு எடுக்கும். 14-17ஆம் நூற்றாண்டுகட்கிடையில் இச்சபை இயங்கி நல்லறம் நடத்தியுள்ளது இதனை,

'மேல்கரைப் பூந்துறை நாட்டு நாட்டவரோம்
நிறைவற நிறைந்து குறைவறக் கூடி எங்கள்
நாட்டு வெள்ளோடு சர்வேசுவரமுடைய தம்பிரா
னாற்கு தம்ம சாதனம் பண்ணிக் குடுத்தபடி......
இப்படிக்கு முப்பத்திரண்டு ஊரவர் சொற்படிக்கும்
கையெழுத்துப்படிக்கும்'

எனவரும் வெள்ளோட்டுக் கல்வெட்டால் உணரலாம்.

பூந்துறை நாட்டுச் சபையில் 32 ஊர்களுக்கு 56 உறுப்பினர்கள் இருந்தனர். உறுப்பினர்களை வீடு என்று பெயரிட்டு அழைத்தனர்.

பூந்துறைக்கு 10 உறுப்பினர்கள்; வெள்ளோட்டுக்கு 8 உறுப்பினர்கள்; நசியனூர்க்கு 6 உறுப்பினர்கள்; எழுமாத்

தூர்க்கு நான்கு உறுப்பினர்கள்; இந்த நான்கு நகரம் போக ஏனைய 28 ஊர்களுக்கும் ஒவ்வொரு உறுப்பினர்கள். ஆக மொத்தம் 56 உறுப்பினர்கள். பூந்துறை, வெள்ளோட்டுக்கு 10, 8 என உறுப்பினர்கள் இருந்தாலும் ஊ நக்கென்று ஒருவரே கையொப்பமிட்டுள்ளார். இது இன்றைய ஐக்கிய நாடுகள் சபைக்கு இந்தியா சார்பில் ஒரு பெரும் குழு கலந்து கொண்டாலும் அனைவருக்கும் ஓட்டு இல்லாமல் இந்திய நாட்டுக்கென ஒரே ஓட்டுமட்டும் இருப்பதை ஒப்பிடலாம்.

'நற்றவம்சேர் பூந்துறைக்குப் பத்து வீடு
நளினமிகும் வெள்ளோடைக்கு இருநான்கு என்ப
கற்றவர்சூழ் நசையனூர்க்கு ஆறதாகும்
கதித்தஎழு மாதைக்கு நான்குவீடு'

எனவரும் பகுதி மேற்கண்ட கருத்தைச் சுட்டுகிறது.

தலசுய ஆட்சிமுறைக்குப் பூந்துறை நாட்டு ஆட்சிமுறை மிகச்சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கியுள்ளது என்பதை இப்பகுதிக் கல்வெட்டுக்களும், செப்பேடுகளும் நமக்கு நன்கு எடுத்துக் கூறுகின்றன. இச்செய்தி வரலாற்றுலகில் குன்றின் மேலிட்ட விளக்காகத் திகழுகிறது.

புகழ்மிகக் கொண்ட பூந்துறை நாட்டின் பீடும் பெருமைக்கும் காரணமாகப் பூந்துறைக் காணியாளர்கள் போலவே வெள்ளோடும் அதன் காணியாளர்களான சாத்தந்தை குலத்தாரும் பல நூற்றாண்டுகள் அரும்பாடு பட்டனர்; உயர்வுக்குக் காரணமாக விளங்கினர். இதனை ஆவணங்களும், இலக்கியங்களும், செப்பேடு பட்டயங்களும், தனிப்பாடல்களும் நன்கு விளக்குகின்றன. தொன்மை தொடங்கி இன்றுவரை பூந்துறை நாட்டின் மிகச் சிறந்த வரலாற்றுப் பெருமையுடைய ஊராக வெள்ளோடு விளங்கி வருகிறது.

# வெள்ளோடு

பூந்துறை நாட்டின் புகழ்மிக்க பழம்பெரும் ஊர்களில் ஒன்று வெள்ளோடு. சுமார் 1000 ஆண்டுகளாகக் கொங்கு நாட்டுக் கல்வெட்டுக்கள் பலவற்றில் சிறப்புடன் சுட்டிக் கூறப்படும் ஊர். வரலாற்றுச் சிறப்பும் இலக்கியப் பெருமையும் சமயச் சீரும் பெற்ற பேரூர் வெள்ளோடு.

## பெயர்க்காரணங்கள்

வெள்ளோட்டின் பெயரோடு சித்தோடு, பேரோடு, ஈரோடு ஆகிய ஊர்ப்பெயர்களையும் இணைத்துப் புராணச் செய்திகள் சில கூறப்படுகின்றன. திருமாலின் வாயில்காப் போரான மது, கைடபர் ஆகிய இருவரும் துருவாசரின் சாபம் பெற்றுத் தலை வெடித்தபோது சிறிய ஓடு, பெரிய ஓடு, ஈரமான ஓடு, வெள்ளை ஓடு ஆகிய நான்கும் விழுந்த இடங்கள் முறையே சித்தோடு, பேரோடு, ஈரோடு, வெள்ளோடு ஆயிற்று என்பர்.

மற்றுமொரு சாரார் காளிதேவி பிரமனின் தலையைத் துண்டாக்கினாள். பிரமன் தலை வெடித்துப் பல இடங்களில் சிறிதும் பெரிதும் ஈரமும் வெள்ளையுமாக விழுந்தன. அதனால் சித்தோடு, பேரோடு, ஈரோடு, வெள்ளோடு என்று இவ்வூர்களுக்குப் பெயராயிற்று என்றும் கூறுவர். இவை முறையே வைணவர்களும் சைவர்களும் கற்பனையாகப் படைத்துக் கூறும் புராணக் கதைகளாகும்.

வேறு சிலர் மது, கைடபர், பிரமன் மண்டை ஓடுகட்கும் இத்தலங்கட்கும் தொடர்பில்லை. இத்தலங்கள் ஓடைகளாற் பெயர் பெற்றன என்று கூறிச் சிற்றோடை, பேரோடை, ஈரோடை, வெள்ளோடை என ஆயிற்று என்று காரணம் கூறுவர். இக்காரணமே ஏற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது.

பூந்துறைப் புராணத்தில் இந்திரன் யானை தன் காலாலும் தந்தத்தாலும் நிலத்தைத் தோண்ட இங்கு வெண்மணல் நிறைந்த ஓடை பாலோடை போலக் காட்சி தந்து தோற்றிற்று; அதனால் இவ்வோடை வெள்ளோடை ஆயிற்று என்று கூறப்படுகிறது.

மேல்பாலில் வாசவன்தன் கரியொன்று ஏகி
விளங்குமதம் பொழிந்துநிழல் சுழித்து விம்மிக்
காலாலும் கோட்டாலும் நிலத்தைக் கீண்ட
கண்டதுநீர் வெள்ளோடை கமழ்பால் ஓடை
சேலோடு வரால்குதிக்கும் கழனி சூழும்
திவ்வியமா தவிநீழல் சிமையா ளோடும்
நால்வேதம் தான்முழங்கச் சருவ லிங்க
நாயகராய் இருந்தவரைக் கண்டார் வானோர்

கைகூப்பிச் சருவலிங்க தேவா என்று
கழலிணையைத் தான்போற்றக் கனிவு கூர்ந்து
தெய்வவல்லிக் கொம்பதுபோல் அசைந்து காலில்
சிலம்புபா டகங்கள்கலீ ரென்னத் தேவர்
மையணியும் கண்ணாளை மகிழ்ந்து போற்றி
வளரும்பா டகவல்லி மாதே எங்கள்
தெய்வமென வந்துதித்தாய் தேவ தேவே
செழுஞ்சுடரே எனஉரைத்தார் தேவ ரானோர்

## இலக்கிய ஏடுகளில்

'வெள்ளோடை ஆம்பல்களும் மெய்நளின மாமலர்சூழ்
வெள்ளோடை யும்பரவும் வெள்ளோடை யம்பதி,

என்றும்,

'ஓதுரிவை யேகாசர் உமைநேசர் பவநாசர்
தாதகிதோள் புனையீசர் சருவேசர் வாசவூர்
மாதவிநீ ழலினோடும் வயலோடும் மதகோடும்
மேதிநறும் பாலோடு புனலோடும் வெள்ளோடு'

என்றும்,

'வெள்ளோடை ஆம்பல்நிறை வெண்டயனோடு
அண்டர்தொழும்
வெள்ளோடை ஆம்பல்நிறை வெள்ளோடை - வெள்ளோடை
ஏற்றவிடங் கையனார் ஏற்றவிடங் கையனார்
ஏற்றவிடங் கையனார் இல்'

என்றும்,

'காய்மாறாத் தேமாவும் கத்தரியி லாக்கிணறும்
பூமாறாக் கொன்றையுள பொற்பதியாம் - நேம
நறுவீசர் சோலைசெறி நன்னகர்வெள் ளோடைச்
சருவீசர் வாழும் தலம்'

என்றும்,

'செய்யபுகழ் வெள்ளோடை'
'உண்மைபெறும் வெள்ளோடை'
'கங்கைகுலக் காலிங்கராய வெள்ளோடு'

என்றும் இலக்கியத்தால் ஏற்றம் பெற்றது வெள்ளோடு மாநகர். இவ்வாறு புலவர் நாவில் தவழ்ந்த புகழ்மிக்க பெரும் பேரூர் வெள்ளோடு.

## இல்லச் சிறப்பு

வெள்ளோட்டில் வாழ்ந்த சாத்தந்தை குல வள்ளல் பெருமக்களின் மாளிகைச் சிறப்புக்களைப் புலவர்கள் புகழ்ந்து பாடியுள்ளனர்.

'மின்னிலங்கு ரத்னஒளி மேவி அழகுயிர்க்கும்
பொன்னிலங்கு நற்கதவு பொற்பிலங்கு மாடமுளோன்
விச்சித் திரமாக விளங்கும்தெய் வப்படங்கள்
உச்சிதமாய்க் கண்ணாடி ஒங்கும்ஆ சாரமுளோன்
திம்புகளும் மெத்தைகளும் செய்யசக லாத்துகளும்
இம்பமகி ழும்படியா யோர்வைஆ சாரமுளோன்
பட்டுவர்க் கங்கள்பல பச்சடங்கள் உச்சிதமாய்

நெட்டில் ஒழுங்காய் நிறைந்திருக்கும் ஆசாரம்
பந்துசனர் சொந்தமொடு பண்டு புகழ்நிறைந்த
விந்தை யுடன்மேன்மை விளங்குகின்ற ஆசாரம்
கப்பமிட வந்தரசர் கண்டுமகிழ் வெய்திநல்ல
மெய்ப்பணிசெய் துற்றதிய மேன்மைபெறும் வாசலினான்
சோழன் மனுநீதி துலங்க அருள்சுரந்த
மேழி விருதார்க்க விளங்குமிந்திர வாசலினான்'

இவ்வாறு வெள்ளோட்டில் உள்ள அவர்கள் மாடம், ஆசாரம், வாசல் சிறப்பிக்கப் பெறுகின்றன.

## புலவர்வாழ் வெள்ளோடு

வெள்ளோட்டில் தமிழ் கற்றறிந்த புலவர்பலர் வாழ்ந்தனர். புலவர் பாளையம் என்ற ஊர் அருகில் உள்ளது இதனை விளக்கும். வடகரை நாட்டிலிருந்து புலவர்களை அழைத்துக் கொண்டு வந்து வெள்ளோட்டுப் பகுதியில் குடியேற்றி அவர்கள் வாழ்வுக்கும் வசதிக்கும் வேண்டியவைகளை வேண்டியவாறு அளித்தவர்கள் வெள்ளோடைச் சாத்தந்தை குலத்தினர். செங்குந்தர் மரபைச் சேர்ந்த இப் புலவர்களின் இல்லச் சடங்குகளைக் கூட முன்னின்று வெள்ளோட்டுக் கொங்கு வேளாளர்கள் நடத்திவருகின்றனர்.

இந்தப் புலவர் பரம்பரையினர் வேளாளர் இல்லத்திற்கு வந்து திருமணம் முதலிய விசேடங்களில் வாழ்த்துப் பாடுவர். பூந்துறை நாட்டு வெள்ளோட்டைச் சார்ந்த பகுதிகளில் புலவர்கள் பால் பழம் சாப்பிட்டு 5 படி தானியம் தட்சிணை பெற்று மங்கலன் கூறும் மங்கல வாழ்த்துக்குப்பின் கம்பர் வாழி 16ம் ஏரெழுபதும் படித்தனர் என்று பட்டயங்கள் கூறுகின்றன. புலவர்கள் வேளாளர் இல்லம் வந்தால் தாங்கள் உணவுண்ணும் கலத்தில் பழம் சர்க்கரையுடன் அமுது படைப்பர் என்று பழம்பாடல் ஒன்று கூறுகிறது.

'பட்டன் புலவன் பண்பாடி தக்கையன்
திட்டமாய்ச் சோபனம் செப்பிமுன் னேவர'

என்று மங்கல வாழ்த்தில் குறிக்கப்பட்டுள்ளது.

இப்புலவர்கள் செங்குந்தர், சேரர், திருமுடியர், சோழியர் கூட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

'மணமுடனே நன்றாக வாழ்த்தும் புலவோர்க்குப்
பணமுடனே நன்றாகப் பால்வைத்துக் - குணமுடனே
சிங்கார மாகக் கலியாணம் செய்தார்கள்
மங்காமல் நீடூழி வாழி'

என்றும்,

'பாடுபுலவோர் வாழி'

என்றும் கம்பர் வாழி பதினாறும் கூறுகிறது.

இப் புலவர் பரம்பரையில் தோன்றிப் பெரும் புலவராக வெள்ளோட்டில் வாலசுப்பப் புலவன் என்பவர் வாழ்ந்தார். தெற்கேயிருந்து வந்த ஒரு புலவருடன் ஏற்பட்ட புலமைப் போட்டியில் வெள்ளோடு வாலசுப்பப் புலவர் தோல்வி யடைந்தார். அப்போது செந்தமிழ் மங்கை என்னும் விசயமங்கலத்துச் தமிழ்ச் சங்கத்திலிருந்து வெள்ளோடு வந்த சுவாமிநாதப் புலவர் என்பவர் தெற்கத்திப் புலவரோடு வாதிட்டு வென்று வெள்ளோட்டுப் புலவரைக் காப்பாற்றி னார் என்று தனிப்பாடல் ஒன்று கூறுகிறது.

தந்திர மாய்வந்து வெள்ளோட்டில் வாலசுப் பப்புலவன்
முந்திய தோயக் குலத்தானை வெல்லென்
றெனைமொழிய
செந்தமிழ் மங்கையில் வாழ்சுவாமி நாதன்
செயித்தவனை
வந்த வழியினில் ஓட்டிய துங்கொங்கு மண்டலமே

என்பது அப் பாடலாகும். இதனால் வெள்ளோட்டில் முன்பு புலவர்கள் கூடித் தமிழ்ச் சங்கம்போல் தமிழாய்ந் துள்ளனர் என்பது பெறப்படுகிறது.

## கல்வெட்டுக்களில் வெள்ளோடு

ஈரோடு திருத்தொண்டீசுவரர் கோயிலில் உள்ள வீரவல்லாளன் கல்வெட்டில் வெள்ளோட்டில் பூந்துறை நாட்டுச் சபை 14ஆம் நூற்றாண்டில் கூடியது குறிக்கப்படு கின்றது. பெருமாள் கோயிலில் வீரசிக்கராயன் கல்வெட்டில் வெள்ளோடு குறிக்கப்பெறுகிறது. வெள்ளிரவெளிக் கல் வெட்டில் வெள்ளோடு சிறப்பிடம் பெறுகிறது. முருங்கைப் பெருந்தொழு பாண்டியர் கல்வெட்டுக்களில் 'வெள்ளோட்டு வழி' குறிக்கப்பெறுகிறது. பல்வேறு செப்பேடு, ஓலைப் பட்டயங்களிலும் வெள்ளோடு சிறப்பாகக் கூறப்படுகிறது.

காலிங்கராயன் காலத்துக்குப்பின் வெள்ளோடு கொங்கு நாட்டு வரலாற்றில் மிகவும் சிறப்பிடம் பெற்று விளங்கி வந்துள்ளது.

## வெள்ளோட்டில் கலைகள்

வெள்ளோட்டுக் கோயில் சிற்பங்களில் பல ஆடல் மகளிரைக் காணுகின்றோம். பல்வேறு இசைக் கருவிகளின் சிற்பங்களும் செதுக்கப்பட்டுள்ளன. புலவர்கள் பாடும் வாசல் சிறப்பில் ஆடல் பாடல் கலைகள் மிகவும் புகழ்ந்து கூறப்படுகின்றன.

அரம்பை மேனகை அணிகொள் திலோத்தமை
திட்டமாய்ச் சோபனம் செப்பிமுன் னேவர
வண்மைசேர் கூத்தி வகைபெற நின்று
நன்மைசேர் பரத நாட்டியம் ஆடிட

கொங்கு வேளாளர் திருமணங்கள் நடைபெற்றன.

பவானி சங்கமேசுவரர் காதல் என்னும் நூல் வெள்ளோட்டில் 'மோகனத்தி' 'பாடகத்தி' என்ற நாட்டியம் வல்ல மகளிர் இருந்ததாகக் கூறுகிறது.

## இருபெரும் பிரிவுகள்

நிருவாக வசதிக்காகப் பூந்துறை அவல் பூந்துறை, துய்யம் பூந்துறை என்றும், அனுமன்பள்ளி அட்டவணை, முகாசி என்றும் கத்தாங்கண்ணி சர்க்கார், அக்கிரகாரம் என்றும், அக்கிரகாரம் பெரியது, சிறியது என்றும், காள மங்கலம் நஞ்சை, புஞ்சை என்றும், பூந்துறை நாடு மேல் கரை, கீழ்கரை என்றும் பிரிக்கப்பட்டது போல வெள்ளோடும் தென்முகம் வெள்ளோடு, வடமுகம் வெள்ளோடு என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டது. தென்முகம் வெள்ளோடு, வடமுகம் வெள்ளோடு என்ற இரு பெரும் பிரிவுகள் கல்வெட்டுக்களிலும், செப்பேடுகளிலும் காணப்படும் தொன்மையான பிரிவுகளாகும். இத் தொன்மையான பிரிவுகளை அரசுத் துறைகளும் ஏற்றுக்கொண்டு பல நூற்றாண்டாக நிருவகித்து வருகின்றன. 71 ஏக்கர் பாசனம் பெறும் பெரியகுளம் தென்முகம் வெள்ளோட்டுக்குரிய தென்றும், 57 ஏக்கர் பாசனம் பெறும் சிறிய குளம் வடமுகம் வெள்ளோட்டுக்குரியதென்றும் ஒரு ஆவணம் கூறுகிறது. தென்முகம் வெள்ளோடு உலகபுரம், கனகபுரம், தேவபுரம் (தேவணம்பாளையம்) என மூன்று கரைகளாகப் பிரிக்கப் பட்டது. இன்று இம் மூன்று கரையைச் சேர்ந்த ஊர்கள் பலவாகப் பல்கிப் பெருகியுள்ளன. ஆனால் அனைவரும் தாய்க்கிராமமான தென்முகம் வெள்ளோட்டின் மண்ணின் மைந்தர்களே ஆவர்.

# வெள்ளோட்டு இலக்கியங்கள்

வெள்ளோட்டில் இன்தமிழ் இலக்கியங்கள் பல தோன்றி யுள்ளன. அவை கூறும் வரலாற்றுச் செய்திகள் சுவை நிரம்பியவை. அவைகளின் மூலம் தமிழ் வளர்ச்சிக்கு வெள்ளோடு ஆற்றிய சிறப்புப் பங்கினைக் காணலாம்.

## கொங்கு மண்டல சதகம்

கொங்கு நாட்டுக்குரிய மூன்று மண்டல சதகங்களில் வாலசுந்தரக் கவிராயர் என்பவர் பாடிய கொங்கு மண்டல சதகம் வெள்ளோட்டில் சாத்தந்தை குலத்தாரின் ஆதரவு டன் பாடப்பட்டது. வாலசுந்தரக் கவிராயருக்கு வாலசுப்பப் புலவர் என்றும் ஒரு பெயர் உண்டு. இவர் பாடிய இந்தக் கொங்கு மண்டல சதகம் கொங்கு நாட்டு வரலாற்றுக்கும் குறிப்பாகக் கொங்கு வேளாளர் வரலாற்றை எழுதவும் பல ஆதாரங்களை அளிக்கிறது. இந்நூலைத் தேடிப் பாதுகாத்து அச்சிட்டவர் எழுமாத்தூர் வேலம்பாளையம் தமிழறிஞர் வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்கள்.

'வடித்தமிழ் நூலின் ஆசான் வாலசுந் தரம்யான்
சொன்னேன்
படிக்கவே பொருட் சாத்தந்தை......................
கொடுத்திடும் இரணம் வாரிக் கொங்குசெய்
சதகம்தானே'

என்பது இச் சதகத்தின் பாயிரப் பகுதியாகும்.

## வெள்ளோட்டுக் கலம்பகம்

வெள்ளோட்டுச் சர்வலிங்கேசுவரர் கோயில் கல்வெட்டு மூலம் இந்நூலைப்பற்றி அறிகின்றோம். இந்நூலின் ஆசிரியர் அழைப்பிச்சான் என்பவர். அழைப்பிச்சான்

பாட்டுக் கலம்பகம் என்றும் இந்நூல் அழைக்கப்பட்டது. இந்நூல் இன்று கிடைக்கவில்லை.

## நல்லணவேள் காதல்

வெள்ளோடு புலவன் பாளையத்தைச் சேர்ந்த புலவர் ஒருவரால் இந்நூல் பாடப்பட்டது. வெள்ளோடு காலிங்க ராயன் வழிவந்த சாத்தந்தை குல நல்லண கவுண்டர் என்பவர் இந்நூலின் பாட்டுடைத் தலைவர். இதில் வெள்ளோடு, சாத்தந்தை குலம் பற்றிய பல வரலாற்றுச் செய்திகள் கூறப்பட்டுள்ளன. நல்லண கவுண்டரின் குடிச் சிறப்பும் செல்வச் செழிப்பும் விருந்தோம்பும் பண்பும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இந் நூல் ஏட்டுச்சுவடி வடிவில் உள்ளது.

நல்லண கவுண்டர் பழனிவேல் கவுண்டரின் மகன் என்று கூறி இராசாக்கள் தெய்வத்துக்கு வணக்கம் கூறி நூல் தொடங்குகிறது.

'பூந்துறைநா டன்கதித்த பூபன் பழனிவேல்
சாந்தமிகும் நல்லணவேள் தண்டமிழாம் காதலுக்கு
செய்யபுகழ் வெள்ளோடைத் தெய்வரா சாக்கள்குல
தெய்வம் தனைப்பணிந்து சிந்தைதனில் அன்புசெய்வாம்'

என்பது அந்நூலின் தொடக்கப் பகுதியாகும்.

## சென்னிமலையாண்டவர் பிள்ளைத்தமிழ்

குந்தாணி சாமிநாதக் கவிஞர் என்ற வெள்ளோட்டுப் புலவரால் இந்நூல் பாடப்பட்டது. குந்தாணி என்ற ஊரிலிருந்து இங்கு வந்து குடியேறியவர் சாமிநாதக் கவிஞர். இவர் நாள்தோறும் சென்னிமலையாண்டவரை வணங்கி வந்த பின்னரே உணவு உட்கொள்ளுவாராம். இந்நூலில் வெள்ளோடு, பூந்துறை நாடு பற்றிய பல செய்திகள் உள்ளன. இந்நூலின் 100 பாடல்களில் 10 பாடல்கள்

வேலம்பாளையம் வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்களால் அச்சிடப்பட்டன.

'கண்ணிற் காணப் படுவதெல்லாம்
கடவு ளேஉன்றன் தோற்றங்கள்
காதில் கேட்கப் படுவதெல்லாம்
கந்தா நின்றன் நாமங்கள்
நண்ணு நாக்கிற் படுவதெல்லாம்
நளிர்நின் பூசை வாசங்கள்'

என்பன போன்ற சுவையான பக்தி ததும்பும் பல பாடல்களை இந்நூல் பெற்றுள்ளது.

## கொன்றை வேந்தன் வெண்பா

கொன்றை வேந்தன் என்னும் நீதி இலக்கியத்தின் அடிகளை இறுதியில் வருமாறு அமைத்து முதலில் இரண்டு மூன்று அடிகளில் ஏற்ற வரலாற்றுச் செய்திகளைக் கூறிப் பாடப்பெற்றது இந்நூல். திருக்குறட் குமரேச வெண்பாப் போன்றது.

இந்நூல் வெள்ளோட்டுச் சாத்தந்தை குல முத்தித் திருமலைக் கவுண்டர் என்பவரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்டது. ஒவ்வொரு பாடலிலும் 'வெள்ளோடை முத்தித் திருமலை பூபா' என்பன போன்று இவர் முன்னிலைப்படுத்திப் பாடப்பட்டுள்ளார்.

'வாலி மடிந்ததுவும் வல்லரக்கன் மாண்டதுவும்
கோல மயிடன் குலைந்ததும்பார்—சீலமிகு
தென்னார்வெள் ளோடைத் திருமலைபூ பாமோகம்
தன்னை முனிந்து விடு'

என்பது ஒரு பாலாகும்

அமரர் ம.ப. பெரியசாமித் தூரன் அவர்கள் நடத்திய காலச் சக்கரம் என்னும் இதழில் இந்நூலின் சில பகுதிகள் வெளியிடப்பட்டன. இதன் ஏட்டைத் தேடிக் காத்து வைத்தவர் வேலம்பாளையம் வே.ரா. தெய்வசிகாமணிக்

கவுண்டர் ஆவார்கள். ஈரோடு கலைமகள் அருங்காட்சியகத்திலும் இதன் சுவடி உள்ளது.

## வெள்ளோடைக் குப்பணன் நீதிச் சதகம்

வெள்ளோட்டில் வாழ்ந்த பயிரகுலக் குப்பண கவுண்டர் மீது நூறு பாடல்களைக் கொண்டு பாடப்பட்ட சதகம் இந்நூல். ஒவ்வொரு பாடலின் ஈற்றடியிலும் 'வெள்ளோடையிற் குப்பணனே' என்ற மகுடத்தைக் காணுகின்றோம். அழகிய கருத்துக்களைத் தொகுத்துள்ள நீதிக் கருத்துக்களைப் பாடலில் நாம் காணலாம். கட்டளைக் கலித்துறை யாப்பில் எல்லாப் பாடல்களும் அமைந்துள்ளன.

பூவுக் கழகுசெந் தாமரைப் புட்பம் புகழ்ந்துரைக்கும்
நாவுக் கழகு பழுதுரை யாமைநன் னாவலர்சொல்
பாவுக் கழகு நினைப்பாடல் வாழும் பயிரகுலக்
கோவுக் கழகு நீயேவெள் ளோடையிற் குப்பணனே.

இந்நூலின் பாடல்கள் கொடுமணல் இலக்கியத்தில் இந்நூலாசிரியரால் அச்சிடப்பெற்றுள்ளன. ஏடுகளை அளித்தவர் தம்பிராட்டிபாளையம் நாச்சிமுத்துப் புலவர் ஆவார்.

## பாடகவல்லியம்மன் பிள்ளைத்தமிழ்

வெள்ளோடு சர்வலிங்கேசுவரன் கோயில் இறைவி பாடகவல்லி மீது பாடப்பட்ட பிள்ளைத்தமிழ். இந்நூலைப் பற்றித் திருச்செங்கோடு தி.அ. முத்துசாமிக் கோனார் அவர்களும், வேலம்பாளையம் வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்களும் தம் நூல்களில் குறிப்பிடுகின்றனர். ஆனால் இந்நூலின் ஏட்டுப் பிரதி இதுவரை கிடைக்கவில்லை.

## வெள்ளோடு பாடகவல்லியம்மன் பதிகம்

பத்துப் பாடல் கொண்டது பதிகம் எனப்படும். அவ்வமைப்பில் வெள்ளோடு சர்வலிங்கேசுவரர் கோயில் இறைவி பாடகவல்லி மீது பாடப்பட்ட பதிகம் இந்நூலாகும். இதன் ஏட்டுப் பிரதியைத் தேடிக் கண்டு பிடித்தவர் கோபி கலைக் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் க. அரங்கசாமி அவர்கள். இப்பதிகம் இன்னும் அச்சேறவில்லை.

## இராசாக்கள் அம்மானை

சாத்தந்தை குலத்தாரின் குலதெய்வமாகிய அருள்மிகு இராசாக்கள் வரலாறு பற்றியது. வேளாளர்களின் வேளாண்மையை அழித்துக் கால்நடைகளைக் கவர்ந்து சென்ற பகைவர்களை வென்று குடிமக்களைக் காத்து விழுப்புண் பெற்று வீரமரணம் எய்திய இராசாக்கள், அவர் தம் உறவினர், துணைவர், படைகள் பற்றிய பல செய்திகளைக் கூறும் நூல். எழுமாத்தூர் வேலம்பாளையம் வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் தொகுப்பில் காணப்பட்டது இந்த ஏடு. இன்னும் அச்சாகவில்லை.

## தனிப்பாடல்கள்

வெள்ளோடு, சாத்தந்தை குலம், காலிங்கராயன் பற்றிய தனிப்பாடல்கள் பல கிடைத்துள்ளன. அவை ஆங்காங்கு இந்நூலின் இடையிடையே காட்டப் பெற்றுள்ளன.

வெள்ளோடு கனகபுரம் சாத்தந்தை குலத்துப் பழனி வேலப்ப கவுண்டர் மகன் குழந்தை வேலப்பக் கவுண்டர் கிழக்கிந்தியக் கம்பெனியார் நாளில் இப்பகுதியில் சிறந்த திருவாகியாகத் திகழ்ந்தவர். கோயில் பல கட்டியவர். கவுண்டச்சிபாளையம் பாலமடை அம்மன் கோயில் திருப்பணி செய்தவர். அவரைப் பற்றிக் கிடைத்துள்ள தனிப்பாடல்களில் ஒன்று அவருடைய விடாமுயற்சியை விளக்குகிறது.

'எடுத்தால் விடார்பின்பு இரவலர்க் கீந்ததற் கீன்றினும்
தடுத்தாலும் பின்பு தவிரார் வெள்ளோடைச்
சாத்தந்தைவேள்
அடுத்தால் பழனிவேல்சொல் குழந்தைவேல்
அப்பன்எனும்
தொடுத்தால் தொடுத்த படியே முடிப்பார் துசங்கட்டியே

என்பது அவரைப் பற்றிய ஒரு பாடலாகும். இவர் தம்மைக் காலிங்கராயன் வழியினர் என்று கூறிக் கொள்ளுவதில் பெரு மகிழ்ச்சியுற்றவர்.

## கல்வெட்டிலே கவிதை

கல்வெட்டுக்களில் கொடைச் செய்திகளையே பெரும் பாலும் உரைநடை வடிவில் காணுகின்றோம். சில கொடைச் செய்திகள் மட்டும் அரிதாகக் கவிதை வடிவில் வெட்டப் பெற்றிருக்கும்.

வெள்ளோடு சர்வலிங்கேசுவரர் கோயிலில் வழக்கமான கொடைச் செய்திகள் கூறப்பெறாமல் அகப்பொருள் நயம் வாய்ந்த வெண்பா ஒன்று கல்வெட்டாக வெட்டப்பெற் றிருப்பது மிகவும் அரிய செய்தியாகும். சிறப்புமிகு அக் கல்வெட்டு ஒரு துண்டுக்கல்லில் வெட்டப்பெற்றுத் தெற்குச் சுவரில் பதிக்கப்பெற்றுள்ளது. கல்வெட்டில் இவ்வாறு எட்டு வரிகளாக வெட்டப்பட்டுள்ளது.

1. காபபை இடுநுதலி
2. காமவெள வாராமல
3. காபபை மிகததெடு
4. ம தையலீா கொப
5. பன தருமருதன வெ
6. ளொடைத தான
7. புரனூ ரில வருமி
8. ரவு நெரெ மதி

இக்கல்வெட்டைப் பின்வருமாறு அழகிய வெண்பாவாக எழுதலாம். கோப்பன் என்பவர் மகன் மருதன் என்பவரைப் பாட்டுடைத் தலைவராக இக்கவிதை கொண்டுள்ளது.

'காப்பை இடுநுதலி காமவேள் வாராமல்
காப்பை மிகத்தேடும் தையலீர்—கோப்பன்
தருமருதன் வெள்ளோடைத் தான்புர னூரில்
வருமிரவு நேரே மதி'

காமவேளின் அம்புகட்குப் பயந்து பாதுகாப்பைத் தேடும் பெண்களே! இரவில் சந்திரன் வருகின்றானே; அப்போது உங்களுக்குக் காதல் வேட்கை மிகுமே; சந்திரனிடமிருந்து நீங்கள் எப்படிப் பாதுகாப்பைப் பெறமுடியும் என்று பாடுகிறார் புலவர்.

## வெள்ளோட்டின் புகழ் பாடும் பிற இலக்கியங்கள்

வெள்ளோட்டில் இயற்றப் பெறாமல் வேறு பிற ஊர்களில் பிறரால் பாடப்பெற்ற பல இலக்கியங்களில் வெள்ளோடு புகழப் பெறுகிறது. அவ்விலக்கியங்கள்

1. பூந்துறைப் புராணம்
2. சென்னிமலைத் தல புராணம்
3. பவானி, சங்கமேசுவரர் விறலிவிடு தூது
4. ஈரோடு ஐயனாரப்பன் பள்ளு
5. திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை
6. சென்னிமலையாண்டவர் காதல்
7. கொங்கு மண்டல சதகங்கள்
8. தட்டய நாட்டார் தெவம்

என்பனவாகும்.

# வெள்ளோட்டுக் கோயில்கள்

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது பழமொழி. வெள்ளோட்டில் பல கோயில்கள் சிறப்புடன் விளங்குகின்றன. அவை வெள்ளோட்டின் புகழுக்கும் பெருமைக்கும் காரணமாக அமைந்துள்ளன. பழமை மிகும் அக்கோயில்கள் வெள்ளோட்டின் வரலாறு, சிற்பம் பிற கலைகளைத் தாங்கிப் பல நூற்றாண்டுகளாக நின்று நிலவுகின்றன.

## சருவலிங்கேசுவரர் கோயில்

இது வெள்ளோட்டில் உள்ள சிறப்புமிகு சிவன் கோயில். சர்வலிங்கேசுவர தம்பிரானார், சருவேசுவரமுடையார், சருவேசுவரமுடைய நாயனார், சருவலிங்க தேவர் என்று சிவனும், பாடகவல்லி நாச்சியார் என்று பார்வதியும் இத்தலத்தில் அழைக்கப்படுகின்றனர். 'பத்தர் சருவீசர் பாடகித்தாய்' என்று ஒரு இலக்கியம் கூறுகிறது.

மேற்குப் பார்த்த சந்நிதியாகச் சருவலிங்கர் எழுந்தருளியுள்ளார். கோயிலின் நுழைவாயில் தெற்கு நோக்கியுள்ளது. தீபத்தம்பம் மதிலுக்கு மேற்கே உள்ளது. அழகிய சிற்பங்கள் அமைந்த திருக்கோயில் இதுவாகும்.

பாண்டியர்கள். விசயநகர மன்னர்கள், மைசூர் அரசர்கள் காலத்திலும் சாத்தந்தை பயிரன்குலத் தலைவர்களாலும் திருப்பணிகள் பல நடைபெற்றிருக்கின்றன. கொடைகளும் அளிக்கப் பெற்றிருக்கின்றன.

காலிங்கராயன் காலத்தில் அவர் இக்கோயில் திருப்பணி செய்தார் என்று காலிங்கராயன் கைபீது கூறுகிறது. அவரின் 'இஷ்ட தெய்வம்' என்று இக்கோயில் குறிக்கப்படுகிறது.

நாடுகள் பிரித்த பட்டயத்தில் பூந்துறை பாகம் பிரியா அம்மனுடன் வெள்ளோடு பாடகவல்லிக்கும் இறுதியில் வணக்கம் கூறப்பட்டுள்ளது. பாடகவல்லிமீது பிள்ளைத் தமிழ், பதிகம் முதலிய பிரபந்தங்களும், சருவலிங்கர்க்குக் கலம்பகம் போன்ற இலக்கியங்களும் இருந்தமைக்குச் சான்றுகள் உள்ளன.

வீரபாண்டியன் ஆட்சிக் காலத்தில் வெள்ளோட்டுச் சிறிய குளத்தின்கீழ் இருந்த நிலம் முழுவதும், பெரிய குளத்தின்கீழ் 4 மா நிலமும், கனகபுரம் ஏரிக்கீழ் 10 மா நிலமும், குறுக்குக் குளம் ஏரிக்கீழ் 1 மா நிலமும் வெள்ளோட்டு ஊரவர்களும் ஊர்ச்சபையாரும் சருவலிங் கருக்குக் கொடையாகக் கொடுத்தனர். சர்வலிங்கேசுவரன் கோயிலுக்குவடக்கே அருகில் உள்ள குளம் தேவதானமாகச் சருவலிங்கர்க்கு வழங்கப்பட்டிருந்தது.

விசயநகர அரசர்கள் காலத்தில் ஈரோட்டு அணைக்கீழ் உள்ள நிலம் கொடையாக அளிக்கப்பட்டது. இக்கோயி லுக்கு நந்தவனங்கள் பல இருந்தன. அவற்றில் தெங்கு, மா, இலுப்பை முதலிய பயன்மரங்களும் பயிரிடப்பட்டிருந் தன என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

கோயில் நிலத்தை உழுபவர்கள் விளைவில் மூன்றில் ஒரு பங்கு தானியம் கோயிலுக்குக் கொடுத்தனர் என்று மற்றொரு கல்வெட்டுக் கூறுகிறது.

வீர நஞ்சராயர் காலத்துக் கல்வெட்டுக்கள் இரண்டு இங்குள்ளன. சாத்தந்தை குல முதலிக் கவுண்டர் இக்கோயில் மகாமண்டபம் கட்டுகையில் பூந்துறை நாட்டுக் கணக்கு திருமலைநாதர் கோப்பணன் நான்கு தூண்கள் கொடுத்த தாகவும், ஒரு பொதி கம்பு கொடுத்ததாகவும் ஒரு கல்வெட்டுக் கூறுகிறது.

'தைப்பூச விழா நாள் ஒன்றுக்கு அமுதுபடி நாநாழி பருப்பு நாழி நெய்படி ஆறும் பழம் இருபது வெல்லம் நாலு

எண்ணெய் படி மூன்று மிளகு படி அரை உப்பு படி இரண்டு தேங்காய் ஆறு இளநீர் பத்து பாக்கு நூறு வெற்றிலை இருநூறு மஞ்சள் பலம் பதினொன்று சந்தனம் கற்பூரம் பலம் இருபத்துநாலு' வழிபாட்டுக்கு அளிக்கப்பட்டதை ஒரு கல்வெட்டு விரிவாகக் கூறுகிறது.

11 நாள் திருவிழா சருவலிங்கர் கோயிலில் நடத்தப் பட்டதாக மற்றொரு கல்வெட்டுக் கூறுகிறது. 'நாயகர் நாச்சியார்க்குப் பரிவட்டத்துக்கு இருபது பணம் அமுதுபடி நாற்பத்தெட்டு நாழி பருப்பு பதினொரு நாழி நெய் பதினாறு நாழி தேங்காய் இளநீர் நூற்று எழுபத்து ஆறு மிளகு பலம் ஆறு நல்லெண்ணெய் எட்டு நாழி வெண்ணெய் நூற்றெழுபத்தாறு நாழி பரிமளம்......' ஆகியன அப்பதி னொரு நாள் விழாவுக்கு அளிக்கப்பட்டனவாம்.

இக்கல்வெட்டில் பூந்துறை நாட்டு 32 ஊரவர்களும் கையெழுத்திட்டிருக்கின்றனர்.

'இப்படிக்கு பூந்துறையில் மேலைச் சாகாடைகளில் அப்பியான் எழுத்து வெள்ளோட்டு சாத்தந்தைகளில் கனகபுர வெள்ளாளன் பெரியணன் எழுத்து இப்படிக்கு வெள்ளோட்டு வெள்ளாளன் பயிறகளில் பிள்ளை யாண்டான் எழுத்து இப்படிக்கு நசையனூரில் வெள்ளாளன் கண்ணர்களில் அழைப்பிச்சான் எழுத்து ஈரோட்டில் செட்டி சமயமந்திரி எழுத்து இப்படிக்கு சாத்தனூரில் வெள்ளாளன் வண்ணக்கரில் சிவமாலை எழுத்து இப்படிக்கு காளமங் கலத்து வெள்ளாளன் கண்ணர்களில் தேவணன் எழுத்து இப்படிக்கு பிடாரியூரில் வெள்ளாளன் பிரளந்தைகளில் உலகு டையார் எழுத்து பெருந்துறையில் வெள்ளாளன் எருமைக ளில் உலகுடையார் எழுத்து இப்படிக்கு எழுமாத்தூரில் வெள்ளாளன் பனங்காடர்களில் பெரியண்ண காகுத்தர் எழுத்து இப்படிக்கு இலவமலையில் வெள்ளாளன் சாத்தந் தைகளில் சடையர் எழுத்து இப்படிக்கு மங்கலத்து வெள்ளாளன் பில்லர்களில் சூரிய தேவன் எழுத்து இப்படிக்கு

முடக்குறிச்சியில் வெள்ளாளன் தூறர்களில் ஆவுடையார் எழுத்து இப்படிக்கு அனுமன் பள்ளியில்......இப்படிக்கு குழாநிலையில் வெள்ளாளன் கண்ணர்களில் செம்பியன் எழுத்து இப்படிக்கு கிழாம்பாடியில் வெள்ளாளன் கண்ணர் களில் சின்னப்பன் எழுத்து இப்படிக்கு அறைக்சலூரில் குன்றி யிடுவார் எழுத்து இப்படிக்கு பழமங்கலத்து வெள்ளாளன் ஆடர்களில் நல்ல பெருமாள் எழுத்து இப்படிக்கு குழாநிலை யில்......ண்ண வேட்டுவன் எழுத்து நசையனூரில் வெள்ளாளன் செல்லர்களில் பச்சையப்பன் எழுத்து இப்படிக்கு குலவிளக்கில் பாண்டிய வேட்டுவரில் வீரன் புலிக்குத்தி தேவன் எழுத்து இப்படிக்கு அவிரியூரில்...... நல்லர் எழுத்து இப்படிக்கு பாரியூரில் சேர்ந்த செட்டி கணக்கன் எழுத்து இப்படிக்கு ஈஞ்சன்பள்ளியில் வெள்ளாளன் ஈகுத்தகளில் கண்ணப்பன் எழுத்து......இப்படிக்கு முப்பத் திரண்டு ஊரவர் சொற்படிக்கும் கையெழுத்துப்படிக்கும் இந்த தம்ம சாதனம் எழுதினேன் பூந்துறை நாட்டு வெள்ளோட்டுத் தருளக்கினியரில் வைசிய கோத்திரத்தில் நாட்டுக்கணக்கு திருமலை நாதர் கோப்பணன் எழுத்து'

என்பது கல்வெட்டில் கண்ட பூந்துறை நாட்டுச் சபை பற்றிய கல்வெட்டாகும். இதில் வேளாளரும், வேட்டுவரும், வணிகரும் அங்கம் வகித்தமையும், பூந்துறை நாட்டார் அல்லாதவர்களும் (அவிரியூர், பாரியூர்) கையெழுத்திட்டுள் ளமையும் அறிகின்றோம்

சர்வலிங்கர் கோயில் தெற்கு வாயில் முன்மண்டபம் சாதாரண ஆண்டு ஐப்பசி மாதம் 25ஆம் தேதி வெள்ளோடு பயிர குலத்துச் செம்மல் பழனிக் கவுண்டர் மகன் பெரிய சரவணக் கவுண்டர் கட்டினார் என்பது அம்மண்டப விதானத்தில் உள்ள கல்வெட்டு மூலம் தெரியவருகிறது.

### நஞ்சுண்ட ஈசுவரர் கோயில்

வெள்ளோட்டில் இப்பெயரில் ஒரு சிவன் கோயில் இருப்பது பலருக்குத் தெரியாது. மிகச்சிறந்த முறையில்

பூந்துறை நாட்டு ஊர்க்கோயில்களைப் பட்டியல் இட்டுத் தொகுத்த திருச்செங்கோடு தி. அ. முத்துசாமிக் கோனார் அவர்களே இக்கோயில் பெயரை விட்டுவிட்டார்.

வெள்ளோட்டின் மேற்கே ஆலமரம் என்று வழங்கும் பகுதியில் பெருமாள் கோயிலுக்கு வடகிழக்கே சுமார் 100 மீட்டர் தூரத்தில் கிழக்கு நோக்கிய நிலையில் இக்கோயில் உள்ளது. சிறிய சிவன் கோயில். சுற்று மதிள் அழிந்து விட்டது. எதிரில் அழகிய பெரிய நந்தி உள்ளது. கருவறை மட்டும் நல்ல நிலையில் உள்ளது. உள்ளே சதுரவடிவமான உயர்ந்த ஆவுடையார் மட்டும் உள்ளது. அதன்மீது மையத்தில் சிறுநந்தி வைக்கப்பட்டுள்ளது.

கருநாடக மாநிலத்தில் இவ்வமைப்பில் பல கோயில்கள் காணப்படுகின்றன. வீரசைவத் தாக்கத்தால் வெள்ளோட்டில் இக்கோயில் தோன்றியிருக்கவேண்டும். 'வாய்மொழித் தீர்ப்பு' எனப்படும் தொன்மையான காகிதப் பட்டயத்தில் இக்கோயில் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. 'நஞ்சுண்ட சாமி' என்று அப்பட்டயம் குறிக்கும் இறைவன் இக்கோயிலுக்குரிய சிவபெருமானாகும்.

வெள்ளோடு சாத்தந்தை குலத்தினர் நஞ்சையன், நஞ்சப்ப கவுண்டர் என்று பெயர் வைத்துக் கொள்ளுவது இக்கோயிலின் தாக்கமாக இருக்கலாம்.

ஆவுடையான், சிவமாலை, காசிலிங்கம், வாரணவாசி, சரவணன் என்று இப்பகுதி மக்கள் பெயர்கள் வைத்துக் கொள்ளுவது இவர்களின் சைவப் பற்றைக் காட்டும்.

## ஆதிநாராயணப் பெருமாள் கோயில்

பூந்துறை நாட்டுத் தலைமைசான்ற ஊர்களில் சிவன் கோயில்கள் போலவே திருமால் உறையும் பெருமாள் கோயில்களும் சிறப்புடன் திகழுகின்றன. ஈரோட்டுக்கு வடக்கே மங்கலம் கிராமத்தில் பெருமாள் மலையே உள்ளது.

வெள்ளோட்டின் மேற்குப் பகுதியில் கொங்கு நாட்டின் பெரும்பகுதியான ஊர்களைப் போலவே பெருமாள் கோயில் உள்ளது. அதனால் கொங்கு நாட்டில் பெருமாள் கோயில்களைத் 'திருமேற்கோயில்' 'மேலைத்திருப்பதி' என்றெல்லாம் அழைப்பர்.

வெள்ளோட்டில் ஆதிநாராயணப் பெருமாள் பூதேவி சிதேவியுடன் எழுந்தருளியுள்ளார். இக்கோயிலில் 'மடிமேல் வல்லித் தாயார்' என்று அழைக்கப்படும் இலட்சுமி நாராயணப் பெருமாளுக்கும் தனிச்சந்நிதி உள்ளது. அழகான சிற்பங்கள் பல உள்ளன.

கோயிலுக்கு வெளியே தீபத்தம்பத்தில் மிகவும் அழகிய வேலைப்பாடுகளுடன் சங்கு சக்கரங்கள் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளன.

வெள்ளோட்டில் பல கோயில்களில் கருப்பண்ண சுவாமியைக் காவல் தெய்வமாக எழுந்தருளச் செய்திருப்பது வைணவத்தைப் போற்றுதலுக்கு எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம்.

வெள்ளோட்டுச் சாத்தந்தை குலத்தினர் கிஷ்ட்டண ராயக் கவுண்டர், கருப்ப கவுண்டர், கருப்பராயக் கவுண்டர், திருமலைக் கவுண்டர் என்று பெயர் வைத்துக் கொள்வதும், தங்களின் அம்மன் கோயில் திருப்பணிக் கல்வெட்டின் தொடக்கத்தில் 'ராமஜெயம்' என்று வெட்டி இருப்பதும், இராசாக்கோயில் தூண் சிற்பங்களில் பல வைணவத் தொடர்பான சிற்பங்கள் காணப்படுவதும் வெள்ளோட்டு மக்களின் சமரச மனப்பான்மைக்கும் வைணவப் பற்றுக்கும் எடுத்துக் காட்டாகும். காகுத்தன், சடையர் என்ற பெயர்களை இப்பகுதி மக்கள் வைத்துக்கொள்வதும் வைணவப் பற்றுக்கு எடுத்துக் காட்டாகும்.

புதுமண மக்களைப் பெருமாள் கோயிலுக்கு அழைத்துச் செல்வர். புரட்டாசி மாதம் சனிக்கிழமைகளில் தவறாமல் பெருமாள் கோயிலுக்குச் சென்று வழிபடுவர்.

## அண்ணன்மார் கோயில்

கொங்கு வேளாளரில் பெருங்குடியர் கூட்டம் என்பது மிகவும் இன்றியமையாத தொன்மைசேர் சிறப்பு வாய்ந்த கூட்டங்களில் ஒன்று. அக்கூட்டம் வரகு தின்னாப் பெருங்குடியர் கூட்டம் என்றும் அழைக்கப் பெறும்.

பெருங்குடியர் குல வாங்கலான் என்பவரின் மகனாகப் பிறந்த குன்றுடையான் என்பவருக்கும் தாமரை நாச்சியாருக்கும் மக்களாகப் பிறந்தவர்கள் பொன்னர், சங்கர் என்ற ஆண்மக்கள் இருவரும் அருக்காணி என்ற பெண் மகள் ஒருவரும் ஆவர். பொன்னரும் சங்கரும் முறையே பெரிய அண்ணன், சிறிய அண்ணன் என்றும் இருவரும் பொதுவாக அண்ணன்மார் என்றும் அழைக்கப்பெறுவர். அருக்காணி நல்லதங்கம், தங்காயி என்றும் அழைக்கப் பெறுவர்.

கொங்கு நாட்டில் காடுகளை நம்பி வேட்டையாடி வாழ்ந்த சமூகம் வேட்டுவர் சமூகம். ஆற்றங்கரை வழியாகக் காடுகளை அழித்து நாடாக்கி வேளாண்மையைப் பெருக்கிய சமூகம் வேளாளர் சமூகம். இம்முயற்சியில் இரண்டு சமுகத்திவருக்கும் போர் ஏற்பட்டு, பெரும்போர் புரிந்து வீரமரணம் எய்திய கொங்குச் சமுதாயப் பெருவீரர்கள் தான் அண்ணன்மார்.

கொங்கு வேளாளர்கள் முதலில் வீரமலைச் சார்பிலும், பின் கொங்கு நாடெங்கும் அண்ணன்மாருக்கு ஆங்காங்கு பல ஊர்களில் கோயில்கள் கட்டினர். கொங்கு வேளாளர்களில் பல குலத்தார்கள் அண்ணன்மாரைத் தங்கள் வழிபடு தெய்வமாகக் கும்பிட்டு வணங்கி நல்வாழ்வு பெற்று வருகின்றனர். இராசாவைப் போலவே கொங்குக் குலாலரில் சிலநாட்டாரும் அண்ணன்மாரை வழிபடு தெய்வமாகக் கொண்டுள்ளனர்.

ஆண்கள் பெரியண்ணன், சின்னண்ணன் என்று பெயர் வைத்துக் கொள்வதும், பெண்கள் அருக்காணி, தங்காயி

என்று பெயர் வைத்துக் கொள்வதும்; இக்கோயில்மீது கொண்ட பக்தியினால்தான்.

போரிட்ட வேட்டுவர்—வேளாளர் சமூகத்தினர் பின்னர் தங்களுக்குள் சமரசத்தை ஏற்படுத்திக் கொண்டனர். வேட்டுவர் காணிகள் பல வேளாளர்கட்கு மாற்றப்பட்டன. இதனை 'வேட்டுவர் பூர்வ பட்டயங்கள்' விரிவாகக் கூறு கின்றன. இப்போருக்குப் பின்னர் நாடு, ஊர்ச்சபைகளில் வேட்டுவர், வேளாளர் இருவரும் அங்கம் வகித்திருக் கின்றனர். இரு சமூகத்தார்களும் இணைந்து அறக்கொடை கள் பலவற்றைக் கொடுத்திருக்கின்றனர்.

வேட்டுவச்சமூகத்தாரின் கோயில்களில் வேளாளத் தலைவர்களின் உருவச் சிலைகளை வணங்கியதுடன் கருங்கல்பட்டி, முறங்கம், கஸ்பா பேட்டை ஆகிய இடங் களில் அண்ணன்மார் கோயிலுக்கு வேட்டுவச் சமூகத்தார் பூசாரிகளாகவும் வணங்கும் அரிய நிகழ்ச்சியைக் கொங்கு நாட்டில் காணுகின்றோம். கொங்கு வேளாளர்களின் பட்டக்காரர்கள்போல் வேட்டுவச் சமூகத்தாருக்கும் பல பட்டக்காரர்கள் சிறப்புடன் கொங்கு நாடெங்கும் வாழ்ந்து வருகின்றனர். திங்களூர் அப்பிச்சிமார் மடம் போன்ற இடங்களில் வீர மரணம் எய்திய வேட்டுவ குலப் பெரியார் களையும் வீரமரணம் எய்திய வேட்டுவ குல மகளிரையும் கொங்கு வேளாளர்களும் வணங்குகின்றனர். கொங்கு நாடு தவிர வேறு எங்கும் இந்த ஒருமைப்பாடான நிகழ்ச்சி நடக்காது.

வெள்ளோடு அண்ணன்மார் கோயிலுக்கு பயிரன் குலத்தாரும், வடமுகம் கிராமத்தைச் சேர்ந்த சாத்தந்தை குலத்தாரும் காணியாளர்களாகத் திகழ்ந்து வருகின்றனர். நீண்ட வரலாற்றுச் சிறப்பும், நெடிய பாரம்பரியமும் தொன்மையும் உடையது பயிரகுலம். இலக்கியப் பெருமை உடையது பயிரகுலம்.

வல்லிபுரம், பூளைமேடு, புத்தூர் புதுப்பாளையம், கொம்மக்கோயில், புங்கம்பாடி ஆகிய ஊர்களைச் சேர்ந்த பயிரன், சாத்தந்தை குலத்தாரும் வெள்ளோட்டில் வாழும் பயிரன் குலத்தாரும் வெள்ளோடு அண்ணன்மாரை வழிபடு கடவுளாக வழிபட்டு வருகின்றனர்.

இராசாக் கோயிலைப் போலவே மூன்று கருவறைகள் மூலக் கோயிலில் உள்ளன. தங்காயி, தோழி, மாயவர், கன்னிமார் ஆகியோர் முதல் கருவறையிலும், பொன்னர், சங்கர், குன்றுடையான் ஆகியோர் இரண்டாம் கருவறையிலும், பெரியக்காண்டியம்மன், தாமரைநாச்சி, வெள்ளைப் பிள்ளையார் ஆகியோர் மூன்றாம் கருவறையிலும் எழுந்தருளி அருள்புரிகின்றனர்.

கோயில் முன்னும், மண்டபத்திலும் யானை, குதிரை, காட்டுப்பன்றி, நாய் சிற்பங்கள் வரலாற்று நிகழ்ச்சியை விளக்கும் சிற்பங்களாகத் திகழுகின்றன.

வெள்ளோடு அண்ணன்மார் கோயிலுக்குச் சேலம் மாவட்டம் திருச்செங்கோடு வட்டம் மாதுபட்டி, குட்டி மேக்கிபட்டி, புள்ளிபாளையம் காணியாளர்களாகிய வேட்டுவக் கவுண்டர்கள் குதிரைகள் செய்தளித்துள்ளனர். அவை கோயிலுக்கு வெளியே அமைக்கப்பட்டுள்ளன.

இக்கோயிலுக்கு உப்பிலிய நாயக்கர்கள் பூசாரிகளாக இருந்து பூசை செய்கின்றனர். செவ்வருங்காடு பூசாரி ராமநாயக்கர் தூரி ஒன்றைக் கொடையாக அளித்துள்ளார். சர்வசித்தி ஆண்டு ஐப்பசி மாதம் 8ஆம் தேதி குலவிளக்குக் குச் சேர்ந்த பாண்டி பாளையத்திலிருக்கும் கறுப்ப கவுண்டர், பெரிய கவுண்டர் குப்பக்கவுண்டர், செங்கோட கவுண்டர் ஆகிய நால்வரும் மற்றொரு தூரியை உபயமாகக் கொடுத்துள்ளனர். இரு தூரிகளிலும் இதைக் குறிக்கும் கல்வெட்டுக்கள் உள்ளன.

இக்கோயிலுக்குரிய காவல் தெய்வம் கருப்பணசாமி கோயில் கோயிலுக்கு வெளியே தென்கிழக்குப் பக்கம் சற்றுத்

தொலைவில் அமைக்கப்பட்டுள்ளது. மற்ற இடங்களில் துடும்பு அல்லது மத்தளம் அடிக்கும் நிலையில் உள்ள வீரசாம்புவன் சிற்பம் இங்கே அமர்ந்த நிலையில் தவம் செய்வது போல் அமைக்கப்பட்டுள்ளது.

## பொன்காளியம்மன் கோயில்

வெள்ளோட்டுக்கு வடக்கே வடக்கு நோக்கி அமைந்துள்ள கோயில். வடமுகம், தென்முகம் வெள்ளோட்டுக்குப் பொதுவாக அமைந்த இக்கோயில் திருப்பணிகள் பல செய்யப்பட்டு 14-9-1972இல் குடமுழுக்கு விழா நடத்தப் பட்டது. கோயிலில் அமைக்கப்பட்டுள்ள மண்டபத்தில் உள்ள கல்வெட்டு மூலம் விய வருசம் சித்திரை மாதம் முதல் தேதி சாத்தந்தை குல ராக்கியாக் கவுண்டர் மக்கள் மாரப்ப கவுண்டர் முத்துக்கவுண்டர் ஆகியோர் திருப்பணி செய்த விபரம் கூறப்படுகிறது.

வெள்ளோட்டு வரலாற்று ஆவணம் ஒன்றில் பொய்ங்காளிக் கவுண்டர் என்ற பெயரைக் காணுகின்றோம். அதனால் இக்கோயிலின் பெயரையும் மக்கள் வைத்துக் கொள்ளும் வழக்கம் இருந்துள்ளமை தெரிகிறது. காளியப்ப கவுண்டர் என்ற பெயரையும் காணுகின்றோம்.

பொன்காளியம்மன் புகழ்ந்து திருக்கரத்தால் சிங்காரமாய்ப் பிடித்துச் சேர்ந்து விளையாடுவதற்கு நாகணம்புள் கோகுலம் நல்வசனம் பேசும் கிள்ளை இவைகளை அளிப்பதாக நல்லணவேள் காதல் கூறுகிறது.

## ஆயி அம்மன் கோயில்

பொன்காளி அம்மன் கோயில் அருகில் வடக்கு நோக்கி இக்கோயில் அமைந்துள்ளது. அழகிய பல சிற்பங்கள் கோயில் புறச்சுவர்களில் உள்ளன. இவ்வம்மன் பெயரைத் தாங்கி ஆயி அப்பக் கவுண்டர், ஆயின கவுண்டர் என மக்கள் பெயர் வைத்துக் கொள்ளும் வழக்கம் முன்பு இருந்துள்ளது.

## மாரியம்மன் கோயில்

அறச்சலூர், சென்னிமலை சாலைகள் சந்திக்கும் இடத்தில் கிழக்கு நோக்கி இக்கோயில் உள்ளது. இக்கோயில் நாடார் சமூகத்துக்கு உரியது. சிருவங்காட்டு வலசு செல்ல மூப்பன் மகன் நாச்சிமூப்பன் தூரி மாரியம்மனுக்கு உபயம் என்ற கல்வெட்டைத் தூரியின் மேற்குப் பக்கம் காணுகின்றோம். முன் மண்டபத்தில் உள்ள சிற்பங்கள் அச்சமூகத் தலைவர்களாக இருக்க வேண்டும். வெள்ளோட்டு வாய்மொழித் தீர்ப்பில் வேறு சில கோயில்களிலும் நாடார்களுக்கு வழிபாட்டு உரிமைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் பிற கோயில்களில் தீபத்தம்பத்துக்கு விளக்கேற்றும் உரிமை அவர்கள் வசமே உள்ளது என்பர்.

## மாகாளியம்மன் கோயில்

மாரியம்மன் கோயிலுக்கு மேற்கே வடக்கு நோக்கி மாகாளியம்மன் கோயில் உள்ளது. ஆசாரி, முதலியார், பண்டாரம் ஆகியோருக்கு உரிய கோயில்.

## சுப்பிரமணியர் கோயில்

பண்டாரங்கட்கு உரிய சுப்பிரமணியர் கோயில் தனியாக உள்ளது.

## சமணக்கோயில்

ஊருக்கு வடக்கே தெற்கு நோக்கிச் சமண சமயக் கோயிலான ரிசபதேவர் அல்லது ஆதிநாதரின் கோயில் உள்ளது. திகம்பர சமணம் சார்ந்தது இக்கோயில். இன்று சமணர்கள் யாரும் வெள்ளோட்டில் இல்லை. பூந்துறைச் சமணக் குடும்பம் இக்கோயிலுக்குரிய பூசையை முன்பு செய்தது. இப்போது பூசை இல்லை. இப்பகுதி மக்கள் அமணீசுவரர் என்று இக்கோயிலை அழைக்கின்றனர்.

வேறு சில குறிப்புக்கள் மூலம் அயத்தாள் அம்மன் கோயில், அத்தனூரம்மன் கோயில் ஆகியனவும் வெள்ளோட்டில் இருந்தனவாக அறிகின்றோம்,

# சாத்தந்தை குலம்

கொங்கு வேளாளர் குலங்களில் தொன்மையும் புகழும் பீடும் பெருமையும் மிக்க குலங்களில் சாத்தந்தை குலமும் ஒன்றாகும்.

'மங்கைமணி சாத்தந்தை'
'கனிவு சாத்தந்தை'
'தாட்டிகன் சாத்தந்தை'
'தென்னர் சாத்தந்தை'
'பாவலர்சொற் பாடல் படைத்த சாத்தந்தை'
'வாய்த்த சாத்தந்தை'
'புகழ்செய் சாத்தந்தை'
'அதிபர் சாத்தந்தை'
'பொருந்து சாத்தந்தை'
'வல்லமைசேர் சாத்தந்தை'

என இலக்கியங்கள் போற்றிப் புகழும் தன்மையுடையது சாத்தந்தை குலம்.

தொல்காப்பியம் எழுத்ததிகாரம் 347 ஆம் நூற்பாவின் படி 'சாத்தந்தை' என்பது சாத்தன் + தந்தை என இரண்டு சொற்கள் சேர்ந்த ஒரு தொடராகும். புகழ்மிகு சாத்தன் என்பவனின் தந்தையைக் குல முன்னவராகவும் முதல்வராகவும் கொண்ட குலத்தினர் என்று இது விரியும்.

சாத்தன் என்பது தமிழில் மிகவும் சிறப்பு மிக்க ஒரு பெயராகும். சமண சமயத்து அருகப் பெருமானுக்கும் புத்தருக்கும்கூடச் சாத்தன் என்று பெயர் உண்டு. சாத்தன் என்றும் மாசாத்தன் என்றும் சங்க காலத்தில் புலவர்களும் புரவலர்களும் தம் பெயர்களைத் தரித்துக் கொண்டனர். சீத்தலைச் சாத்தனார், பெருந்தலைச் சாத்தனார், கருவூர்க்

கதப்பிள்ளைச் சாத்தனார், பூதஞ்சாத்தனார், உறையூர் முதுகண்ணன் சாத்தனார், ஆமூர்ச்சாத்தனார், ஆலம்பேரி சாத்தனார், சேரன் அந்துவஞ் சாத்தன், பாண்டியன் கீரஞ் சாத்தன், ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன், மாசாத்தனார் என்பன ஆண்பாற் பெயர்கள். பெண்பாற் பெயர் சாத்தி என்பது.

பொதுவாக எவரையேனும் சுட்டி அழைக்க இடுகுறிப் பெயர்போலச் சாத்தன் என்ற பெயரையே பயன்படுத்தினர். உரைகாரர் பலரும் சகர ஆகாரப் பெயருக்குச் சாத்தன் என்பதனையே எடுத்துக் காட்டியுள்ளனர். சாத்தனூர் என்ற பெயரைத் தமிழகம் முழுவதும் பரவலாகக் காணு கின்றோம். சிலரால் சாத்தந்தை குலத்தாரின் காணியூர் என்று கூறப்படும் குளித்தலைப் பகுதி நங்கவரத்தின் பழைய பெயர் சாத்தனூர் என்பதாகும். 'மகா காளாபிடாரி சாத்தனூர் நங்கை' என்பது சாத்தாயி அம்மன் கோயில் கல்வெட்டுத் தொடராகும். அந்நங்கை பெயராலேயே அவ்வூர் நங்கைபுரம் நங்கவரம் என்று அழைக்கப்படுகிறது.

திருவாளர்கள் வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர், கே.சி. சுப்பையா, டி.எம். காளியப்பா, கு. சேதுராமன் போன்றவர்கள் சாத்தன்+தந்தை=சாத்தந்தை என ஆன தொல்காப்பிய இலக்கண விதியை ஏற்றுக் கொள்கின்றனர். இதுபோன்ற இலக்கண விதி பெற்று அமைந்த கூட்ட பெயர் களாகக் கண்ணந்தை, கொற்றந்தை, பூச்சந்தை, பொருளந்தை, ஆந்தை, குமரந்தை, சேந்தந்தை போன்ற குலங்களை எடுத்துக் காட்டலாம்.

புலவர் அ.மு. குழந்தை அவர்கள் சாத்தந்தை என்ற தொடரைச் சாத்தன்+தந்தை என்று பிரிக்காமல் தை விகுதி பெற்ற இயல்பான பெயர்ச் சொல்லாகக் கொள்ளுகிறார். மடந்தை, இளந்தை, வடந்தை, குழந்தை என்பன போலவே சாத்தந்தை என்பது ஒரே சொல் என்று கூறிச் சாத்தன்+ தை=சாத்தந்தை ஆயிற்று என்பார்.

திருச்சி வி. இராமமூர்த்தி அவர்கள் இப்பெயரைச் சாத்தாந்தை என்று கொள்ளுகிறார்கள். டாக்டர் கிருட்டிணசாமி அவர்களும் சாத்தாந்தை என்றே கொண்டு சாத்தாந்தை குலத்தின் சின்னம் ஆந்தை என்று கூறுகின்றார். இலக்கியம், தனிப்பாடல்கள், செப்பேடு, பட்டயம், கல்வெட்டு எதிலும் சாத்தந்தை என்று குலப்பெயர் கூறப்படுகிறதே அல்லாமல் எந்த ஒரு இடத்திலும் சாத்தாந்தை என்று இக்குலப் பெயர் எங்கும் காணப்படுவதில்லை. டாக்டர் கிருட்டிணசாமி அவர்கள் குண்டெலிகள் குலத்தோடு சாத்தந்தை குலத்தைத் தொடர்பு படுத்துவதும் சாத்தாந்தை என்று குறிப்பதும் மிகவும் தவறானவையாகும். இவ்விருவர் கூற்றுக்களும் மரபுக்கோ வரலாற்றுக்கோ பொருந்தாதவையாகும்.

கொங்குக் கொடுமணலிலும் பிற இடங்களிலும் தொல்லியல் அகழாய்வு செய்யப்பெற்ற இடங்களில் அந்தை என்ற பெயர்கள் மிகுதியாகக் கிடைக்கின்றன. இவற்றைக் கொண்டு சாத்தந்தை என்ற பெயரினைச் சாத்து+அந்தை என்று பிரிக்கலாம் என்ற கருத்தை டாக்டர் எ. சுப்பராயலு அவர்கள் வெளியிட்டுள்ளார்கள். (சாத்து—வணிகம்) சாத்தன் என்பதற்கு வணிகர் கூட்டத் தலைவன் என்றும் பொருள் உண்டு. மாசாத்தன் என்று சிலம்பில் வணிகர் தலைவன் குறிக்கப் பெறுகின்றான்.

கொடுமணல் அகழாய்வில் 'ஸாதந்தை' என்று பொறிக்கப்பட்ட ஓடு ஒன்று கிடைத்துள்ளது. இச்சொல்லை எழுதும்போது ஏற்பட்ட பிழை என்றோ அல்லது த என்பதை த்த என்ற கூட்டெழுத்தின் அடையாளமாகவோ கருதலாம். அப்படியானால் 'சாத்தந்தை' என்ற பெயரினை 2300 ஆண்டுகட்கு முற்பட்ட பெயர் என்று நாம் கொள்ளலாம். இது வரலாற்றுச் சிறப்புமிக்க தொல் பொருட் சான்றாகும்.

சங்க இலக்கியங்களில் புறநானூற்றிலும் நற்றிணையிலும் சில பாடல்களைப் பாடிய ஒரு புலவர் பெயர் 'சாத்

தந்தையார்' என்று குறிக்கப்பெறுகிறது. அபிதான சிந்தாமணியில் பொற்கடாரம் உரை மாற்றுக் கூறிப் புகழ்பெற்ற வணிகன் ஒருவன் பெயர் 'சாத்தந்தை மகரிஷி கோத்திரம்' என்று குறிப்பிடப் பெறுகிறது.

இடைக்காலத்தும் 'சாத்தந்தை' என்ற பெயர் வைத்துக் கொண்டு வாழ்ந்த பெருமக்கள் சோழ நாட்டுப் பகுதியிலும் வாழ்ந்தனர் என்பதைக் கல்வெட்டுக் காட்டுகிறது.

> ஸ்வஸ்திஸ்ரீ சக்கரவத்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு 33 ஆவது இத் திருவிளக்கு வைத்தான் சாத்தந்தை ஐய்யாறன் சங்கர நாராயணன்

என்பது திருவரங்கக் கோயிலில் திகழும் ஒரு கல்வெட்டாகும். இவைகளின் மூலம் சாத்தந்தை என்ற பெயரின் தொன்மை, சிறப்பு இவைகளை உணருகின்றோம்.

கொங்கு வேளாளர் உட்பிரிவினைக் குலம் என்று குறிக்கின்றோம். ஆனால் பல பழைய வரலாற்று ஆவணங்களில் இப் பெயர் கூட்டம், கோத்திரம் என்றும் குறிக்கப்பட்டுள்ளன. எனவே,

> சாத்தந்தை குலம்
> சாத்தந்தை கூட்டம்
> சாத்தந்தை கோத்திரம்

என எப்படிக் குறிப்பிட்டாலும் அவை ஒரே பொருளை உடையன என்பது விளங்கும். சில குலங்கள் குடி என்றும் அழைக்கப் பெறுகின்றன. இச் சொற்களுக்குச் சாதி, இனம், குழு, வமிசம் என்று அகராதிகளில் பொருள் கூறப்படுகிறது.

சாத்தந்தை குலத்தினர் கொங்கு நாடெங்கும் பரந்து வாழ்கின்றனர். இவர்கள் பண்டைக் காலத்திலேயே சமரச எண்ணம் உடையவர்கள்; ஏழையர்க்கு இரங்கும் ஏந்தல்கள். வேந்தர்கட்கு உற்றுழி உதவும் தறுகணாளர். கொடையிற்

சிறந்தவர்கள் கோயில் பல கட்டியவர்கள். அறம் வளர்த்த அருளாளர்கள். சமுதாயப் பணிகளில் முன்னின்றவர்கள். மூவேந்தர்களால் சிறப்பிக்கப் பெற்றவர்கள்.

வீரப்பண்பு சாத்தந்தை குலத்தாருக்கு இயல்பிலேயே அமைந்த ஒன்று. ஆய்வாளர் டி.எம். காளியப்பா அவர்கள் கொங்கு வேளாளர்களில் கொங்கு நாட்டு எல்லையைக் கடந்து பிற நாடுகளில் போரிட்ட பெருமையும் பேராற்றலும் படைத்தவர்கள் சாத்தந்தை குலத்தினர் என்று கூறிப் பின்வருமாறு புகழுரைகளையும் அளிக்கின்றார்.

> 'சாத்தந்தை குலத்தினர் வீராதி வீரர்கள். 3000 ஆண்டுக் காலமாகத் தொடர்ந்து வீராதி வீரர்களாக இவர்கள் வாழ்ந்து வந்தது ஒரு அதிசயமாகும். ஒரு தலைமுறையில் வீரர்களாக இருப்பவர்கள் சில தலைமுறைகளில் கோழைகளாக மாறிவிடுவது வரலாற்று இயல்பு. சாத்தந்தை குலத்தினர் தொடர்ந்து காலத்திற்குக் காலம் வீரத்தினவுடன் வாழ்ந்து வந்தது கொங்கு இனத்திற்கே பெருமை தருவதாகும்'

சாத்தந்தை குலத்தாருள் சிலர் பொங்கல் பண்டிகை கொண்டாடுவது இல்லை. வேறு சில ஊர்களில் சாத்தந்தை குலத்தினர் திருமணத்திற்குப் பந்தல் போடுவதில்லை. சிலர் பந்தல் போட்டாலும் மேற்கட்டி கட்டுவதில்லை. இப்படிப் பல ஊர்களில் பல்வேறு பழக்க வழக்கங்களைக் கையாண்டு வருகின்றனர்.

பயிரன் குலத்துச் சர்க்கரை மன்றாடியார்களும் பெரிய குலத்து வேணாடர்களும் செங்கண்ண குலத்துப் பல்லவ ராயர்களும் பொருளந்தை குலத்துக் காங்கேயர்களும் பற்பல நூற்றாண்டுகளாகக் கொங்கு நாட்டில் தாங்கள் நடத்திய அருளாட்சியில், அறப்பண்பில், நீதி செலுத்தும் நேர்மையில் சாத்தந்தை குலத்தாரைத் தங்களுக்குப் பக்க பலமாக வைத்துக் கொண்டனர் என்பதனைப் பட்டயங்கள் நமக்குக் காட்டுகின்றன.

காலிங்கராயன் வழிவந்த வெள்ளோட்டுச் சாத்தந்தை குலத்தார்களும் அப்புகழ்மிகு பட்டவர்த்தனர்கள் பரம்பரைப் பெருமைக்கு ஏற்ப அவர்கள் செய்த அறச் செயல்களுக்குக் கைகொடுத்துதவினர். சாட்சியங்களாக அமைந்து சந்திர சூரியர் உள்ளவரை அவ்வறச் செயல் களைக் காப்பதாக உறுதியளித்து அவ்வாறு செயலிலும் நிலைத்து நின்றுள்ளனர். இது வரலாறு காட்டும் உண்மை யாகும். உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை!

## வேளாளர்—கவுண்டர்

இவர்கள் வேளாளர்கள், கவுண்டர்கள் என்ற சிறப்புப் பெயர்களுக்கு உரியவர்களாகத் திகழுகின்றனர். இப் பெயரின் பெருமைகளைச் சிறிது காணலாம்.

வேள் எனவும் வேளிர் எனவும் சங்க இலக்கியத்தில் குறிக்கப்படுபவர்கள் அனைவரும் வேளாளர் மரபினரே. வேள் என்றால் மண் என்று பொருள் உண்டு. வேள்+ ஆளர்=வேளாளர் என்ற பெயர் ஆயிற்று. மண்ணை ஆள்பவர் என்பது பொருள். வேளாளர்கள் பயிர்செய்து அதனால் வரும் பலனைப் பிறர்க்கு ஈந்து தாமும் உண்டு வாழ்பவர்கள். அதனால்தான் (வேள்+ஆண்மை) வேளாண்மை என்ற சொல்லுக்கே உபகாரம், உதவி செய்தல் என்று பொருள் ஆயிற்று. 'வேளாளர் என்பார் விருந்திருக்க உண்ணாதார்' என்ற பழமொழியும் ஏற்பட்டது. 'தாளாண்மையால் மிக்கிருக்கும் வேளாளர்' என்று இறைவனைப் பாடிய அருளாளரும் பாடலாயினர்.

இன்னும் சிலர் 'வெள்ளாளர்' என்று கொண்டு 'வெள்ளத்தை ஆள்பவர்' எனப் பொருள் கூறுவர். கங்கா குலம், கங்கை குலம் என்று வேளாளர்கள் அழைக்கப்படுவது இப்பொருள் கருதியே வேளாண்மைக்கு இன்றியமையாமை நீர் ஆதலின் இப்பொருள் வருவதாயிற்று. சிலர் இதனைப்

புராண மரபாகக் கொண்டு சிவபெருமான் தலையில் இருக்கும் கங்கையின் மைந்தர் வேளாளர் என்று வேளாளர் புராணம் பாடினர்.

'தொல்குடி' 'தொன்முதிர்வேளிர்' என்று சங்க இலக்கியத்தில் குறிக்கப்படும் மூத்த குடியே வேளாளர் குடியாகும். ஒரு காலத்தில் தென்னகம் முழுவதும் (மராட்டிய மாநிலம் உட்பட) பரவியிருந்தவர்கள் வேளாளர்கள். வரலாற்றுச் சான்றுகள் இதனை மெய்ப்பிக் கின்றன.

தமிழகத்தில் வேளாளர்கள் முடியுடை மூவேந்தருக்கு மகட்கொடைக்கு உரியோராக வாழ்ந்தனர். மன்னர் பின்னோர் என்றும் புகழப் பெற்றனர். சேரர் தலைநகர் வஞ்சியில் வேள் வழியினர் தங்குவதற்குத் தனி மாளிகைகள் இருந்தன. அவை வேள் ஆவிக்கோ மாளிகை எனப்பட்டது.

தமிழகமெங்கும் பரவி வாழ்ந்த வேளாளர்கள் ஆங்காங்கு தங்கியிருக்கும் இடத்திற்கு ஏற்பப் பலவாறு பெயர் பெற்றனர். துளுவ வேளாளர், சோழிய வேளாளர் என்பது போலக் கொங்கு நாட்டில் இருக்கும் வேளாளர்கள் 'கொங்கு வேளாளர்கள்' என்று பெயர் பெற்றனர். கொங்கு வேளாளர்கட்கு வேளாண்மைத் தொழிலில் உதவவும், பணிவிடை செய்யவும் இங்கேயே நிலையாகத் தங்கிய பிற இன மக்களும் கொங்கு என்றே அடைமொழி கொடுத்துச் சுட்டிக் கூறப்படுவார் ஆயினர்.

கொங்கு வேளாளர்கள் கொங்கு நாட்டுக்கே உரியவர் கள் என்றும், தொண்டை நாடு சோழநாட்டுப் பகுதியி லிருந்து குடியேறியவர்கள் என்றும் இருவிதமான கருத்துக் கள் ஆய்வாளரிடையே உண்டு.

கொங்கு வேளாளர்கள் ஆவினங்களையும், குடிகளை யும், நாட்டையும் காப்பதில் வல்லமை கொண்டு வாழ்ந்த வர்கள் ஆதலின் 'காமிண்டர்' என்று பட்டம் பெற்றனர்.

'ஸ்ரீ வீரபாண்டிய தேவர்க்கு யாண்டு பதினேழாவது ஆவணித் திங்கள் முதல் பரஞ்சேர்வழி வெள்ளாளர் ஆவகளில் வீரகாமிண்டன்'

'எல்லையாவது இக்காணிக்குப் பாய்கிற கண்ணாறுக்குத் தெற்கு காமிண்டர்க் காணி'

'மேல்கரை அரைய நாட்டு முஞ்சனூர் வெள்ளாளன் தேவந்தைகளில் சிறுப்பிள்ளைக் காமிண்டன் உத்தம பாலனேன்'

'தென்கரை மணலூர் நாட்டில் வெள்ளாளன் வெண்டுவரில் பெரியான் பிள்ளனான செயங் கொண்ட சோழக் காமிண்டரேன்'

'வெள்ளோடு சாத்தந்தைகளில் வீர சோழக் காமிண்டன்'

எனவரும் கல்வெட்டுத் தொடர்கள் மூலமாக காமிண்டன் என்ற பெயர் பரவலாக முன்பு வழங்கப் பெற்றமையை அறிகின்றோம். இப்பெயரே பிற்காலத்தில் 'கவுண்டர்' என மாறியது. பின்னர் இதன் சிறப்புக் கருதிப் பலரும் இப் பெயரைத் தங்கள் பெயருடன் இணைத்துக் கொண்டனர். சிலர் இப்பெயரைக் கன்னடப்பெயர் என்பர். அது தவறு.

பயிரகுலத்துப் பழைய கோட்டை அரண்மனைத் தலைவர் நல்ல சேனாபதிச் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் அவர்கள் பெயரில் காமிண்டர் பட்டம் இன்றும் இடம் பெறுவதைக் காணுகின்றோம்.

ஆங்காங்கு உரிமை உள்ளவர்களாக இருப்பதால் 'காணியாளக் கவுண்டர்' என்றும், புதியதாக நிலம் திருத்தி ஊர் ஏற்படுத்திக் குடி அமர்ந்ததால் 'குடியானவர்' என்றும், ஊரை ஆட்சி செய்யும் உரிமை படைத்திருந்ததால் 'ஊராளிகள்' என்றும், நாட்டுக்குத் தலைமை பூண்டமையால் 'நாட்டுக் கவுண்டர்கள்' என்றும், வேளாண்மைக்கு மிக இன்றியமையாத நீரைத் தருகின்ற மேகத்தோடு தொடர்பு

கொண்டிருப்பதால் 'காராளர்' என்றும் பலவாறு பெயர் பெற்றனர் கொங்கு வேளாளர்கள்.

கொங்கு வேளாளர்கள் பற்றிப் பலர் ஆய்ந்து நூல்களும் கட்டுரைகளும் எழுதியுள்ளனர்.

'நல்ல தேகபலம் உள்ளவர்கள்; கடினமாக உழைப் பவர்கள்'

கொங்கு நாட்டார் குணம் மற்ற நாடுகளைவிட வேறுபட்டே இருக்கும். சொல் ஒன்று வெட்டு ஒன்று என்றே இருப்பார்கள்'

'கொங்கு நாட்டு மக்கள் வலிமையான இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று புகழ் ஏந்தியவர்கள். மிகவும் கடுமையாக உழைப்பவர்கள். தங்கள் குலத்திற்கு வரும் இழிவைப் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள் (The Vellalas of this Nadu are noted as a hardly-race of people, very industrious and honest who could brook no insult to their community)' 'உயர்ந்த கட்டுப்பாட்டுடன் இயங்கிய சமூகம் (Highly organised community)' -

எனப் பலர் கூறும் கருத்துக்களால் கொங்கு வேளாளக் கவுண்டர்களின் பெருமைகளையும் சிறப்புக்களையும் காணு கின்றோம்.

கொங்கு வேளாளர்களின் சிறப்புக் கருதிப் புலவர் புகழ்ந்து பாடலாயினர். கீழ்க்கண்ட பாடல்கள் கொங்கு வேளாளர்களின் புகழ்ப்பாக்களாகப் புலவர்கள் பாடிய எண்ணற்ற பாடல்களில் ஒருசில எடுத்துக்காட்டுக்களாகும்.

நீதிநெறி அறமுறைமை தவறாத மறைபாலர்
நிலைநின்ற புகழைஉடையோர்
நீசருட னேகூடி உண்டபேர் பழையனூர்
நீலியுட பழிகமுவினோர்

மேதினியில் என்னவே புலவருக் காகவெழு
 வீடுதனில் விலையுண்ட பெரியோர்
மேன்மையுடன் முன்கையில் சந்தன முரைத்துமுளை
 வாரிஅமு திட்டபெரியோர்

பாதகம்எண் ணாமலே சூலியுட முதுகினில்
 பாலன்ன மிட்டபெரியோர்
பாணனிட நட்பதனைப் பிணந்தன்னைச் சுமந்துமவர்
 பார்முழு தாண்டபெரியோர்

ஆதலர்கள் கொண்டாடும் ஆயிரம் ஆனைக்கு
 அய்யமு தளித்தபெரியோர்
அறிவுபொறை நெறிமுறைமை தவறாத மறைபாலர்
 அவனிசூழ் வேளாளரே. (1)

அம்புவியில் மிக்கான சித்திரமே ழிக்கொடிக்கு
 அதிபன்என வந்தசமுகம்
அரவின்மணி தன்னையே கவிவாணர் தங்களுக்கு
 அன்பாய்க் கொடுத்தசமுகம்

பண்புபெற வேயுலகில் நீலிபலி தந்துமே
 பார்புகழ வந்தசமுகம்
பரதவித நாட்டியம் புரிகின்ற பொதுமாதர்
 பண்புரிசை யிட்டசமுகம்

தம்பமென வேதியர்கள் மறையோதி அச்சனத
 சதாதினம் விளங்குசமுகம்
தானமிகு தருமமும் அன்னசொன் னங்களும்
 தயவாய் விளங்குசமுகம்

கம்பர்தன் தமிழ்பெற்ற கீர்த்தியும் புகழவே
 கனவுகூர்ந் துற்றசமுகம்
காசினியில் மிக்கான மேலான சமுகமது
 காராளர் தன்சமுகமே. (2)

தேரோடும் வேதியர் மன்னவர் முன்றினில் சீர்வசிகர்
கூறிடும் பின்னோர் முதலான சாதி குலங்களுக்கு
நீரிடு மேழிச் சிவனாக வந்து நிலம்உழுகும்
சோறிடும் மேழியன் வேளாளச் சாமி துணைநமக்கே. (3)

வீறுடன் வார்த்தை யுண்டோ மாமேருக் கப்பால் இப்பால்
ஊறிடும் கிணறு போல உதவிய செங்கை மேகம்
பாறிடும் கலிய கன்ற பாணிவே ளாளர் தம்மைச்
சோறிடும் தெய்வம் என்று சொல்லுவோம்
சொல்லுவோமே. (4)

ஆழித் தேவர் அலைகடலில் ஆடும் தேவர் அம்பலத்தில்
வாழித் தேவர் குலமக்கள் வையம் தோறும் பெருக்காளர்
ஊழித் தேவர் எல்லோரும் உலகம் காக்க வல்லாரோ
மேழித் தெய்வம் அல்லாமல் வேறோர் தெய்வம்
கூறோமே. (5)

# சாத்தந்தை குலக் காணிகள்

கொங்கு 24 நாடுகளில் உள்ள எந்தெந்த ஊர்களுக்கு யார் யார் உரிமையுடையவர்கள் என்று, மதுக்கரைச் செல்லாண்டியம்மன் சந்நிதியில் வேளாளர்கள் காணி பிரித்தனர். 'கொங்குக் காணியான பட்டயம்' என்ற ஏட்டில் அதுபற்றிய சில விபரங்கள் கூறப்படுகின்றன.

'குல கோத்திரங்கள் பிரிவு செய்த விபரம்' என்றும்,

> 'நற்குடி நாற்பத்தெண்ணாயிரம் பசுங்குடி பன்னீராயிரம் யென்றும் குல கோத்திரங்கள் பிரித்து நாடு இருபத்து நாலு நாட்டார் என்றும் இந்தக் குலங்களை ஊருக்கெல்லாம் குல தெய்வங்களும் காணிபூமிகளும் பிரித்து'

என்றும் அப்பட்டயம் கூறுகிறது.

மற்றொரு பட்டயம் 'காணியாளக் கவுண்டர்கள் மற்றும் குடியானபேர்' என்று குறிக்கிறது. காணியாளரின் உரிமைகள் 'காணியாட்சி' எனப்பட்டது. ஒருவருக்குரிய காணியாட்சி உரிமை முழுவதுமோ அல்லது அதன் பகுதியோ திருமண உரிமையாலோ அல்லது பணம் கொடுத்து விலைக்குப் பெற்றோ பிற குலத்தாரும் காணி உரிமை பெற்றனர். அதனால் அவர்களும் அவ்வூருக்குக் காணியாளர் ஆயினர்.

ஒரு ஊருக்குக் காணியாளர்கள் பலர் இருப்பினும் அவர்களில் சிலருக்குத்தான் முதன்மையான சில பங்கு உண்டு. அம்முதல் பங்கு 'முப்பாடு' என்றும், அதன் பின்னர் வரும் பங்குகள் 'பிப்பாடு' என்றும் குறிக்கப்பெறும். முதல் பங்கு —முப்பாடு உடையவன் 'முப்பாட்டுக்காரன்' எனப்பட்டான். சில இடங்களில் இவர்கள் 'கொத்து'— 'கொத்துக்காரன்' என்றும் அழைக்கப்பட்டனர்.

அலகுமலைக் குறவஞ்சியில் சேர மன்னன் சிலருக்குக் காணிகள் அமைத்தான் என்ற செய்தி கூறப்படுகிறது.

'இத்தாதி நற்றவர் எல்லாரும் கூடி
வத்தாத கொங்கு வளநா டனைத்திலும்
ஈடாக நாலாறு இருபத்து நான்கு
நாடா வகுத்து நாற்றிசை தோறும்
இருக்கும் படியா இறைசேர மானும்
தருக்குடன் இவர்களைத் தான்நாடு முழுவதும்
வைத்தவர் அவர்க்கு மாநிலம் காணி
உற்றுகந் திருக்க உதவிசெய் நாளில்'

என்பது குறவஞ்சிப் பாடல் பகுதியாகும்.

அரசனோ அல்லது அவனுடைய உயர் அலுவலர்களோ ஒருவருக்குப் புதிய பகுதிகளைக் கொடையாகக் கொடுப்பதும் உண்டு. அவை அவர்களின் காணியாகக் கூறப்பெறும்.

'பூர்வத்திலே சேறமாம்பெருமாள் சாத்தந்த கோத்திரக் காரர்களுக்கு காவடிக்கை நாடு பிரபுத்வம்பண்ணிக் கொடுத்து இருக்கிறபடியினாலே' என்ற பகுதி அதனை விளக்கும். காணி ஊர்கள் போலக் காணித் தெய்வமும் உண்டு.

கொங்கு நாட்டில் கொங்கு வேளாளர்களில் எல்லாக் குலத்தாருக்கும் காணியூர்கள் உள்ளமைபோலச் சாத்தந்தை குலத்தாருக்கும் காணி ஊர்கள் கூறப்படுகின்றன.

'உகாயனூர் வாய்த்த சாத்தந்தை'
'ஆத்திப நல்லூர் அதிப சாத்தந்தை'

என ஓதாளர் குறவஞ்சி குறிப்பிடும்.

தனிப்பாடல்கள் சில

'திசைக்குமது தென்நாகம் வெள்ளோடை
அல்லாளம்
நிருபன் சாத்தந்தை குலனே'

என்றும்,

'கங்கைகுலக் காலிங்க ராய வெள்ளோடு
காங்கயம் விசய மங்கை நகரம்
காரைதொழு பாலதொழு அல்லாள புரமதில்
கடகமெனும் யானைகட்டி'

சாத்தந்தை குலத்தினர் அரசு புரிந்தனர் என்றும் கூறுகின்றன.

'நல்லணவேள் காதல்' என்னும் சிற்றிலக்கியம் வெள்ளோடு, நாகம் பள்ளி, கூகலூர், விசயமங்கலம், குன்னத்தூர், அல்லாளபுரம், கூடலூர், உகாயனூர், காங்கயம், இலவமலை, பாலதொழு, கருவலாம்பாடி, காரைத்தொழு, அத்தாணி, அல்லிபுரம், வல்லிபுரம் ஆகிய ஊர்களைச் சாத்தந்தை குலத்தாரின் காணி ஊர்களாகக் குறிக்கிறது. முத்துசாமிக் கோனார் அவர்கள் பூந்துறை நாட்டு வீரக நல்லூரும், ஓடாநிலையும் சாத்தந்தை குலத்தாரின் காணி ஊர்கள் என்பார்.

'வெள்ளோடை ஆம்பல்களும் மெய்ந்நளின மாமலர்சூழ்
வெள்ளோடை யும்பரவும் வெள்ளோடை அம்பதியும்
நாகநகர் கூவலூர் நல்விசைய மங்கையுடன்
சேகரம்சேர் குன்றநகர் செப்பும்அல் லாளபுரம்
கூடலூர் உகாயனூர் கொள்ள அருள் காங்கயமும்
நீடுஇல வன்மலையும் நேயமிகும் பாலைநகர்
நற்கருவ லாம்பாடி நன்னகராம் காரைத்தொழு
சொற்குலவும் அத்தாணித் தொன்னகரும் நன்னயமாய்
அல்லி புரத்துக் கதிய புகழ்நிறைந்த
வல்லிபுரம் என்னும் வளநகரும் மேன்மைகொண்டோன்
இன்னும் பலகாணி இன்பமுட னேபடைத்த
கண்ணன் என்னும் இந்திரதருக் கற்பகம்.....'

என்பன அந்நூல் கூறும் காணி ஊர்களாகும். குளித்தலை வட்டம் நங்கவரமும் சாத்தந்தை குலக்காணி ஊர் என்பர் சிலர். அங்குள்ள சாத்தாயி கோயில் சாத்தந்தை குலத்தாரின் காணி தெய்வம் என்பர். 'காளாபிடாரி

சாத்தனூர் நங்கை' எனக் கல்வெட்டில் அந்த அம்மன் குறிக்கப் பெறுகின்றார். சாத்தன்+தந்தை=சாத்தந்தை என்பதால் சாத்தனூர் தொடர்புடைய ஊராக இருக்கலாம். அக்கோயில் சாத்தன் தாய்க்கு எடுக்கப்பட்ட கோயிலாக இருக்கலாம் (சாத்தன்+ஆய்—சாத்தாயி).

அலகுமலைக் குறவஞ்சியில் பொங்கலூர் நாட்டின் சிறப்புக்கள் எல்லாம் தொகுத்துக் கூறப்படுகின்றன. பொங்கலூர் நாட்டில் புகழுடன் வாழும் காணியாளர்களில் சாத்தந்தை குலத்தினரும் கூறப்படுகின்றனர்.

'பொன்னர் ஓதாள கோத்ரர் குழாயர்
பொருந்து சாத்தந்தை செம்பர் செம்பூதர்
கண்ணர் மாடையும் பூசனும் வெண்டுவர்
காடை செங்கண்ணர் பொருளந்தை பயிறர்
எண்ணை ஆந்தை கோவேந்தர் பனங்காடை
இப்படிச் சிறந்தோங்கி யிருக்கும்
இன்னம் நற்குல வேளிர்கள் வாழ்வுற்று
இலங்கும் பொங்கலூர் நாடெங்கள் நாடே'

இப்பாடலில் சாத்தந்தை குலம் 'பொருந்து சாத்தந்தை' என்று சிறப்பிக்கப் படுவது காணலாம். பொங்கலூர் நாட்டு இறைவன் அலகுமலைக் குமரர் பவனி வந்தபோது சாத்தந்தை குலத்தினர் முன்நின்று கும்பிட்டு முறைமுறை வணங்கினர் என்றும் கூறப்படுகிறது.

மக்கள் தொகை பெருகிக் கொங்கின் பல இடங்களில் சாத்தந்தை குலத்தினர் பல்கிப் பரவி வாழ்ந்தபோது பல புதுக்காணிகளும் ஏற்பட்டன. திருமண உறவு, புதிய ஊர்கள் காடழித்து ஏற்படுத்துதல், அரசரால் பெற்ற கொடை, பகையால் வேற்றூர் செல்லல், வணிகத்தின் பொருட்டும் பஞ்சம் காரணமாகவும் பிற பகுதிகளுக்குச் செல்லல், ஊர்களை விலை கொடுத்து வாங்குதல் ஆகிய பற்பல காரணங்களால் புதுப்புதுக் காணி ஊர்கள் ஏற்பட வாய்ப்புள்ளன.

கல்வெட்டுக்களிலும் செப்பேடுகளிலும் சிறுதலூர்ச் சாத்தந்தை, எண்ணமங்கலம் சாத்தந்தை, அழுக்கயம் சாத்தந்தை, வெள்ளிரவெளிச் சாத்தந்தை, வெள்ள கோயில் சாத்தந்தை

போன்று உரிமையுடைய காணி ஊர்களைக் காணுகின்றோம். இன்று தாம் வாழும் இடங்களையெல்லாம் காணி ஊர்களாகக் கொண்டால் அவை நூற்றுக்கணக்கில் பெருகும். இன்று அவ்வாறே பெருகி உள்ளதைக் கண் கூடாகக் காணுகின்றோம்.

கொங்கு நாடெங்கும் பல்கிப் பரவி வாழ்ந்தாலும் வெள்ளோடும், இராசாக் கோவிலும் பல பகுதிச் சாத்தந்தை குலத்தாருக்குக் காணி ஊராகவும், காணித் தெய்வமாகவும் நின்று நிலவுகிறது. வெள்ளோடைச் சாத்தந்தை என்ற பெயரையே கல்வெட்டுக்களிலும் செப்பேடு பட்டயங்களிலும் மிகுதியாகக் காணுகிறோம்.

குலத்தின் ஆணி வேராக வெள்ளோடும், குலம் வளர்க்கும் கண்கண்ட தெய்வமாக அருள்மிகு இராசாக்களும் நின்று நிலவுகின்றனர். கல்வெட்டு மரபுப்படி கூறவேண்டுமானால் சந்திர சூரியர் உள்ளவரை இவ்வாறே நின்று நிலவும்; அதனால் சாத்தந்தை குலத்தினர் பல்வளம் பெற்று வளமுடன் வாழ்வர் என்பது திண்ணம்.

தென்முகம், வடமுகம் என இரு பெரும்பிரிவுகளாகச் சாத்தந்தை குலம் பிரிக்கப்பட்டிருப்பதை முன்பே கண்டோம். தென்முகம் வெள்ளோடு உலகபுரம், கனகபுரம், தேவபுரம் (தேவணம்பாளையம்) என்ற மூன்று கரைகளாகப் பிரிக்கப்பட்டது.

# செப்பேடு, பட்டயங்களில் சாத்தந்தை குலம்

கொங்கு நாட்டில் பல சமுதாயச் செப்பேடுகள், பட்டயங்கள் அண்மையில் கிடைத்துள்ளன. அப்பட்டயங் களை எழுதும்போது தொடர்புடைய பெருமக்கள் கொங்குச் சமூகப் பெரியவர்களை உடன் இருக்கச்செய்து சாட்சிக் கையொப்பம் இடச்செய்துள்ளனர். அப்பட்டயத்தில் கண்ட செய்திகளை முறைப்படி நீடு நடக்கச்செய்து நிறைவேற்றிக் காப்பது அவர்கள் பொறுப்பாகும். அப்படிக் கையெழுத் திட்டு அறச்செயல்களையோ, ஒப்பந்தங்களையோ காத்த கொங்குப் பெருமக்களுக்குள் மற்ற எல்லோரையும்விடச் சாத்தந்தை குலத்தினர் முன்னின்றிருக்கின்றனர். இதனை அப்பட்டயங்கள் மூலம் நாமறிகின்றோம். பரந்துபட்ட அப்பட்டயங்களில் சிலவற்றைக் காணலாம்.

## கொங்குக் காணியான பட்டயம்

மதுக்கரைச் செல்லாண்டியம்மன் சந்நிதியில் கொங்கு 24 நாடுகள் பிரித்து எல்லை நிர்ணயம் செய்து எந்தெந்த ஊர்களுக்கு யார் யார் காணியாளர்கள் என்று குறித்தது இப்பட்டயமாகும். இதில் வெள்ளோடு பாடகநாச்சி கிருபையால் வெள்ளோடு சாத்தந்தை குலத்தில் வையாபுரிக் கவுண்டர் காலிங்கராயக் கவுண்டர் நஞ்சப்பக் கவுண்டர் நல்ல காளியப்பக் கவுண்டர் ஆகியோர் குறிக்கப்பெறு கின்றனர்.

'பார்மருவு காராளர் நாற்பத்தெண் ணாயிரம்
பசுங்குடிகள் பன்னீராயிரம்
பகுக்கவரு சாத்தந்தை..........'

என்ற தனிப்பாடல் பகுதியின் மூலம் இவ்வாறு குலம் பிரித்த சிறப்புமிகு வரலாற்றுப் பணியில் சாத்தந்தை குலத்ினரே

முன்னின்றனர்; முதன்மை வகித்தனர் என்ற செய்தியும் உறுதிப்படுகிறது.

## முகுந்த நல்லூர்ப் பட்டயம்

சுந்தரரால் 'கொங்கில் குறும்பில் குரக்குத்தளி' என்று தேவாரத்தில் பாடப்பட்ட வைப்புத்தலம் சர்க்கார் பெரியபாளையம். அவ்வூர் முகுந்த நல்லூர், முகுந்தைப்பதி, முகுந்தை, முகுந்தனூர் எனவும் அழைக்கப்பெறும்.

அவ்வூர் சூழ்ந்த முகுந்த நல்லூர்ச் சீமையில் முகுந்த நல்லூர், சுந்தர பாண்டிய நல்லூர், திருப்பூர், ஊத்தலூர், மண்ணறை ஆகிய இந்த ஐந்து ஆதீனங்களில் சரிபாதியை வைசிய குலத்தில் கொங்கச் செட்டிகளில் திருமிய கோத்திரம் அவினாசி செட்டியார் மகன் காசிலிங்கச் செட்டியாரிட மிருந்து எழுமாத்தூர்ப் பனங்காடை குலம் ஆண்டாக் கவுண்டர் மகன் சோழியாண்டாக் கவுண்டர் விலைக்கு வாங்கினார். இக்கிரைய சாசனத்திற்குச் சாட்சிக் கையொப்பமிட்ட பெருமக்களில் வெள்ளோடு சாத்தந்தை குலத்தில் கிஷ்ட்டணராயக் கவுண்டர் என்பவர் முக்கிய மாகக் குறிக்கப் பெறுகின்றார்.

## மதுக்கரைப் பட்டயம்

கொங்கு 24 நாட்டு வேளாளக் கவுண்டர்கள், தங்களுடைய திருமணம் போன்ற சடங்குகட்கும் வீட்டு உபயோகத்திற்கும் புதுமண்பாண்டங்கள் தேவை என்பதை உணர்ந்து பிற பகுதியிலிருந்து 32 வேட்கோவர் குடும்பங் களை மண்பாண்டம் வனைந்து கொடுக்கக் கொங்கு நாட்டுக்கு அழைத்து வந்தனர். 24 நாடுகட்கு 24 வேட்கோ வரை நியமித்து 8 ஊர்கட்கு 8 வேட்கோவரையும் நியமிக் கின்றனர்.

மதுக்கரைச் செல்லாண்டியம்மன் கோயிலில் கொங்குத் திருநீலகண்டர் என்று அவர்கட்குப் பெயரிட்டு வேட்கோவர்

யார் யாருக்கு எந்த நாடு காணியாட்சி, எம்முறையில் நவபாண்டங்கள் எவ்வெச்சடங்குகட்கு அளிப்பது என விரிவாக எழுதித் தந்துள்ளனர். இப்பட்டயத்தில் சாத்தந்தை குல ஆனைமலை நாடு காலிங்கராயக் கவுண்டர் என்பவர் கையொப்பமிட்டுள்ளார்.

## அகிலாண்ட தீட்சிதர் செப்பேடு

கொங்கு வேளாளர் தங்களுக்கென்று குல குருக்களை ஏற்படுத்தி அவர்கள் வழிநின்று வழிபட்டு அவர்களை வணங்கியே முக்கியமான தங்கள் நற்செயல்களைப் பழங் காலத்தில் தொடங்கி வந்தனர். பனங்காடை, ஆந்தை குலத்தாருக்கு மார்க்கண்டேய கோத்திரம் சுப்பிரமணிய பண்டிதர் குருவாகக் கூறப்படுகின்றார். கொடுமணல் பனங்காடை, சேரன், பாண்டியன் குலத்தாருக்குக் கீரனூர் கொடுமுடிப் பண்டிதர், சேனாபதிப் பண்டிதர் ஆகியோர் மரபினர் குலகுருவாகக் குறிக்கப் பெறுகின்றனர்.

பூந்துறை நாட்டினருக்கு வெள்ளோட்டோடு வரலாற்றுத் தொடர்புடைய 'பேரோடு, எனப்படும் விருப்பாட்சிபுரத்தில் இருந்த அகிலாண்ட தீட்சிதர் வழியினர் குலகுருவாக விளங்கினர். பின்னர் இவர்கள் பேரோட்டிலிருந்து காலிங்கராயன் கால்வாயால் வளம்பல பெற்று பாரூர்க்குக் குடிபெயர்ந்தனர். இப்போது அங்கிருந்தும் குடிபெயர்ந்து திருச்சி மாவட்டம் திருவானைக் காவில் வாழ்ந்து வருகின்றனர்.

எந்த நாட்டிலே எந்த ஊரிலே இருந்தாலும் குலகுரு வரும்போது அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய மரியாதை, செய்ய வேண்டிய சிறப்பு, அளிக்கவேண்டிய காணிக்கை இவைகள் பற்றிய விபரங்களை எழுதியுள்ள செப்பேட்டில் வெள்ளோடு சாத்தந்தைகுல கருப்பராயக் கவுண்டர், பழனிக் கவுண்டர், பொங்காளிக் கவுண்டர் எலவமலை சாத்தந்தை குல பெரிய சின்னய கவுண்டர், காலிங்கராயக் கவுண்டர்,

வீரமணிக் கவுண்டர், பழனிக் கவுண்டர் ஆகியோர் குறிக்கப் படுகின்றனர்.

பல ஆண்டுகள் குடிமக்களின் தொடர்பு கொள்ள வாய்ப்பில்லாமலிருந்த திருவானைக்கா அகிலாண்ட தீட்சிதர் வழியினர், அண்மையில் தம் உரிமைச் செப்பேட்டுடன் கொங்கு நாட்டில் பயணம் செய்து குடிமக்களைச் சந்தித்து ஆசியளிக்கும் திருப்பணியை மேற்கொண்டுள்ளனர். குடிமக்கள் அவர்களை வரவேற்று உபசரிப்பது கடமையாகும்.

## பிடாரியூர்ப் பட்டயங்கள்

பூந்துறை நாட்டின் ஐந்தாவது வரிசை ஊராகக் குறிக்கப் படுவது பிடாரியூர் ஆகும். முன்னொரு காலத்தில் சென்னிமலை அடிவாரத்தில் ஊர் இல்லாமல் அப்பகுதி மிகப் பெரிய காடாக இருந்தபோது சென்னிமலைக்குரிய ஊராகப் பிடாரியூர் விளங்கிற்று. (அதுபோன்றே சிவன்மலைக்குரிய ஊராகப் பட்டாலி விளங்கியது) தொல்பொருட் சிறப்புடையது இவ்வூர்.

பிடாரியூருக்குரிய காணியாளர்கள் ஈஞ்சன் குலத்தினர். பிடாரியூர் ஈஞ்ச குலக் கூத்தக் கவுண்டருக்கு வெள்ளை பழனிவேலம்மாளைத் திருமணம் செய்துகொண்டு கருமா புரம் பொருளந்தை குலப் பள்ளிக் கூடத்தான் குழந்தை வேப்பக் கவுண்டர் பிடாரியூரில் பாதி உரிமையைக் காணியாட்சியாகப் பெறுகின்றார். இந்தக் காணி மாற்ற உரிமை ஒப்பந்தத்தில் வெள்ளோடு சாத்தந்தை குலத்துச் சென்னிமலைக் கவுண்டர் கையொப்பமிட்டுள்ளார்.

சில ஆண்டுகள் கழித்துப் பிடாரியூரில் புதியதாகக் காணி உரிமைபெற்ற பொருளந்தை குலத்துச் செங்கோடக் கவுண்டருக்குப் பிறந்த வெள்ளைப் பெண் வேலம்மாளைத் திருமணம் செய்து வள்ளி எறிச்சில் ஆந்தை குலம் சென்னிமலைக் கவுண்டர் மகன் குமரவேலப்ப கவுண்டர்

பிடாரியூரில் கால்காணி உரிமை பெற்றார். இதுபற்றிய செப்பேட்டில் வெள்ளோடு சாத்தந்தை குலக் கருப்பக் கவுண்டர் கையொப்பமிட்டுள்ளார்.

## திருமுருகன் பூண்டிக் கிரய சாசனம்

திருமுருகன் பூண்டி, அவிநாசிப் பகுதியைச் சேலூர் பாலவேளாளர் பாளையப்பட்டில் பயிசலிய கோத்திரம் இம்முடிப் பட்டத்துச் சோழியாண்டாக் கவுண்டர் மகன் வீர விக்கிரம சோழியாண்டாக் கவுண்டர் மதுரை நாயக்க அரசின் பிரதிநிதியாக இருந்து அரசாட்சி செய்து வந்தார். அவர்கள் முன்பொருகாலத்தில் பொருளந்தை குலத்தி லிருந்து பிரிந்தவர்கள். மதுரை நாயக்க அரசருக்கும் வீர விக்கிரம சோழியாண்டாக் கவுண்டருக்கும் ஏற்பட்ட மன வேற்றுமை காரணமாக 3 நாளுக்குள்ளாக 24 ஆயிரம் பொன் பழைய வரிவசூல் பாக்கியை அரசனுக்குக் கட்டுமாறு வீரவிக்கிரம சோழியாண்டாக் கவுண்டர் கேட்டுக்கொள்ளப் படுகிறார். இல்லாவிடில் ஆட்சி உரிமை இழந்து வேற்றூர்க்குத் தாட்டிவிக்கச் சொல்லி அரசன் ஆணை ஓலையாக வந்தது.

அப்போது வீரவிக்கிரம சோழியாண்டாகக் கவுண்டருக்கு அடைக்கலம் கொடுத்து அவருக்கு வந்த அவமானத்தை நீக்கிப் பொன் கொடுத்துக் காத்த எழுமாத் தூர்ப் பனங்காடை குலத்துக் காங்கேய கவுண்டர் மகன் பொய்ங்காக் கவுண்டப் பட்டக்காரன், மருதுறை ஆந்தை குலத்துக் கரிச்சிப் பட்டக்காரன் மகன் செல்லப்பக் கவுண்டர், தென்கரை நாட்டுக் கொத்தனூர்க் காணியாள ராகிய ஆந்தை குலத்து முத்துக்கவுண்டர், ஆகிய மூவரும் அவிநாசி, திருமுருகன்பூண்டி ஆகிய ஊர்களுக்கு வீரவிக்கிரம சோழியாண்டாக் கவுண்டர் அளித்த காணி உரிமையைப் பெறுகின்றனர்.

இக்காணி மாற்றம் முன்னரே அப்பகுதியில் குடியேறி வாழ்ந்த வெள்ளோடு சாத்தந்தை கோத்திரம் பொன்மேழித்

தலைவராகிய நஞ்சப்ப கவுண்டர் மகன் நல்ல காளியப்பக் கவுண்டர் அவர்களின் மனச்சம்மதியில் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

இப்பட்டயத்தில் திருமுருகன்பூண்டி கந்தமாபுரிப் பட்டணம் என்று குறிக்கப் பெறுகிறது. தலைக்காட்டுக் கங்கர் காலத்தில் கொங்கு நாட்டில் தலைநகராக விளங்கிய 'ஸ்கந்தபுரம்' இவ்வூராக இருக்கக்கூடும். கந்தமாபுரிப் பட்டணம் 'கட்டைமனை' (கோட்டை நகரம்) என்று கூறப்படுவது இக்கருத்தை வலியுறுத்துவதாக உள்ளது.

## கொங்குப் புலவர் பட்டயம்

கொங்கு வேளாளர்களின் பண்டையப் பெருவாழ்வில் புலவர்கட்கு மிகவும் முக்கியமான இடம் உண்டு. புலவர்கள் எனப்படும் பரம்பரைக் குடும்பத்தையே உருவாக்கி அவர்களால் வாழ்த்தப் பெற்று வாழ்வாங்கு வளமுடன் வாழ்ந்தவர்கள் கொங்கு வேளாளர்கள். அவர்கள் பரம்பரையினர் தங்கியிருக்கப் புலவன் பாளையம் என்ற பெயரில் ஊர்கள் அமைத்துக் கொடைகள் பல தந்து புலவர்களை வாழ்வித்த சமூகம் கொங்கு வேளாளர் சமூகம். இதனை முன்னர்க் கண்டோம்.

கொங்கு வேளாளர் திருமணங்களில் புலவர்கள் பால் பழம் சாப்பிடாமல் சடங்குகள் முடிவதில்லை. கம்பர் பாடிக் கொங்குப் புலவர்களின் வாரிசான மங்கலன் இசைக்கும் மங்கல வாழ்த்துக்குப்பின் கம்பர் வாழி 16 பாடல்களையும் ஏர் எழுபது இலக்கியத்தையும் கொங்கு வேளாளர் திருமண நிகழ்ச்சியில் படித்தனர் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. புலவர் பற்றிய குறிப்பு மங்கல வாழ்த்திலும் வருகிறது.

கொங்கு 24 நாடுகட்கும் புலவர்களை நிர்ணயம் செய்த கொங்குப் புலவர் பட்டயத்தை உருவாக்கிய சில கொங்குப் பெருமக்களில் சாத்தந்தை குலத்துக் கறுத்தராசிக் கவுண்டர் முக்கிய இடம் பெறுகின்றார்.

## குறுப்பு நாட்டுப் பட்டயம்

செங்குந்தரில் போக்கங் கூட்டம் நஞ்சராயப் புலவனுக்குக் குறுப்புநாடு காணி என்று நிர்ணயம் செய்த பட்டயத்தில் சாத்தந்தை குலத்து ராசாக்கவுண்டர் இடம் பெறுகின்றார். இவர் நெட்டராசாக் கவுண்டர் என்றும் அழைக்கப்பட்டார். என்று பட்டயத்தால் அறிகின்றோம். இப்பட்டயத்தின் ஓலை நகலுக்குரிய செப்பேட்டைக் காத்து வைத்திருந்து ஈரோடு கலைமகள் அருங்காட்சியகத்திற்குக் கள்ளிப்பட்டிக் கம்பன் செஞ்சொற் கொண்டல் திருமிகு க.கு. கோதண்டராம கவுண்டர் அவர்கள் அளித்துள்ளார்கள்.

## கத்தாங்கண்ணிப் பட்டயம்

குறுப்பு நாட்டின் தொன்மையான பழம்பதிகளில் காத்தாங்கண்ணியும் ஒன்று. விசயமங்கலத்தில் உள்ள கொங்கு வேளாளர்கட்குரிய கோயில் என்று சிறப்பிக்கப் பட்டுச் சித்திரமேழி விண்ணகரம் என்று அழைக்கப்பட்ட கரியமாணிக்சப் பெருமாள் கோயில் கல்வெட்டில் கற்றான் காணி என இவ்வூர் குறிக்கப்பெறுகிறது. கத்தாங்கண்ணிக் கல்வெட்டுக்களிலும் கற்றான்காணி என்றே குறிக்கப் பெறுகிறது. கற்றறிந்த சான்றோருக்கு அளிக்கப்பட்ட உரிமை ஊர் என்பது இதன் பொருள். நொய்யல் கரையில் அமைந்த தொல்பொருள் சிறப்பு வாய்ந்தது இவ்வூர்.

இக்கரைக் கத்தாங்கண்ணியில் உள்ள கொங்கு வேளாளக் காணியாளர்களில் சிவந்தி குலத்தாரும் ஒருவர். கற்றான்காணிச் சிவந்தி குலத்துத் தீத்தாக் கவுண்டருக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அப்பெண் வெள்ளைப் பெண்ணாக இருந்ததால் எவரும் திருமணம் செய்து கொள்ள முன்வரவில்லை.

அப்பெண்ணைக் கண்ண குலம் செங்கோட்டு வேலப்ப கவுண்டர் திருமணம் செய்து கொண்டு இக்கரைக் கத்தாங் கண்ணியில் காணி உரிமை பெற்றார்.

இதற்குரிய ஒப்பந்தம் திருப்பூர்க் கோட்டை திருப்புர வல்லியம்மன் சந்நிதியில் எழுதப்பட்டது. இந்த ஒப்பந்தத் தைத் திருப்பூர் பனங்காடை குலத்தார், சுந்தரபாண்டிய நல்லூர்க் காடை குலத்தார், ஊத்துக்குழி கண்ண குலத்தார் ஆகியோருடன் கூடி எழுதியவர்களில் முக்கிய இடம் பெற்றவர் அமுக்கயம் சாத்தந்தை குலத்துக் கிஷ்ட்டணராயக் கவுண்டர் என்பது அப்பட்டயத்தால் அறியப் பெறும் செய்தி யாகும்.

## பட்டாலிக் காணியாட்சிப் பட்டயம்

தீரன் சின்னமலை வெள்ளையர்களை எதிர்த்துப் போரிட்ட பெருவீரர். அவர் திப்பு சுல்தான் ஆட்சியின் போது 1792ஆம் ஆண்டு 200 ரூபாய்க்குப் பட்டாலிக் கிராமத்தில் வேட்டுவரில் அனுமந்தக் கவுண்டர் என்பவரது பங்கினை விலைக்கு வாங்கினார்.

தனது படைப்பயிற்சிக்கும் ஆயுதங்கள் தயாரிக்கவும் தனக்குச் சொந்தமான இடம் வேண்டும் என்பதற்காகச் சின்னமலைக் கவுண்டர் இவ்வூரின் பெரும் பகுதியை அவர் விலைக்கு வாங்கியிருக்கலாம்.

தீரன் சின்னமலை வரலாற்றில் இது குறிப்பிடத்தக்க மிகச் சிறந்த சான்றாகும். இச்செய்தி அவரது வீர வரலாற்றில் இன்னும் இடம்பெறவில்லை.

இதனை விளக்கும் பட்டாலிக் காணியாட்சிப் பட்டயத் தில் சின்னமலையின் பெயர் தீர்த்தகிரிச் சர்க்கரைக் கவுண்டர் என்று குறிக்கப்படுகிறது. இப்பட்டயத்தில் சின்னமலை சார்பாக வெள்ளோடு சாத்தந்தை குல முத்தித் திருமலைக் கவுண்டர் என்பவர் கையொப்பமிட்டுள்ளார். இவர்தான் 'கொன்றை வேந்தன் வெண்பா' இலக்கியம் பெற்றவர் போலும்! சின்னமலையின் சுதந்திரப் போருக்கு வெள்ளோடு சாத்தந்தை குலத்தாரும் உதவி புரிந்திருக்க வேண்டும் என்பது இதன் மூலம் உறுதிப்படுகிறது.

## வாய்மொழித் தீர்ப்பு

கி.பி. 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுதப் பட்ட ஒரு பழைய காகித ஆவணம் சிவகிரி சிந்தாமணிப் பண்ணை திரு. பழனிசாமி அவர்களிடமிருந்து கிடைத்தது.

வடமுகம் வெள்ளோட்டைச் சேர்ந்த புதுப்பாளையம், புங்கம்பாடி, கொம்மக்கோயில், தென்முகம் வெள்ளோட்டைச் சேர்ந்த ஞானிபாளையம், மயிலாடி, கனகபுரம் ஆகிய ஆறு கிராமங்களை வெள்ளை வேட்டுவன், பெரிச்சி மூப்பன் ஆகிய இருவரும் அதிகாரம் செய்கையில் தென் தேசத்திலிருந்து வந்த பெரியண கவுண்டர் மகன் முத்துக்கவுண்டர் வேட்டுவன் மூப்பன் ஆகியோரை வென்று மிராசு உரிமை பெற்ற வரலாறு இதில் கூறப்படுகிறது.

மதுரை நாயக்கர் ஆட்சியில் சாத்தந்தை குல முத்துக் கவுண்டர் இப்பகுதி ஆட்சி அதிகாரியாக நியமிக்கப் படுகின்றார். அரசுக்கு அவரால் பணம் கொடுக்க முடியாமல் போகவே திங்களூர் மூப்பர் சிலர் பணம் கொடுத்து வெள்ளோடு கோயில்களில் சில உரிமைகளைப் பெறுகின்றனர்.

இப்பட்டயம் முழுவதும் தேனோலை இதழில் அச்சிடப் பெற்றுள்ளது. முத்துக் கவுண்டரை வல்லிபுரம் சாத்தந்தை என்று இப்பட்டயம் கூறுகிறது. இது ஆய்வுக்குரியது. மதுரை நாயக்கர் நிருவாக முறையை ஆராய்ச்சி செய்ய இப்பட்டயம் பெரிதும் உதவும்.

இவ்வாறு கொங்கு நாட்டின் பல்வேறு இடங்களில், பல்வேறு காலங்களில் எழுதப்பெற்ற ஆவணங்களில் சாத்தந்தை குலத்தினரும் குறிப்பாக வெள்ளோடு சாத்தந்தை குலத்தினரும் இடம் பெறுவதால் கொங்கு நாட்டிலும், கொங்கு வேளாளர் சமுதாயத்திலும் ,இவர்களுக்கிருந்த சிறப்பினையும் செல்வாக்கினையும் நன்கு உணரலாம்.

# சாத்தந்தை குலத்தாரின் சமயத் திருப்பணிகள்

சாத்தந்தை குலத்தினர் கொங்கு நாட்டில் பல்வேறு ஆலயங்களில் சமயத் திருப்பணிகள் பல செய்துள்ளனர். கோயில்கள் கட்டிக் கட்டிய கோயில்களுக்குக் கொடைகளும் அளித்துத் திருப்பணிகளும் வழிபாடுகளும் விழாக்களும் குன்றாமல் நடைபெறத் திட்டமிட்டுப் பல பணியாற்றியிருக் கின்றனர். அவைகளைக் கல்வெட்டுக்கள் மூலமாகக் காணலாம்.

## வெள்ளோடு

வெள்ளோட்டில் உள்ள சர்வலிங்கேசுவரன் கோயில் திருப்பணிகளைக் காலிங்கராயன் செய்தார் என்பதை மெக்கன்சியின் கைபீது கூறுகிறது.

> 'காலிங்கராய கவுண்டன் என்கிறவன் பூந்துறை நாட்டுக்கு காணியாளனாய் மேல்கரை முப்பத்திரண்டு கிராமத்துக்குச் சேர்ந்த வெள்ளோடு குடியிருப்புக் காரனுக்குத் தம்முடைய இஷ்ட தெய்வமான சர்வேஸ்வர பாடகவல்லி நாச்சியார் தேவஸ்தானம் சீர்ணோத்தாரணம் பண்ணிக்கொண்டு இருந்தான்'

என்பது அப்பகுதியாகும். காலிங்கராயனுக்குப் பின்னரும் பல்வேறு கொங்கு அரசர்களின் ஆட்சிக் காலத்தில் அவ்வப் போது பல திருப்பணிகள் செய்துள்ளனர். வெள்ளோட்டுக் குளங்கள், கனகபுரம் குளம் ஆகியவை பாயும் இடங்களில் நன்செய் நிலங்களைச் சர்வலிங்கேசுவரனுக்குக் கொடையாக அளித்துள்ளனர்.

பிற்காலத்தில் சாத்தந்தை நல்லண கவுண்டர்மீது பாடப்பட்ட காதல் பிரபந்தத்தில் தலைவன் வேட்டைக்குச்

செல்லுமிடத்தில் சர்வலிங்கர்க்கு யானை வேட்டையாடித் தோலினை உடுக்கக் கொடுப்போம் என்றும், மான் வேட்டையாடி அவர் கையில் புது மான் கொடுப்போம் என்றும் கூறுகின்றனர். பாடகவல்லிக்குக் கவரி வீசக் கவரிமான் வால் துண்டித்துக் கொடுப்போம் என்றும் கூறுகின்றனர்.

வேலில் வேழத்தை வெகுண்டுகுத்தி வீழ்த்திஅதன்
தோலைச் சருவீ சர்க்குதவ வேணுமென்பார்

பாடகவல் லிக்கினிய பாகன் கரத்திருக்கும்
ஆடகப் பொன்மான் துலங்கிளமான் ஆனதென்று

இன்ன மொருமான் எழில்மானாய்க் கொண்டுவந்து
கன்னி யுமைபாகன் கைக்கொடுக்க வேணுமென்பார்

பத்தர்சரு வீசருக்கும் பாடகித் தாய் தனக்கும்
மெத்ததேசி காலம் இசைந்தெடுத்து வீசுதற்கு

உண்மையுடன் கானகத்தில் உற்றுவளைந்தேதேடி
வண்மையுடன் வெண்கவரி வால்துணிக்க
வேணுமென்பார்!

வெள்ளோடு இராசாக் கோயிலைக் கட்டிய பல்வேறு சாத்தந்தை குலப் பெரு மக்களின் திருவுருவச் சிலைகள் இராசாக் கோயிலின் தூண்கள் பலவற்றில் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளன. அச்சிற்பங்களில் கல்வெட்டுக்கள் இல்லாத காரணத்தால் அவர்கள் திருப்பணி செய்த காலமும் அவர்கள் பெயரும் இன்று அறியப் பெறவில்லை.

வெள்ளோடு இராசாக் கோயிலில் கிழக்குப் பிரகாரத்தில் உள்ள குதிரையைச் செய்தவர்கள் நல்லையகவுண்டன் பாளையம் காசிலிங்கக் கவுண்டர் என்று அக்குதிரையின் பீடத்தில் உள்ள கல்வெட்டால் அறிகின்றோம்.

வெள்ளோடு நல்லைய கவுண்டன் பாளையம்*
நல்லைய கவுண்டன், குமாரன் முதலியாக் கவுண்டன்,
குமாரன் காசிலிங்கக் கவுண்டன், உபையம்.

பிற குதிரைகள் அர்த்தநாரி பாளையம், சித்தரெட்டி பாளையம், மயிலாடி ஆகிய ஊர்களைச் சேர்ந்த சாத்தந்தை குலத்தாரின் திருப்பணிகள் என்பது பரம்பரைச் செவிவழிச் செய்தியால் அறியப்பெறும் செய்தியாகும். வெள்ளோட்டில் உள்ள பிற கோயில்களுக்கும் பல திருப்பணிகள் செய்துள்ளனர். பொன் காளியம்மன் கோயில் கல்வெட்டில் சாத்தந்தை குல ராக்கியாக் கவுண்டர் மக்கள் மாரப்ப கவுண்டர் முத்துக்கவுண்டர் ஆகியோர் பெயர்களைக் காணுகின்றோம்.

## கனகபுரம்

கனகபுரத்தில் உள்ள சித்திவிநாயகர் கோயிலில் சாத்தந்தை குலத்தில் காலிங்கராயன் வழிவந்த காசிலிங்கக் கவுண்டர் திருப்பணி பற்றிய கீழ்க்கண்ட கல்வெட்டு உள்ளது.

> ''காலிங்கராயன் வங்குஷத்தில், சாத்தந்த கோத்திரம் தென்முகம், வெள்ளோடு காசிலிங்கக் கவுண்டன் உபையம்'

என்ற கல்வெட்டு முன் மண்டபத்தில் காணப்படுகிறது. கனகபுரத்தில் உள்ள கனகமலைக் குமரர் கோயிலில் உள்ள கல்வெட்டால் கனகபுரம் சாத்தந்தை குலத்தினர் ஆறுமுக பண்டாரம் என்பவரைக் கொண்டு முருகன் கோயிலுக்கு வழிபாடு செய்ய ஏற்பாடு செய்தமை தெரிகிறது.

சுமார் 200 ஆண்டுகட்கு முன்பு தன் குல முன்னவர் கட்டிய அக்கோயிலுக்குச் சிறப்புடன் திருப்பணிகள் செய்து 4-7-1977இல் குடமுழுக்கு விழாவைக் கனகபுரம் மணியகாரர் திரு. கே. சண்முகராமசாமிக் கவுண்டர் அவர்கள் நடத்தினார்கள்.

## கவுண்டச்சிபாளையம்

காலிங்கராயன் பவானியாற்றில் அணை கட்டும்போது அணைக்கட்டிடம் அடிக்கடி நிற்காமல் சிதைந்து போயிற்

றாம். அதன்பொருட்டுக் காவல் தெய்வமாக இருக்கப் பூந்துறை நாட்டு அனுமன் பள்ளியிலிருந்து அம்மன் தெய்வம் ஒன்றைக் காலிங்கராயர் ஒரு வண்டியில் ஏற்றிக்கொண்டு சென்றார். அத்தெய்வம் வெள்ளோட்டின் வடக்கே உள்ள கவுண்டச்சி பாளையத்தின் தெற்கு எல்லையில் வரும்போது வண்டியின் அச்சு முறிந்து அங்கேயே குடிகொண்டு விட்டதாம். அந்த அம்மன்தான் பாலமடை அம்மன் என்ற பெயரில் காலிங்கராயன் அணை உள்ள வடக்குத்திசை நோக்கிக் கவுண்டச்சி பாளையத்தின் தெற்கில் குடி கொண்டுள்ளது. அக்கோயில் திருப்பணியைக் கனகபுரம் காலிங்கராயன் வழியினரான சாத்தந்தைகுலக் கொளந்த வேல் கவுண்டர் செய்ததாகப் பாலமடை அம்மன் கோயில் மகாமண்டப விதானக் கல்வெட்டுக் கூறுகிறது.

> றாமசெயம் சுபமஸ்து விசயாப்புதய சாலிவாகன சகாப்புதம் 1772 கலியுக சகாப்புதம் 4951க்கு மேல் நடக்கும் சார்வரி வருஷம் தை மாதம் 25 தேதி பெற்ற நவமி வெள்ளிக்கிழமை...நட்செத்திரம் சவுபாக்கிய நாமயோகம் யிந்த சுபதினத்தில் சாத்தந்தி கோத்திரம் காலிங்கராய கவுண்டன் வம்மிஷ வெள்ளோடு கனகபுரம் காசிலிங்க கவுண்டன் மகன் முத்துக் கவுண்டன் மகன் பழனி வேலப்ப கவுண்டன் மகன் கொளந்த வேல் கவுண்டன் செயிவிச்ச பாலமுடி அம்மன் கோயில் திருப்பணிவேலை முடிந்தது உபயம்.

பாலமடை அம்மன் கோயிலின் வெளியே உள்ள தீபத்தம்பத்தின் திருப்பணியைச் செய்தவர்கள் கன்னிமார் வலசு சாத்தந்தை குலப் பொதுமக்கள் ஆவர். 1978இல் நடைபெற்ற குடமுழுக்கு விழாவுக்கு வருகை புரிந்த ஊத்துக்குழி ஜமீன்தார் அமரர் அகத்தூர் முத்துராமசாமிக் காலிங்கராயர் அவர்களின் மூத்த திருமகனார் AMR கிருஷ்ணசாமிக் காலிங்கராயர் அவர்கள் இக்கோயில் முன் மண்டபத்தைக் கட்டி 23-3-1979இல் இறைவனுக்கு அர்ப்பணம் செய்தார்.

பாலமடை அம்மனின் பழைய திருமேனிக்குக் குடுமியாம் பாளையம் யு. ஆர். சின்னசாமிக் கவுண்டர் அவர்கள் தனிச் சந்நிதி கட்டியுள்ளார்.

## எலவமலை

சாத்தந்தை குலத்தாரின் காணி ஊர்களில் எலவமலை யும் ஒன்று. பூந்துறை நாட்டு ஊர்த்தொகைப் பாடலில் 'சேர்ந்துமழை பெய்திடும் எலவமலை' என்று கூறப்படுகிறது. பூந்துறை நாட்டு 32 ஊர்களில் 28ஆம் ஊராகும். பவானி ஆற்றின் தென்கரையில் உள்ள எலவமலையில் அவ்வாற்றங் கரையிலேயே உள்ள செல்லாண்டி அம்மன் கோயிலைக் கட்டியவர்கள் மூவரில் இருவர் சாத்தந்தை குலத்தினர். இவ்வூர் இலவமலை, இலகுமலை, எலவமலை, எலகமலை எலவ மூலை என்றும் அழைக்கப்படுகிறது. அக்கோயிலில் மகாமண்டப விதானத்தில் கீழ்வரும் கல்வெட்டுக் காணப் படுகிறது.

> 'விரோதிகிருது வருஷம் அப்பிசை மாதம் 25 தேதி யீறோடு தாலூகாவுக்குச் சேர்ந்த யெலகமலையிலே யிருக்கும் பெரியண கவுண்டன் மகன் லிங்க கவுண்டன் சின்னியம் பாளையத்திலிருக்கும் செல்ல குமார கவுண்டன் மகன் விஜய கவுண்டன் குப்பாண்டி மகன் முத்தாண்டி மூவருமாக கூடி செல்லாண்டி அம்மன் திருப்பணி வேலை முடிச்சது சம்பூரணம் சதாசேவை'

இக்கோயில் திருப்பணி செய்த எலவமலைச்சாத்தந்தை, சின்னியம்பாளையம் சாத்தந்தை குலத்தார் ஆகியோருடன் பெருமாபாளையம் (ஜம்பை, எலவமவை, ஓடத்துறை, தாசம் பாளையம், கருக்குப்பாளைம், செங்குட்டப் பாளையம், சாமியம்பாளையம் போன்ற வேறு பல ஊர்களில் இருக்கும் சாத்தந்தை குலத்தினரும் எலவமலை செல்லாண் டியம்மன் கோயிலுக்குரியவர்களாகத் திகழுகின்றனர்; வந்து வழிபடுகின்றனர்.

## வெள்ளிரவெளி

குறுப்பு நாட்டுக் குன்றத்தூரை (குன்னத்தூர்) அடுத்துள்ள சிற்றூர் வெள்ளிரவெளி. வீரபாண்டியன் ஆட்சிக்காலத்தில் பெரும் காடாக இருந்த அப்பகுதியை அழித்துக் குளங்கள் வெட்டி ஊர் ஏற்படுத்திக் காலிங்க ராயன் மக்களைக் குடியேற்றியுள்ளார். காலிங்கராயர் அப்போது ஏற்படுத்திய ஊர்களில் வெள்ளிராவளி ஒன்று எனக் குன்னத்தூர்க் கல்வெட்டுக் கூறுகிறது.

வெள்ளிரவெளியின் தென்கிழக்கே மாங்குட்டை என்னும் பகுதியில் உள்ள கரியகாளியம்மன் கோயிலை வெள்ளிரவெளிக் காணியாளர்களில் வென்னோடு சாத் தந்தை குலத்துச் சின்னக்கவுண்டர் திருப்பணி செய்ததாக அக்கோயில் கிழக்குச் சுவர்க் கல்வெட்டுக் கூறுகிறது. தீபத்தம்பக் கல்வெட்டில் கொண்டத்துக் காளியம்மன் எனக் குறிக்கப்படுகிறது. இக்கல்வெட்டு மூலம் காலிங்கராயன் தன் பங்காளிகள் மீது எவ்வளவு பற்றுக்கொண்டு புதியதாக ஏற்படுத்திய நிலப்பகுதியைப் பங்காளிகட்கு அளித்துக் குடியேற்றியுள்ளார் என்பதை அறிகின்றோம். இக் கல்வெட்டு விரிவாகச் சாத்தந்தை சின்னக்கவுண்டரின் திருப்பணிகளை விவரிக்கிறது. இன்று அக்கோயிலுக்குரிய சாத்தந்தை குலத்தினர் அருகேயுள்ள மயிலம்பாளையத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

மயிலம்பாளையம் திரு எம்.எஸ். சின்னசாமிக் கவுண்டர் அக்கோயில் திருப்பணியைத் தொடங்கினார். அவர் மகன் வெள்ளிராவெளி திரு எம்.சி. பழனிச்சாமிக் கவுண்டர் அக்கோயிலின் நிருவாகியாக உள்ளார். அக்கோயிலில் உள்ள கல்வெட்டு:

ஸ்வஸ்திஸ்ரீ சாலிய வாகன சகாத்தம் 1726 கலியுக சகாத்தம் 4905 யிதின்மேல் செல்லா நின்ற ரத்தாட்சி வருசம் புரட்டாசி மாசம் 30 தேதி சனிக்கிழமை விசய தசமி திருவோண நட்செத்திரந் திருவினாம யோகமுங்

கூடின சுபதினத்தில் குன்றத்தூர் வெள்ளிரவெளி கரிய காளியம்மனுடைய கோவில் திருப்பணி ஆரம்பம் மகாராசராய ஸ்ரீயிங்கிலீசு கும்பினியார் நாளில் கெற்பக் கிறகம் அற்த்த மண்டபம் மகாமண்டபஞ் சுத்துப் பிரகாரத் திருமதிள் ரத நிற்மானமும் உண்டுபண்ணி யிதினுடன் குறோதன வருஷம் புரட்டாசி மாசம் 27 தேதி வியாளக்கிழமை அமரபட்சத்து துதிகை அசுபதி நட்செத்திரம் வச்சிரனாம யோகம்தைதுலவாகரணமும் அமுர்த யோகம் பெற்ற நாளில் கெற்பக்கிறகம் அர்த்த மண்டபமு மகாமண்டப விக்கிறகம் முதலான சம்புறோட்சனையும் செய்து மகாசம்புறோட்சனையும் செய்து ரதோஸ்ஸவமும் நடப்பிவிச்சவன் குறுப்புனாடு குன்றத்தூர் வெள்ளிரவெளி காணியாழக் கவுண்டகளில் வெள்ளோடு சாத்தந்தை கோத்திரத்தில் திருவேங்கடக் கவுண்டன் குமாறன் சுப்பிரமணியக் கவுண்டன் புத்திரன் சின்னக் கவுண்டன் உபையம் உ.

## கூகலூர்

காஞ்சிக் கூவல் நாட்டுக்குரிய தொன்மையான பன்னிரு ஊர்களில் இரண்டாவதாகக் குறிப்பிடப்பெறுவது கூவலூர். ஊர்த்தொகைப் பாடலில் 'பண்பான கூவலூர்' என்று சிறப்பிக்கப் பெறுவது. இன்று 'கூகலூர்' என்று கூறப்படு கிறது. இக்கூகலூர் சாத்தந்தை குலத்தாரின் காணி ஊர் என்று முன்பே கண்டோம்.

அவ்வூரில் உள்ள தொன்மையான சிவாலயம் இன்று மத்யபுரி ஈசுவரர் கோயில் என அழைக்கப் பெற்றாலும், கல்வெட்டில் நட்டூர் ஆண்ட நாயகன் கோயில் என அழைக்கப்படுகிறது.

அவ்வூரில் வாழ்ந்த சாத்தந்தை குலத்துப் பழனியப்பக் கவுண்டர் பச்சையப்பக் கவுண்டர் இருவரும் சேர்ந்து 5 ஏக்கர் 63½ சென்ட் நன்செய் நிலத்தைக் கூகலூர்ச் சிவன்

கோயிலுக்குக் கொடையாக அளித்தனர். அப்போது அக்கோயில் அறங்காவலராக இருந்தவர் கூகலூர்ச் சாத்தந்தை குலத்துக் கந்தப்பக் கவுண்டர் என்பவர். இவ்வறச் செயலை விளக்கும் கல்வெட்டு அழகிய ஆசிரியப்பா வடிவில் அக்கோயில் முன் வாயில் மண்டபத்தில் வெட்டப் பட்டுள்ளது.

கடல்புடை சூழ்ந்த காசினி தன்னில்
கலியுக மய்யா யிரத்திரு பதினில்
காளயுக் தியாண் டைப்பசி மதியில்
காஞ்சிக் கூவல் நாட்டுள் கூவலூ ர்
மத்யபுரி ஈசனென மறுபெயர் கொண்ட
நட்டூ ராண்ட நாயனார் தமக்குக்
கூவலூர் வேளாண் குடிச்சாத் தந்தை
இளையண வேள்தவத் தெய்திய புதல்வன்
பழனி யப்பனும் ஒருபழனி யப்பன்சேய்
பச்சையப் பனுமாய் இருவரும் மனமொத்து
எழுதிவைத் திட்ட தரும சாசனம்
கூவலூர் புதுவாய்க் கால்பாய் நஞ்சையில்
பரமன் மடைஎனும் பண்புள வயலில்
எங்களுக் குரிய ஏக்கரா நாலு
செண்டறு பத்து மூன்றரை யுடனே
மேவானிக் கிராமம் ராஜவாய்க் கால்பாய்
தேர்புளி யல்எனத் திகழ்தரு நஞ்சை
ஏக்கரா ஒன்றும்இவ் விரண்டும் சேர்ந்து
ஏக்க ரைந்துடன் அறுபத்து மூன்றரை
செண்டுங் கொண்டஇவ் விரண்டு பூமியும்
இருபத்து நாலடிச் சதுரக் குழிகள்
நானூத் திரண்டரை யுள்ள ததில்
வருடந் தோறும் வருதானி யத்தில்
அவ்வக் காலத்து அரசிறை செலுத்தி
மீதி யுள்ளதில் பாதி தானியம்
காலையா லயத்தில் வேதம் ஓதியும்

மாலையிற் சிவன்உமைக் காயிர நாமமும்
கணபதி கந்தவேள் அஷ்ட்டோத் திரசதம்
சொல்லும் வைதிக அந்தணன் பெறவும்
பின்னும் பாதியில் பாதி தானியம்
அபிஷேக அர்ச்சனை செய்யும் அந்தணர்
அன்ன நிவேதனமாச் செய்து பெறவும்
மீதி யுள்ளதில் வில்வம் விளக்கு
பாயச நிவேதனம் பண்ணிவித் தற்குமாம்
இறைவன் கோவில் தரும கர்த்தன்
எங்கள் குலத்தில் கந்தப் பனிடம்
விடுத்த பூமி தேவ தானம்
எங்கள் சந்ததிக் கிப்பூ மிகளில்
யாதொரு தொடர்பும் இல்லை அவர்கள்
தருமம் தன்னைத் தான்கவ னித்து
என்றுநீ டூழிநடத்த
மன்று ளாடுவார் மலர்ப்பதம் போற்றி

இவ்விவரம் தற்கால ராஜாங்கத்தில் பதிவு செய்திருக்கும் பத்திரங்களில் பார்க்கலாம். இங்ஙனம் பழனியப்பக் கவுண்டன், பச்சியப்பக் கவுண்டன், மரகதாம்பிகை சகாயம்.

## கொடுமணல்

குறுப்பு நாட்டு 35 ஊர்களில் 32ஆம் ஊராகக் குறிக்கப் பெறுவது கொடுமணல். சங்க இலக்கியமாகிய பதிற்றுப் பத்தில் கொடுமணம் என்று குறிக்கப்படும் ஊர் இதுவே. தொல்பொருள் சிறப்பு மிக்க பேரூர். சங்க காலத்தில் கல்மணிகளும் சங்கு ஆபரணங்களும் வண்ணப் பாசிகளும் இரும்பு ஆயுதங்களும் செய்யும் தொழிற்சாலைகள் இருந்த மூதூர். தமிழ்ப் பல்கலைக் கழகக் கல்வெட்டுத் துறையினர் அங்கு அகழாய்வு நடத்திக் கொடுமணலின் தொன்மைச் சிறப்பை வெளிக்கொண்டு வந்துள்ளனர்.

அவ்வூருக்குரிய காணியாளர்கள் கொங்கு வேளாளரில் பனங்காடை, சேரன், பாண்டியன் குலத்தினரும், தேவமாரில் கணக்கன் குலத்தினரும் ஆவர். பயிரன் குலத்திற்கும் அவ்வூருக்கும் தொடர்பு உண்டு.

சாத்தந்தை குலத்தினர் இன்று அவ்வூரில் இல்லை. ஆனால் சாத்தந்தை குலத்தாரால் திருப்பணி செய்யப்பட்டு மொசக்குத்தி பாளையம் பகுதியில் வாழும் சாத்தந்தை குலப் பெருமக்களால் இன்றும் வழிபடப்பெறும் இராமசாமி கோயில் அவ்வூர் நடுவில் உள்ளது. அக்கோயில் தூண்களில் உள்ள இரு கல்வெட்டுக்களில் சாத்தந்தை குலத்தார் திருப்பணி குறிக்கப்பட்டுள்ளது.

கொடுமணல் இலக்கியத்தில் அக்கோயில் 'சிரங்க ராமர்' கோயில் எனக் குறிக்கப்பட்டுள்ளது.

உயிந்த தூணு சாத்தந்தை குலம் செம்பா
கவுண்டன் மகன் சின்னய கவுண்டன் உபயம்
உயிந்த தூணு சாத்தந்தை குலம் குப்பிச்சி
கவுண்டன்மகன் செலம்ப கவுண்டன் உபயம்

என்பன இராமசாமி கோயில் கல்வெட்டுக்களாகும்.

## விசயமங்கலம் பெருமாள் கோயில்

குறுப்பு நாட்டு ஊர்களில் முதன்மையும் தலைமையும் வாய்ந்தது விசயமங்கலம். 'ஓங்கு தமிழ்சேர் விசயமங்கை', 'செந்தமிழ் மங்கை' எனச் சிறப்பிக்கப்படுவது. தமிழ்ச் சங்கம் திகழ்ந்த ஊர். பெருங்கதை ஆசிரியர் கொங்கு வேளிர் பிறந்த ஊர். நன்னூலும் வச்சணந்தி மாலையும் அடியார்க்கு நல்லார் உரையும் அரங்கேறிய ஊர். வரலாற்றுச் சிறப்புமிக்க ஊர். சங்ககால வாகையே விசயமங்கலம் எனச் சமணரால் அழைக்கப்பெற்றது. சந்திரப்பிரப தீர்த்தங்கரர் என்னும் சமண சமயக் கோயில் இன்றும் நல்ல நிலையில் அங்கு உள்ளது. திகம்பர சமணர் வாழ்ந்த பேரூர்.

கொங்குச் சோழ மன்னன் காலத்தில் விசய மங்கலம் சாத்தந்தைகளில் சிறியான் தேவனான முடிகொண்ட சோழ மாராயன் என்பவர் விசயமங்கலம் பெருமாள் கோயிலான கரிய மாணிக்கப் பெருமாள் கோயிலுக்குத் திருப்படிமாற்றுக்கு இருபத்தொன்பது அச்சு கோயில் பண்டாரத்தில் செலுத்தினார் என்று அக்கோயில் கல்வெட்டுக் கூறுகிறது. அவர் பெயரிலிருந்து அவர் சோழ அரசியல் அலுவலராக இருக்கலாம் என்று தெரிகிறது. சிறியான் தேவன் அவருடைய இயற்பெயர். முடிகொண்ட சோழ மாராயன் என்பது கொங்குச் சோழ அரசனால் அளிக்கப்பெற்ற சிறப்புப் பட்டப்பெயர்.

அக்கோயில் கொங்கு வேளாளர்களாகிய உழவர் கட்குரியது என்னும் பொருளில் சித்திரமேழி விண்ணகரம் என்று இக்கல்வெட்டில் குறிக்கப்படுகிறது.

> ஸ்வஸ்திஶ்ரீ நன்மங்கலம் சிறக்க கோவிராசகேசரி பன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஶ்ரீராசேந்திர தேவற்குத் திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற திருநல்லி யாண்டு பத்தாவது ஐப்பசித் திங்களில் குறுப்பு நாட்டு விசையமங்கலத்து திருமேற்கோயில் சித்திரமேழி விண்ணகராழ்வார்க்கு திருப்படிமாற்றுக்கு இருபத் தொன்பதச்சு எம்பெருமான் ஶ்ரீபண்டாரத்து ஒடுக்க இவ்வமுதுபடி நித்தனானாழியமுதுபடி செய்வதாகக் கல்வெட்டுவித்தேன் விசையமங்கலத்து வெள்ளாளன் சாத்தந்தைகளில் சிறியான் தேவனான முடிகொண்ட சோழமாராயனேன் தர்மஞ் சந்திராதித்தவரை செல்வ தாக இத்தன்மம் இடங்கை தொண்ணூற்றொன்பது ரக்ஷை இறக்குவான் வழியேழச்சமறுவான்

## விசயமங்கலம் சிவன்கோயில்

விக்டோரியா மகாராணியார் ஆட்சிக்காலத்தில் 19ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் விசயமங்கலம் சிவன் கோயிலான நாகேசுவரன் கோயிலில் சில திருப்பணிகளைச்

செய்ததில் சில காணியாளர்களில் சாத்தந்தை குலக் கம்புளியம் பட்டி மணியம் சின்ன ரங்கயக் கவுண்டர் முன்னின்றுள்ளார். கல்வெட்டில் கூனம்பட்டி மாணிக்க வாசகர் திருமடத்துத் தலைவர் இராசலிங்க மாணிக்கவாசக சுவாமியார் இவர்களுக்குக் குரு என்று கூறப்பட்டுள்ளது.

விசயமங்கலம் நாகேசுவரன் கோயிலின் வடக்கு உள்பிரகாரம் ஒழுகாப் பந்தி மண்டப மேல் விதானத்தில் கீழ்வரும் கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது:

சுபமஸ்து சொஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1791 கலியுக சகாப்தம் 4970 விப அற்பிசி மாதம் குருப்பனாடு விசையமங்கலம் வகைறா கிராமங்களின் மிறாசுதார்கள் அஞ்சு பங்காழிகளும் அவர்கள் அண்ணன் தம்பி மாமன் மைத்துனர் வகைறா பதினொரு கோத்திரத்துக்கும் பட்டக்காரர் பொருளந்தை கோத்திரத்தில் மூணாவது பங்கில் துடுப்பூதி குமாறசாமிக்கவுண்டர் இவர்களுக்குக் குருவாகிய கூனம்பட்டி மாணிக்கவாசகர் மடம் றாசலிங்க மாணிக்கவாசக சுவாமியார் அவர்களுட நாளையில் இந்திய சர்க்கார் மகாறாணியாறவர்கள் அறசாச்சியில் யிங்கிலசு துறைத்தனத்தில் யிந்துமத தேவஷ்தான விசாரணைக்கி பெருந்துறைத்தாலூக் காவுக்கு நேமுகமாயிருக்கிற கம்மிட்டியார்களில் ஒரு வராகிய மேல்கண்ட அஞ்சு பங்காழிகளில் நாலாவது பங்கில் சேர்ந்த சாத்தந்தை கோத்திரத்தில் கம்புளியம் பட்டி நாகப்ப கவுண்டர் மகன் சிலம்பந கவுண்டர் மகன் மணியம் சின்ன ரங்கைய கவுண்டர் யிந்த நாகேசுபறசுவாமி கோயில் ஒழுகாப்பந்தி மண்டபங்கள் சிகஸ்த்தாயி பிரிஞ்சு விழுந்ததை மேல்கண்டபடி மற்ற கம்மிட்டியார்களில் கிஷ்ணய்யர் இரணியப்ப அய்யர் சாமய்யற் சீனிவாசய்யற் பெரிய அண்ணா அய்யர் இவர்களை தருவித்து பார்வையிட்டு அவர்கள் சேந்து எழுதிய உத்தரவின்படிக்கி யிந்த இந்து தேவஸ்தானத்

துக்கு தற்மகர்த்தாவாக நேமுகமாய் இருக்கிற மேல்கண்ட அஞ்சு பங்காழிகளில் முதலாவது பங்கில் சேந்த சீரங்கனாத கவுண்டர் 1 நாலாவது பங்கில் சேந்த பட்டக்காரக் கவுண்டர் யிவர்கள் வசமிருந்த கசர் லாபத் துகையிலும் மேல்கண்ட சின்ன ரங்கப்ப கவுண்டர் சொந்தத் துகையிலும் சிலவு செய்து அஸ்திபாரங்கண்டு பிரித்துப் புதுசாயி கட்டிவைச்சு கொறட்டு வாசல் மண்டபமும் கெருடகம்பத்து கொறடும் சிகஸ்தாயிருந்ததை துரஸ்து செய்து வைச்சது உபயம் உ சிவமயம்

## குன்னத்தூர்

கொங்குப் பாண்டிய மன்னன் வீரபாண்டியன் ஆட்சிக் காலத்தில் சிறுவலூர் வெள்ளாளன் சாத்தந்தை கேசவன் என்பவரின் மனைவி அந்தியூராண்டி என்பவள் குன்னத்தூர் குன்றமுடையார் என்னும் சிவன் கோயிலுக்குச் சில கொடைகளை அளித்துள்ளாள். அதைக் குறிக்கும் கீழ்வரும் கல்வெட்டின் பிற்பகுதி அழிந்து விட்டது.

ஸ்வஸ்திஸ்ரீ நன்மங்கலம் சிறக்க ஸ்ரீ வீரபாண்டிய தேவற்கு யாண்டு 17வது மார்கழி மாத முதலாக குறுப்பு நாட்டில் சிறுவலூர் வெள்ளாளன் சாத்தந்தை களில் கேசன் மனைக்கிழத்தி அந்தியூராண்டியேன் குறுப்பு நாட்டில் குன்றத்தூர் நாயனார் குன்றமுடை....

## அகத்தூர் அம்மன் கோயில்

வெள்ளோட்டிலிருந்து காவடிக்கா நாட்டுக்குக் காலிங்கராயர் சென்றபின், ஜமீன் ஊத்துக்குழியில் மாளிகை கட்டி வாழ்ந்தனர். அகத்தூர் அம்மன் என்ற பெயரில் அருகில் அம்மன் ஆலயம் க்ட்டிக் குலதெய்வமாக வழிபட்டு வந்தனர். காலிங்கராயர் மரபின் முன்னோர் கட்டிய அக்கோயில்களில் காலிங்கராயர் பெயர் பொறித்த மூன்று

கல்வெட்டுக்களைக் காணுகின்றோம். அதன் மூலம் பூந்துறை நாட்டில் கால்வாய் வெட்டி அணை கட்டிய காலிங்கராயர் வழியினர் பொள்ளாச்சி ஜமீன் ஊத்துக்குழி காலிங்கராயர் மரபு என்பதை அகச்சான்றுகளுடன் அறிகின்றோம்.

## அகத்தூர் அம்மன் கோவில் மேல்விதானக் கல்வெட்டு

சுபமஸ்து ஸ்வஸ்தி ஸ்ரீமன் மகாமண்டலாதிபதி எம்மண்டலமுந் திறை கொண்டருளிய நான்கு சிம்மாசனாதிபதி மகாமண்டலேசுவரன் ஆணை குந்திச் சமஸ்தானம் சதாசிவராயன் புத்திரன் வீரநரசிம்மராயர் அரசாட்சி ராமராயர் நாளில் சாலிவாகன சகாப்தம் 1203 கலியுக சாகப்தம் 4382 மேல் செல்லா நின்ற விய வருடம் தை மாதம் 5 ஆம் தேதி சப்தமி நட்சத்திரம் அமிர்த சித்தியோகம் கேரசைவாகாளம் பெற்ற சுபதினத்தில் சமஸ்தானத்தில் ராயர் பட்டாபிஷேகமும் பெற்று தம்முடைய காணியாட்சியாகிய பூந்துறை நாட்டில் பவானியாற்றில் அணை கட்டி சந்திராதித்தாருள்ள மட்டுக்கும் காலிங்கராயன் அணை என்கிறதாகப் பேர் பிரசித்தியாகச் செய்து காவடிக்கா நாட்டில் ஊத்துச்குளி பாளையக்காரனாகப் பேர் வாங்கி ராயர் பட்டாபிஷேகம்...................... பத்தாம் பட்டக்காரனாகிய குமாரசாமிக் காலிங்கராயக் கவுண்டர் அவர்தம்பி சின்னைய கவுண்டர் நாட்டு மணியம் குழந்தைவேலுப் பிள்ளை சம்பிரதி குமரகுருபரம்பிள்ளை போடி பாளையம் மணியம் சாமிக்கவுண்டன் இவர்கள் முதலான சகலரும் சுகத்திலிருக்கும் படியாய ஆதி....................அகத்தூர் அம்மனுக்குப் பந்தக்கால்...........திருப்பணி உபயம் ஐயாறு குட்டியாசாரி மகன் ஏமுராயன் கைவேலை அகத்தூர் அம்மன் லட்சிக்கவும்.

## விநாயகர் ஆலயம் நிலைவாயில் இடப்புறம் உள்ள கல்வெட்டு

விய வருடம் புரட்டாசி மாதம் 25ஆம் தேதி வெள்ளிக்கிழமை தசமி நாளிகை 25 திருவோண நட்சத்திரம் நாளிகை 24 திரிதிரிநாமயோகம் நாளிகை 16 வகெதசை நாளிகை 24 சுபதினத்தில் றாயஸ்ரீ பட்டம் குமாரசாமி காலிங்கராயக் கவுண்டர் தங்கள் விக்னேசுவரன் கோவில் திருப்பணி செய்து நிறைவேற செய்விச்சுது குருநாத ஆசாரி மகன் பத்திரனாசாரி

## மேற்படி கோயில் கல்வெட்டு

சாலிவாகன_ சகாப்தம் 1730 கலியுக சகாப்தம் 4615 மேல் செல்லா நின்ற ஸ்ரீ கார்த்திகை மாதம் 25 ஆம் தியதி சுக்கிரவாரமும் சப்தமி 16 பரிநாமயோகமும் பெத்த சுபதினத்தில் ஊத்துக்குளிப் பாளையக்காரர் பட்டாபிஷேகம் பெற்ற......அவர்கள் குமாரர் குமார சாமிக் காலிங்கராயக் கவுண்டர் அவர்கள் தங்கள் அகத்தூர் அம்மனுக்கு கருட கம்பம் உபயம்.

## ஜமீன் ஊத்துக்குளி கிணறு (ஊற்றுக்குழி)

ஈஸ்வர வருடம் ஆவணி மாதம் 20 தியதி சுபமஸ்து

## பெனுகொண்டா

காலிங்கராயர் மரபில் வந்த ஒரு பாளையக்காரர் விசய நகர அரசரைப் பார்க்கச் செல்லுகையில், அரசர் பேட்டி கிடைக்காமல் நகருக்கு வெளியே தென்புறம் உள்ள காளி கோயிலில் தங்கியிருந்தார்.

பின்னர் அரசன் மகனுக்கு வந்திருந்த நோயைக் காளி தேவியின் தயவால் நீக்கிப் பின்னர் அந்தக் காளிகோயிலுக்குப் பல திருப்பணிகள் செய்தார் என்றும் கூறப்படுகிறது.

அற்புதச் சிற்ப வேலைப்பாடுகளுடன் காலிங்கராயர் கட்டிய மண்டபம் இன்றும் சிறப்புடன் அங்கு விளங்குகிறது.

## கொங்கூர்

தாராபுரம் வட்டத்தில் உள்ள தொன்மையான மூதூர் கொங்கூர். அவ்வூருக்குக் கொங்கு என்ற பெயரும் உண்டு. அவ்வூர்ப் பசுபதி ஈசுவரருக்குக் கொங்குச் சோழ மன்னன் வீர ராசேந்திரன் காலத்தில் வெள்ளாளன் சாத்தந்தைகளில் பிள்ளான் தேவன் என்பவர் சில கொடைகளை அளித்துள்ளார். அவர் கொங்குச் சோழர் காலத்து அரசியல் அலுவலராக இருந்திருக்க வேண்டும்.

மேற்கண்ட கல்வெட்டுக்கள் மூலம் சாத்தந்தை குலத்துப் பெருமக்களும் பெண்டிரும் கொங்கு நாடெங்கும் பல்கிப் பரந்து வாழ்ந்தனர் என்றும், அவர்கள் எங்கு வாழ்ந்தாலும் அங்குள்ள கோயில் திருப்பணிகள் புரிவதிலும் கொடைகள் அளிப்பதிலும் முன்னின்றனர் என்பதனையும் நாமறிகின்றோம்.

# சாத்தந்தை குலத்தாரின் குலகுருக்கள்

கொங்கு நாட்டின் பல வேளாளர் குலங்களுக்குக் குல குருக்கள் இருப்பது போலவே சாத்தந்தை குலத்தாருக்கும் குல குருக்கள் இருக்கின்றனர்.

திருமுருகன் பூண்டிக் கிரைய சாசனம் என்னும் பட்டயம் குலகுரு முறை பற்றி விரிவாகக் கூறுகிறது:

> 'கந்தமாபுரிப் பட்டணம் முதலுள்ள பதினெண் குலமும் இந்த திருமுருகன் பூண்டி ஆதீனத்துக்கு உடையவராகிய காசிப கோத்திரத்து மார்க்கண்டியக் குருக்களானபடியினாலே தன்னுடைய சிஷியனாகிய வீர விக்கிரம சோழியாண்டாக் கவுண்டர்'

> 'இந்த ஆதீனத்துக்குச் சுப்பிரமணியக் குருக்களான படியினாலே......இந்தக் குருக்களிடத்திலே தீட்சை திருமுடி செய்விச்சுக் கொண்டு'

என வரும் பகுதிகள் குருக்கள் இருந்தமையை உணர்த்தும். சில சமயம் சில குலத்தாருக்குக் குருக்கள் உரிமை மாறும் போது இந்தக் குலத்தாருக்கு இவர்தான் இனிமேல் குரு என்று பட்டாபிஷேகம் செய்து கொண்டதாக ஒரு கொங்குப் பட்டயம் கூறுகிறது.

சாத்தந்தை குலத்தாருக்கு பேரோடு அகிலாண்ட தீட்சிதர் என்பவர்கள் பரம்பரை பரம்பரையாகக் குல குருக்களாக உள்ளனர்.

> 'மேல்கரைப் பூந்துறை நாட்டுக்குச் சேந்த பேரோட்டுச்குப் பிரதி நாமதேயமான விருப்பாட்சி புரத்திலேயிருக்கும் ஞான சிவாச்சாரியார் இம்முடி அகிலாண்ட தீட்சிதர் பாதம் மறவாத மேல்கரைப் பூந்துறை நாட்டு...வெள்ளோட்டு சாத்தந்தை

கோத்திரம்...கன்கபுரம் எலவமூலை சாத்தந்தை கோத்திரம்'

என்பது திருவாணைக்காவல் அகிலாண்ட தீட்சிதர் செப்பேட்டில் காணப்படும் பகுதிகளாகும். இன்னும் அச் செப்பேட்டில் குலகுருவுக்கும் குடிமக்களுக்கும் உள்ள தொடர்புகள் கீழ்க்கண்டவாறு எழுதப்பட்டுள்ளது:

'னாங்கள் யெந்த னாட்டிலே யெந்த ஊருலேயிருந் தாலும் யெங்கள் கோத்திரத்தார் தலைக்கட்டு ஒன்னுக்கு னாகரம் பணம் அஞ்சு வருஷம் பிரதி குடுத்து சஞ்சாரம் வந்தபோது சஞ்சாரக் காணிக்கையும் அப் பணைப்படிக்கி ஒபதேசம் பாதபூசை முதலானதும் பண்ணிக்கொண்டு யெங்கள் வமுசத்தாறு புத்திர பவுத்திர பாரம்பரியமாயி பாத சன்னிதானத்தில் தீட்சை மகாமந்திர ஒபதேசம் பண்ணிக்கொண்டு சுவாமியார் தெண்டினை கண்டினை ஆணை ஆக்கினை அபராதத்துக்குள்ப்பட்டு நடந்து கொள்ளுவோமாகவும் யெங்கள் கோத்திரத்தார் யெந்த னாட்டிலே ஊரிலே காணி வாங்கி அதிகாரம் பண்ணினாலும் குடித்தனம் பண்ணினாலும் சுவாமியார் பாதத்துக்கு நடந்து கொள்ளுவோமாகவும் யிப்படிக்கு நடந்து வரும் காலத் தில் யிதுக்கு விகாதம் சொல்லாமல் பரிபாலனமாயி யெங்கள் வமுசத்தாற் பயபத்தியாயி நடத்தி வந்தவன் சுகமாயி தன சம்பத்தும் தானிய சம்பத்தும் புத்திர சம்பத்தும் அஷ்டைசுவரியமும் ஆயுளாரோக்கியமும் தேவப்பிறசாதமும் குருப்பிரசாதமும் மேன்மேலும் உண்டாயி கல்லும் காவேரிப் புல்லும் பூமி சந்திறாதித் தாள் உள்ளவரைக்கும் அகிலாண்ட யீசுவரர் கடாட்சத் துனாலே சுகமாயிருப்பார்கள் யிந்த சாசனம் படித்துப் பார்த்தவர்களும் செவியில் கேட்டபேரும் சுகமாயிருப் பார்கள்'

என வரும் செப்பேட்டுப் பகுதியால் குலகுருக்களிடம் குடிமக்கள் நடந்து கொள்ளும் முறைகளை விளக்கமாகக்

காணுகின்றோம். இடைக்காலத்தில் கால வேறுபாட்டால் இவ்வழக்கம் நின்றுவிட்டது. குல குருக்கள் குடிமக்களிடம் செல்லும் வழக்கம் நின்றுவிட்ட இடைக்காலத்தில் வெள்ளோடு இராசாக்கோயில் பூசாரிமார்கள் ஓரளவு தங்களால் இயலும் அருகில் உள்ள ஊர்களுக்கும், அறிமுக மானவர்கள் உள்ள ஊர்களுக்கும் சென்று கோயில் பிரசாதம் விபூதி அளித்து அத்தொடர்பை விடாமல் காப்பாற்றி வந்துள்ளனர். அண்மைக் காலத்தில் திருவானாணைக்காவில் உள்ள அகிலாண்ட தீட்சிதர் மரபினர் குடிமக்களைக் காணக் கொங்கு நாட்டில் யாத்திரை செய்கின்றனர் என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

பேரோடு நகரில் வாழ்ந்த குலகுருக்கள் பாசூர் குடியேறி இப்போது அங்கிருந்து திருவானைக்கா சென்று சிறப்புடன் வாழ்ந்து வருகிறார்கள்.

'ஆட்சிபெறும் பாசூர் அகிலாண்ட தீட்சிதர்தான்
காட்சிபெறப் போற்றிசெயும் கங்கா குலசீலன்'

என்பது சென்னிமலையாண்டவர் காதல் அடிகளாகும்.

'ஆவலுடன் மறையோருக்கு அக்கிரகாரம் அளிக்கும்
அகிலாண்ட தீட்சிதருக்கு அடிமைகளுண் டாக்கும்'

என்பது பூந்துறைப் புராணத்தில் காணும் சிறப்புச் செய்தி யாகும்.

வேறுசில இலக்கியங்களும் ஆவணங்களும் கூனம்பட்டி மாணிக்கவாசகர் திருமடத்து அதிபர்களைச் சாத்தந்தை குலத்தார் சிலர் குல குருக்களாகக் கொண்ட செய்தியைக் கூறுகின்றன. வெள்ளோடு சாத்தந்தை குல நல்லண கவுண்டர் மீது பாடப்பட்ட காதல் பிரபந்தத்தில்

'மண்டலத்தி லேவிசைய மங்கைநகர் மாணிக்கப்
பண்டிதராம் எங்கள்குரு பாதம் பணிவோமே'

என்ற தொடர் வருவதைக் காணுகின்றோம். மாணிக்க வாசகர் திருமடம் கூனம்பட்டியில் மட்டுமின்றி விசய

மங்கலம், அவிநாசி போன்ற இடங்களில் இருந்தது என்பதை அறிகின்றோம். இப்பாடல் மூலம் அங்கிருந்த திருமடங்களும் கூனம்பட்டி ஆதீனத்துக்கு உட்பட்டிருந்தது என்பது தெளிவாகிறது.

கி.பி. 1869ஆம் ஆண்டு விசயமங்கலம் சிவன் கோயிலில் சில திருப்பணிகளைக் கம்புளியம்பட்டி மணியம் சின்ன ரங்கய கவுண்டர் (இவர் நாகப்ப கவுண்டர் பேரனும் சிலம்பன கவுண்டர் மகனும் ஆவார்) என்பவர் செய்தார். அவர் இத்திருப்பணிகளை,

> 'குருவாகிய கூனம்பட்டி மாணிக்கவாசகர் மடம் நாகலிங்க மாணிக்கவாசக சுவாமியார் அவர்களுட நாளையில் இந்திய சர்க்கார் மகாறாணியாரவர்கள் அறசாட்சியில் யிங்கிலீசு துரைத்தனத்தில்'

செய்ததாகக் கூறுகின்றார். அரசருக்கு முன் குலகுருவைக் கூறியது இங்கே கவனிக்கத்தக்கது.

மெக்கன்சி பெருமகனாருக்கு 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கூனம்பட்டி மாணிக்கவாசகர் திருமடத்து அதிபர் தம் மடத்து வரலாற்றை எழுதித் தந்துள்ளார். அப்போது அவர் சென்னிமலையில் முகாமிட்டிருந்த செய்தி அந்த ஆவணத்தின் மூலம் தெரியவருகிறது. பூந்துறை நாட்டின் தலைமைத்தலத்தில் குறுப்பு நாட்டுக் கூனம்பட்டி ஆதீனகர்த்தர் தங்கியிருந்தது பூந்துறை நாட்டுக்கும் அவருக்கும் உள்ள தொடர்பை விளக்கும்.

## சாத்தந்தை குலம் - அரசர் தொடர்புகள்

கொங்கு வேளாளர்களில் சாத்தந்தை குலத்தினரின் வீரமும் பெருமையும் சிறப்பும் கருதிச் சேர சோழ பாண்டியர்களான மூவேந்தர்களும் பிற அரசர்களும் இக்குலத்தினருக்குச் சிறப்புக்கள் பல செய்துள்ளனர்; தொடர்பு கொண்டுள்ளனர். இதனை இலக்கியங்களும் தனிப்பாடல்களும் புகழ்ந்து கூறுகின்றன.

### மூவேந்தர் சூட்டும் முடி

வேளாளர்கள் அரசர்கட்கு முடி சூட்டும் உரிமை பெற்றவர்கள். இச்சிறப்புக் கருதியே வெண்ணெயூர்ச் சடையன் தங்கள் மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டன் இராமபிரானுக்கு முடிசூட்டினார் என்று கம்பர் இராமாயணத்தில் பாடுகின்றார்.

கொங்கு வேளாளரில் அக்கினி குலத்தார் சேரனுக்கு முடிசூட்டினார் என்று கொங்கு மண்டல சதகத்தில் வாலசுந்தரக் கவிராயர் கூறுகின்றார்.

திருமலை நாயக்கன் காலத்தில் இராமப்பையனுக்குச் சங்ககிரிப் பூந்துறைக் காடைகுல நண்ணாவுடையாரும் வெள்ளோடு சாத்தந்தை குல உலகுடையாரும் கனகமுடி சூட்டியதாகப் பாடல்கள் கூறுகின்றன.

செங்கண்ண குலத்தலைவராகிய பல்லவராயர் நாடிழந்த கரிகால் சோழனை அரசனாக்கி முடிசூட்டிவித்தனர் என்பதற்குச் சான்றுகள் உள்ளன.

பொருள்தந்த குலத்தார் அச்சுதராயன் முடியைக் காத்தனர் என்பது வரலாறு. தேவேந்திர குலத்துக் குழந்தை முத்துக் கவுண்டர் மூவேந்தருக்கும் வெண்கொற்றக் குடை கொடுத்தார். இவை வேளாளர்கள் அரசர்கட்குச் செய்த சிறப்புக்கள்.

ஆனால் வெள்ளோடு சாத்தந்தை குல உலகுடையாருக்கும், பெரிய குல வேணாடுடையாருக்கும், பயிரகுல

ஆனூர்ச் சர்க்கரை மன்றாடியாருக்கும், பூந்துறைக் காடை குல நண்ணாவுடையார் ஆகிய நால்வருக்கும் மூவேந்தர் முடிசூட்டினர் என்பது ஒரு பழம்பாடல் கூறும் செய்தி.

'வேணா டுடையான் வெள்ளோடு உலகுடையான்
ஆனூர்க்குச் சர்க்கரை மன்றாடி—வேணுபுகழ்
நாவேந்து பூந்துறைசை நண்ணா வுடையார்க்கு
மூவேந்தர் சூட்டும் முடி'

என்பது சிறப்புமிகும் அப்பாடலாகும்.

*சாத்தந்தை தேவணன்*
*சாத்தந்தை முத்து பெத்தான்*
*சாத்தந்தை திருமலை சரவண மன்றாடி*

என்ற மூன்று சிறப்புமிகு சாத்தந்தை குலத்தினரை ஒரு தனிப்பாடல் மிகவும் புகழுகின்றது. தேவணன் பேரனும் முத்து பெத்தான் மகனுமான திருமலை சரவண மன்றாடிக்கு மூவேந்தர் முடிசூட்டினர் என்ற செய்தி அப்பாடலில் கூறப்படுகிறது. அவருக்கு 'உலகில் மன்றாடி'ப் பட்டம் அளிக்கப்பட்டது. குலம் வகுக்கப்பட்ட குன்றாச் செய்தியும் இதே பாடலில் கூறப்படுவது சிறப்பு மிக்கதாகும்.

கொங்கினில் கலியுக சகாத்தநா லாயிரத்து
இருநூத்து ஏழுபத்தில்
குலோத்துங்க சோழனும் சேரனும் பாண்டியன்
குலமது வகுக்குநாளில்
மங்கைமணி சாத்தந்தை உலகில்மன் றாடிக்கு
வரிசைப்பட் டம்தரித்து
மன்னுகர வருடம்ஆ வணிதேதி பத்தினில்
வாய்ந்தசெவ் வாய்க்கிழமையில்
கங்கைகுலக் காலிங்க ராயவெள் ளோடு
காங்கயம்விசைய மங்கைநகரம்
காரைதொழு பாலதொழு அல்லாள புரமதில்
கடகமெனும் யானைகட்டி

முன்கையில் சந்தனம் உரைத்ததே வணன் உதவு
முத்துபெத்தா மகீபன்
முனைபெற்ற திருமலை சரவணமன் றாடிக்கு
மூவர்முடி சூட்டினர்களே

இப்பாடலில் தேவணன் என்பாரது உயர்ந்த பக்திச் சிறப்புக் கூறப்படுகிறது. இறைவனுக்குச் சாத்தச் சந்தனம் அரைத்துக் கொண்டிருக்கையில் சந்தனக் கட்டை தீர்ந்துவிடவே தன் முன்கைகளையே சந்தனக் கட்டைகளாக உரைத்த பெருமை கூறப்படுகிறது. பின்னர் இச்சிறப்பு பொதுவாக வேளாளர் அனைவருக்கும் ஏற்றிக் கூறப்பட்டது.

'இன்பு நலம்புவி யாவரும் மகிழ
முன்கைச் சந்தனம் உரைத்தமூ தறிவோர்'

என்றும்,

'தந்திமுகன் ஐங்கரற்கு இனிதாக முன்கையில்
சந்தனம் உரைத்தளித்து'

என்றும் தனிப்பாடல்கள் புகழுகின்றன.

இச்செய்தியைப் பலருக்குச் சிறப்பித்துக் கூறினாலும் வெள்ளோடு சாத்தந்தை குல உலகுடையாருக்கே உரியது என்று வாலசுந்தரக் கவிராயரும் தன் சதகத்தில் கூறுகிறார்.

'பூத்தந்த வானமும் சந்தன
மாதும் புனலொழித்துத்
தேய்த்தந்த முன்கையில் சந்தனம்
வாரிச் சிவன்மெய்யினில்
சாத்தந்தை கோத்திரன் உலகுடை
யான்செய் தவம்பெருக
வாய்த்தந்தக் கீர்த்தி தனைப்படைத்
தான்கொங்கு மண்டலமே'

என்பது அவர் சதகப் பாடலாகும்.

மூவேந்தர்கள் சிறப்புச் செய்த மற்றுமொரு புகழ்மிகு வரலாற்றுச் செய்தியை 'ஓதாளம் அலகுமலைக் குறவஞ்சி' என்ற கொங்கு நாட்டு இலக்கியமும் கூறுகிறது. ஓதாள குலத்துப் பெரிய பெருமாள் ஆட்சி உரிமை பெற்ற நாளில் உகாயனூர்ப் பகுதியில் நாட்டின் பகைவர்களை வென்ற காரணத்தால் மூவேந்தர்களும் சாத்தந்தை குலத்தலைவன் சரவண மகீபனுக்கு 'உலகுடைய மன்றாடி' என்ற உயர்மிகு பட்டம் தந்தனர் என்று புகழ்ந்து பாடுகிறது அந்நூல்.

'உகாயனூர்ப் பகுதியை உற்றிடும் குணவான்
சகாயமாய் வந்த சாத்தந்தை கோத்திரன்
பரசிவம் பேணும் பக்தனாய் மிளிரும்
சரவண மகீபனாம் தாட்டிகன் தனக்கும்
சேரனும் சோழனும் சிறப்புறு பாண்டிய
மாறனும் கூடியே மகிழ்வுடன்...........
வலிமை உகாயனூர் வாய்த்த சாத்தந்தை
குலசர வணற்குக் குணமுடன் மகிழ்வாய்
மன்னுல குடைய மன்றாடியாம் பட்டமும்
பன்னியே வாழ்த்திப் பரசினர் பெரிதும்'

என்பவை அப்பாடல் பகுதியாகும்.

## விசய நகர அரசரின் விருது

மூவேந்தர்கள் மட்டுமல்ல அவர்களுக்குப் பின் தென்னகம் முழுவதும் ஆட்சிபுரிந்த விசயநகரப் பேரரசர்களும் சாத்தந்தை குலத்தினருக்குச் சிறப்புக்கள் பல செய்தமைக்குச் சான்றுகள் கிடைத்திருக்கின்றன.

ஆனைகுந்தி என்பது விசயநகர அரசர்கட்குத் தாயகமான இடம். இது துங்கபத்திரை ஆற்றின் வடகரையில் உள்ளது. இதனால் விசயநகர அரசர்கள் ஆனைகுந்திராயர் எனவும் அழைக்கப்பட்டனர்.

அவ் விசைய நகர மன்னர்கள் காலத்தில் யாராலும் அடக்க முடியாத மிகப்பெரிய ஆற்றல் பெற்ற 'மசக்குதிரை'

என்ற குதிரையை அடக்கி, அசைக்க முடியாத பகைவர் கோட்டையை இடித்து வென்று விசய நகர மன்னனிடம் வேலைப்பாடுமிக்க சிவிகை (பல்லக்கு) ஒன்றினைப் பரிசாகப் பெற்றவர் சாத்தந்தை குலத்து வேளாளர் உலகுடைய காலிங்க மன்றாடி என்பவர். இதனை ஒரு பாடல் நமக்குவிளக்கிக் கூறுகிறது.

'திசைக்குமது புகழ்கொண்ட ராவுத்த ராயனே
 செகமன்னர் ரணகண்டனே
 சீரங்கப் பட்டணம் விசையநகர் மகராயர்
 சிம்மா சனத்துமுன்னே
மசக்குதிரை ஏறியே பூச்சக்கர வாளமதில்
 வய்யாளி நடனமிட்டு
 மாவுத்த ராவுத்தர் சீனத்தர் துலுக்கர்
 வாதித்து முனைகூறியே
அசைக்கமுடி யாதகெடி கோட்டையை இடித்துமே
 அயன்தூள் படுத்தியே
 ஆனைகுந் திக்குவரு ராயர்க்கு முன்னின்று
 அழகான சிவிகைபெற்றாய்
திசைக்குமது தென்நாகம் வெள்ளோடை அல்லாளம்
 நிருபன்சாத் தந்தைகுலனே
 நீதிபெறு உலகுடைய காலிங்க மன்றாடி
 நீலவான் பரிநகுலனே'

என்பது அப்பாடலாகும். இக்குதிரையை அடக்கிய மாபெரும் வல்லமையையே இன்று சாத்தந்தை குலத்தாரை மாமன் மைத்துனன்மார் விளையாட்டாக வேறு வகையாகக் கூறுவர் போலும்.

## நாயக்க அரசுக்கு நல்லுதவி

விசுவநாத நாயக்கர்—அரியநாத முதலியார் இருவரும் சேர்ந்து மதுரை நாயக்கர் ஆட்சிக்குட்பட்டு 72 பாளையப் பட்டுக்களை அமைத்தனர். 72 பாளையப்பட்டுக்காரர்

கட்கும் மதுரைக் கோட்டையில், 72 கொத்தளங்கள் பாதுகாவலுக்கு அளிக்கப்பட்டிருந்தது. சாத்தந்தை குலத்தினர் காலிங்கராயர் தலைமையில் 51 ஆம் கொத்தளத்தை மதுரை மாநகரில் காவல் புரிந்தனர்.

அப்போது விசுவநாத நாயக்கருக்கும் தென்பாண்டிச் சீமையான திருநெல்வேலியில் ஆட்சிபுரிந்த பஞ்சபாண்டியர் எனப்படும் பிற்காலப் பாண்டியர் மரபினர்க்கும் பெரும்போர் மூண்டது. அப்போது கொங்கு நாடு மதுரை நாயக்கருக்கு உட்பட்டிருந்தது. எனவே சாத்தந்தை குலத்தினரும் மதுரை நாயக்க மன்னர் விசுவநாத நாயக்கருக்கு ஆதரவாக நெல்லைச் சீமை சென்று போர் புரிந்து பெருவெற்றி பெற்றனர்.

திருமலை நாயக்கர் தளவாய் இராமப்பையருக்கு முடிசூட்டிய பூந்துறை நாட்டாரில் சாத்தந்தை உலகுடையாரும் ஒருவர்.

## மைசூர் அரசர்க்கு ஆதரவு

கொங்கு நாடு சில காலம் மைசூர் அரசர்க்கு உட்பட்டிருந்தது. மைசூர் அரசர்களும் கொங்கு வேளாளர் ஆதரவைப் பெற்றனர். மைசூர் மன்னரின் பல போர்களில் கொங்கு வேளாளர்கள் குறிப்பாகச் சாத்தந்தை குலத்தினர் தலைமை தாங்கிப் போரிட்டனர்.

கோழிக்கோட்டில் சாமுரின் அரசர் மீது ஒருமுறை மைசூர் அரசர் நடத்திய போரில் சாத்தந்தை குலத்தினரும் அவர்களின் தலைவரான காலிங்கராயரும் தம் படைகளுடன் கலந்து கொண்டனர். குடகு நாட்டின்மீது மைசூர் அரசர் நடத்திய போரிலும் சாத்தந்தை குலத்தினர் கலந்து கொண்டு வெற்றி பெற்றனர்.

மைசூர் அரசரால் அட்டகோண தண்டிகை எனப்படும் தங்கமுலாம் பூசிய 8 கலசங்களுடன் கூடிய பல்லக்கைக் காலிங்கராயர் பரிசிலாகப் பெற்றார்.

கிழக்கிந்தியக் கம்பெனியார் நாளிலும் அவர்கட்கு ஆதரவாக இருந்தனர்.

## வேல் வேந்தர் நோக்கும் கை

வேளாளர் பெருமைகளைக் கம்பர் பல பாடல்களால் பாடியுள்ளார்.

அவற்றுள்

,மேழி பிடிக்கும்கை கே வல்வேந்தர் நோக்கும்கை
ஆழி தரித்துப்பார் ஆளும்கை—சூழ்வினையே
நீக்கும்கை என்றும் நிலைக்கும்கை நீடூழி
காக்கும்கை காராளர் கை'

என்பதும் ஒன்று.

இப்பாடலில் வரும் 'வேல்வேந்தர் நோக்கும் கை' என்பதற்கு 'வேல் வேந்தர் போற்றும்கை' என்ற பாட பேதமும் உண்டு. இதற்கேற்ப வேல் படையுடைய வெற்றி வேந்தர்கள் நோக்கும் கையாகவும் போற்றும் கையாகவும் விளங்கியது கொங்கு வேளாளரில் சாத்தந்தை குலத்தினரின் கரங்கள் என்றால் அது மிகையாகாது.

## மேழிக் கொடிபடைத்த மேலோர்

அரசருக்குக் கொடி இருப்பதுபோல் கொங்கு வேளாளர் களுக்கும் கொடி உண்டு. வேளாளர்களும் மேழிக் கொடியால் உலகம் காக்கின்றனர் என்கிறார் ஒரு புலவர்.

'ஆழிக் குடையான்போல் அண்டர்புவ னம்காக்க
மேழிக் கொடிபடைத்த வித்தார நாகரிகர்'

என்று சாத்தந்தை குலத்தினர் இலக்கியத்தில் புகழப் படுகின்றனர்.

'வெள்ளோடு சாத்தந்தை கோத்திரம் பொன்மேழித் தலைவனாகிய நஞ்சப்ப கவுண்டர் மகன் நல்ல காளியப்ப

கவுண்டர்' எனவரும் பட்டயத் தொடராலும் மேழிச்சின்னம் கூறப்படுகிறது.

அரசர்களைக் குறிப்பதுபோலவே சாத்தந்தை குலத்துப் பெருமக்களை பூமிபாலகர், வேள், மன்னர், அரசு, பார்த்திபர் என்ற சொற்களால் புலவர்கள் மனம் நிறைந்து வாழ்த்தியுள்ளனர்.

'சரவண ஆடவன்
உகாயனூர் அரசு பெற்றிருந்தான்'

என்று சாத்தந்தை குலத்தார் காணியை அரசு என்றே புலவர் கூறுகிறார். 1852ஆம் ஆண்டின் மிராசு ரைட் 57 ஆம் பக்கத்தில் வேளாளருக்கு அரசுப்பட்டம் உண்டு என்று கூறுகிறது.

## மயில் சின்னம்

பயிர குலத்துப் பழைய கோட்டைச் சர்க்கரை மன்றாடியார் மரபினருக்கு அன்னமும், பெரிய குலத்துச் சங்கரண்டாம் பாளையம் வேணாடுடையார்களுக்குச் சிங்கமும் குலச்சின்னமாக இருப்பதுபோல் சாத்தந்தை குலத்தாருக்கு மயில் குலச்சின்னமாக விளங்கியது. காலிங்க ராயனுக்குக் கால்வாய் வெட்ட வழிகாட்டிய பாம்பு மயில் விரட்டவே ஊர்ந்து சென்றுள்ளது. வெள்ளோடு, எலவ மலை, கவுண்டச்சிபாளையம், வெள்ளிரவெளி போன்ற ஊர்களில் சாத்தந்தை குலத்தாரின் தனிக்காணிக் கோயில் களில் பொறிக்கப்பட்ட அழகிய மயில் சின்னத்தைக் காணலாம்.

தமிழக அரசு தொல்பொருள் துறையைச் சேர்ந்த கல்வெட்டு ஆய்வாளர் இரா. பூங்குன்றன் அவர்கள் பெருங்கல் நாடன் பேகன் சங்ககாலத்தில் மயிலுக்குப் போர்வை போர்த்தினான். வேள் பேகன் சாத்தந்தை குல மரபைச் சேர்ந்தவனாக இருக்கலாம். தன் குலச்சின்னம் காரணமாகவே வேள் பேகன் மயிலுக்குப் போர்வை சந்திருக்கலாம் என்று கூறுகிறார்.

# சாத்தந்தை குலத்தார் சாதனைகள்

கொங்கு நாட்டின் வாழ்வோடும் வளத்தோடும் இரண்டறக் கலந்து கொங்கு நாடு. கொங்கு சமூக முன்னேற்றத்துக்காகப் பெரும்பாடுபட்ட சாத்தந்தை குலத்தாருக்கு வேறு யாருக்கும் இல்லாத சிறப்புமிகு சாதனைகள் சில உள்ளன. அவை சாத்தந்தை குலத்தாரின் அறிவுத் திறனாலும், பேராற்றலாலும், பேருக்கத்தாலும், கருணைத் திறத்தாலும் விளைந்தவை. அவைகளில் சிலவற்றைக் காணலாம்.

## குலம் பிரித்த குன்றாப் புகழ்

கொங்கு 24 நாடுகளையும், நாடுகளுக்குள் அமைந்த ஊர்களையும், எந்தெந்த ஊர்களுக்கு யார்யார் காணியாளர்கள் என்று நற்குடி நாற்பத்தெண்ணாயிரம் பேர்களையும் பசுங்குடி பன்னிரண்டாயிரம் பேர்களையும் பிரித்தவர்கள் சாத்தந்தை குலத்தினரே. இவ்வாறு நாடு காணி பிரித்த நற்செயலை ஒரு பழம்பாடல் விளக்கிக் கூறுகிறது.

'சேரன்சோழன் பாண்டியமூவ ராசாக்களும்
செங்கோல் செலுத்துநாளில்
செம்பமுடி வைக்கவரும் கங்கைகுல வங்கிஷம்
செழியதிசை மூவர்தான் பிரிக்க
பார்மருவு காராளர் நாற்பத்தெண் ணாயிரம்
பசுங்குடிகள் பன்னீராயிரம்
பகுக்கவரு சாத்தந்தை உலகுடைய மன்றாடி
பார்வேந்தர் முடிகள் சூட்ட'

என்பது அப்பாடல் பகுதி.

## உரிமைகள் அளித்த உத்தமர்

கொங்கு நாட்டின் பல பகுதிகளில் முன்பு சாதி வேற்றுமைகள் தலைதூக்கி இருந்து அதன்மூலம் ஏற்றத் தாழ்வுகளுடன் மக்கள் சமுதாயம் விளங்கியது. கொங்கு நாடெங்கும் கம்மாளர் எனப்படும் ஆசாரி குலப் பெருமக்கள் வேளாளர் குடியிருப்புக்குள் வரும்போது கால்களுக்குச் செருப்பு அணிந்து கொள்ளக்கூடாது; அவர்களின் வீடுகளுக்குக் காரை பூசக் கூடாது; கம்மாளர் வீடுகளில் நடக்கும் நல்ல காரியங்களுக்கும், தீய காரியங்களுக்கும் வாத்தியம் எதுவும் வாசிக்கக் கூடாது என்றும் தடை நெடுங் காலமாகவே இருந்தது.

கம்மாளர்களில் பஞ்சகம்மாளர் என்று ஐந்து பிரிவினர் உண்டு அவர்கள் அனைவரும் வேளாளர் சமுதாயத்துக்குப் பல வழிகளிலும் உதவி செய்பவர்கள். அவர்களுக்கு இத்தடை இருப்பது வெள்ளோடைச் சாத்தந்தை காலிங்க ராயனுக்குப் பிடிக்கவில்லை. கொங்கு வீரபாண்டியனின் முதல் அமைச்சராகக் காலிங்கராயர் இருக்கும்போது இத் தடையை நீக்கினார்.

'இனிமேல் கம்மாளர்கள் தாங்கள் புறப்பட வேண்டும் இடங்களுக்குக் கால்களுக்குப் பாதரட்சை கோத்துக் கொள்ளவும், தங்கள் வீடுகளுக்குச் சாந்திட்டுக் கொள்ளவும் நன்மை தீமைக்கு இரட்டைச் சங்கு ஊதிப் பேரிகை உள்ளிட்டன கொட்டுவித்துக் கொள்ளவும் சொன்னோம். இதை வேண்டும் இடங்களிலே கல்லிலும் செம்பிலும் பொறித்துக் கொள்ளுக' என்று சாத்தந்தை காலிங்கராயன் ஆணையிட்டார்.

கொங்கும் நாடெங்கும் இத்தீய வழக்கம் ஒழிக்கப்பட்ட தாக அந்தியூர், பாரியூர், மொடச்சூர், நெரூர், பேரூர், வெள்ளோட்டுக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. கி.பி. 13ஆம் நூற்றாண்டில் இவ்வரிய செயல் எவ்வளவு தீர்க்க தரிசனத்தோடு செய்யப்பட்டது என்பது கருதத்தக்கதாகும்,

காலிங்கராயரின் சமரச நோக்கம் உலகினர் பாராட்டுக்குரியது ஆகும்.

## கால்வாய் வெட்டிய காவலர்

இன்றைய ஈரோடு வட்டத்தின் செல்வச் செழிப்பிற்கும், வளத்திற்கும் மூலகாரணம் காலிங்கராயன் கால்வாய். பவானி தொடங்கிக் கொடுமுடி அருகே ஆவுடையாபாறை வரை ஏறக்குறைய 90 கிலோமீட்டர் நீளமுள்ள கால்வாயையும், பவானி ஆற்றில் காலிங்கராயன் அணைக்கட்டையும் வீரபாண்டியன் ஆட்சிக்காலத்தில் தன் குடும்பச் சொத்தைக் கொண்டும், பங்காளிகள் துணை கொண்டும் உருவாக்கியவர் சாத்தந்தை காலிங்கராயர். அவர் இக்கால்வாய் வெட்டிய அரும்பணியை நாடும் ஏடும் பலபடப் பாராட்டுகிறது.

சேது அணை கட்டிய இராமன் செயலோடும் காவிரிக்குக் கரைகட்டிக் கல்லணை கண்ட கரிகாலன் செயலோடும் காலிங்கராயன் செயல் பாராட்டப்படுகிறது ஒரு புலவரால்;

'திரைகொண்ட வாரியை மாலடைத்
　　தான்செழும் காவிரியை
உரைகொண்ட சோழன்மு னாளடைத்
　　தான்உலகு ஏழறிய
வரைகொண்ட பூந்துறை நாடது
　　வாழஅவ் வானிதனைக்
கரைகொண்ட டைத்தவன் வெள்ளோடைச்
　　சாத்தந்தை காலிங்கனே'

என்று பாராட்டுகின்றார் அப்புலவர்.

## கம்பரை ஆதரித்த கருணையாளர்

கம்பரை ஆதரித்த சடையப்ப வள்ளல் கொங்கு வேளாளர்களில் சாத்தந்தை குலத்தைச் சேர்ந்தவர். இச் செய்தி வாலசுந்தரக் கவிராயரின் கொங்குமண்டல சதகத்தின்

'படிக்கவே பொருட்சாத் தந்தை
 பண்ணைகோன் வெண்ணைநல்லூர்
கொடுத்திடும் இரணம் வாரிக்
 கொங்குசெய் சதகம்தானே'

என்ற பாயிரப் பாடலாலும்

சாத்தந்தை கோத்திரன் பண்ணை
 குலேந்திரன் தமிழ்ச்சடையன்
கோத்திரம் நாற்பத்தெண் ணாயிரம்
 என்னும் குலம்விளங்க
ஆத்திப நல்லூர் கலியுகம்
 ஆயிரம் ஐம்பத்தொன்றில்
வாழ்த்துவர் கங்கையில் வங்கிசத்
 தோர்கொங்கு மண்டலமே

என்ற பாடலாலும் உறுதிப்படுகிறது.

இவ்வரலாற்றுச் செய்தியை எழுமாத்தூர் வேலம் பாளையம் வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர். பேராசிரியர் கு. அருணாசலக்கவுண்டர் ஆகிய இருபெரும் கொங்கு ஆய்வாளர்களும் ஏற்றுக் கொள்கின்றனர். வெள்ளோடு சிவன்கோயில் கல்வெட்டில் எலவமலை சாத்தந்தை குலத்தில் சடையன் என்ற பெயரைக் காணு கின்றோம். இக்கல்வெட்டு மூலம் வெள்ளோட்டுச் சாத்தந்தை குலத்தினர் சடையன் என்று பெயர் வைத்துக் கொண்டமை தெரிகிறது.

சாத்தந்தை குலத்தினரே 'கம்பர் செய் இராமர் பனுவலுக்குக்' காரணமாக இருந்தனர். இதனால்தான் கம்பர் கொங்கு வேளாளர்மீது கருணை கொண்டு காவிரி வெள்ளத்தை அடக்கினார். மங்கலவாழ்த்துப் பாடி அளித்தார். கம்பர் வாழி 16ம் ஏரெழுபதும் திருக்கை வழக்கமும் பாடிச் சிறப்பித்தார். 'காப்பவர் என்றும் வேளாளர்காண்' என்று கூறினார்.

கொங்கு வேளாளர்களில் பலர் சாத்தந்தை குலத்தாரைப் பின்பற்றிக் கம்பரைப் போற்றிப் புகழ்ந்தனர். வண்ணக்கன் குல நல்லவன் கம்பருக்கு அடிமையானார். கோட்டாறு கோத்திர மசக்காளி வேலன் கம்பரின் பல்லக்கைச் சுமந்தார். வெண்டுவ குலத்தான் செவ்வந்தி கம்பரின் பல்லக்கைச்சுமந்ததுடன் எச்சில் காளாஞ்சி ஏந்திக் கம்பரின் செருப்பையும் தூக்கினார். செம்பகுலத் தோன்றல் அமராவதி தான் கம்பருக்கு அடிமை என்பது மெய்யானால் இந்தப் பாம்பு என்னைக் கடிக்காது என்று புற்றில் கையை விட்டு நாகமாணிக்கம் பெற்றார்.

தனிப்பாடல் ஒன்று

'திருவெழுந் தூரில்வரு கம்பநா டர்க்கடிமை
திகழ்கின்ற வேளாளன்நீ'

என்று புகழுகிறது. புலவர் பாடுகின்ற வாசல் வாழ்த்தில்

'கம்பர் பட்சம் தவிராத வாசலே'

என்றும்,

'கம்பர் பாடலுக்கு அடிமைதன் வாசலே'

என்றும் வருவதைக் காணுகின்றோம்.

இவைகள் எல்லாவற்றையும்விட வெள்ளோடைச் சாத்தந்தை குலத்து கந்தய கவுண்டர் பேரனும் நல்லய கவுண்டர் மகனும் ஆன முத்தைய கவுண்டர் சந்திர சூரியர் உள்ளவரை வெள்ளோடைச் சாத்தந்தை குலத்தாராகிய எங்கள் வழியினர் கம்பரின் செந்தமிழுக்கு அடிமை என்று எழுதித் தந்துள்ளார்.

'கல்லும் காவேரியும் சந்திராதித்தர்
உள்ளமட்டும் கம்பநாடன்
சொல்லிய செந்தமிழ்க்கு அடிமைதுரை
நாங்கள் என்ற சோமாபூமேல்.

வல்லமைசேர் வெள்ளோடைச் சாத்தந்தை
    கந்தயவேள் மைந்தன்கீர்த்தி
நல்லயவேள் ஈன்றெடுத்த முத்தைய
    மகிபதியே நளின மாலே'

என்பது அச்செய்தியை விளக்கும் பாடலாகும். 'கம்பனை மறந்தால் தமிழ் ஏது? கவிதை என்பதும் கமழாது?''கவிதைச் சுவையை வடித்தெடுத்தான் கம்பன் கவி எனப் பெயர் கொடுத்தான்' என்றெல்லாம் சிறப்பிக்கப்பட்ட மாபெரும் தமிழ்க்காப்பியம் உருவாகச் சாத்தந்தை குலத்தினர் காரணமாக இருந்தனர் என்பது,தமிழ் இலக்கிய வரலாற்றில் மிகவும் முக்கியமான செய்தியாகும்.

## காடு கொன்று நாடாக்கியோர்

கொங்கு நாட்டில் காடுகளை அழித்து நாடாக்கி மக்களைக் குடியேற்றிய மாண்புறு செயல்களைச் சாத்தந்தை குலத்துச் செம்மல்கள் செய்தனர் என்பதைக் குன்னத்தூர் முதலிய இடங்களில் காணப்படும் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

பேரரசர்களின் சிறப்புமிகு நற்செயல்களைக் 'காடு கொன்று நாடாக்கிக் குளம்தொட்டு வளம் பெருக்கி' என்று பழம்பாடல் கூறுவதுபோல், சாத்தந்தை குலத்தினரும் காலிங்கராயனும் செய்தனர் என்பது வரலாறு கூறும் செய்தியாகும். அவரால் புதிதாக வெட்டப்பட்ட பழுது பார்க்கப்பட்ட குளங்கள் பலவாகும்.

## ஆலயம் காத்த ஆர்வலர்

சாத்தந்தை குலத்துச் செம்மல் காலிங்கராயன் கல்வெட்டொன்றில் அரசனுக்கும், ஆட்சி செய்யும் நாட்டிற்கும் வரிநீக்கம் அளிக்கப் பெற்றாலும் கோயில்கட்குக் கொடுக்கும் கொடையில் அல்லது வட்டியில் குறைப்பு

அல்லது நீக்கம் அல்லது தள்ளுபடி கிடையாது என்று எழுதப்பட்டுள்ளது. கோயில் காரியங்கள் குறைவின்றி நடத்தப்பட வேண்டும் என்பதில். அவர்க்குள்ள பெரும் அக்கறையை அக்கல்வெட்டுக் காட்டுகிறது.

'விளையிலும் விளையாது ஒழியிலும் ஊர்கேடு போனாலும் காஞ்சாலும் பேஞ்சாலும் குடுப்போமாக'

என்பது அக்கல்வெட்டில் காணும் தொடராகும்.

## நீதி கண்ட நேர்மையாளர்

கோயில்கட்குக் கொடுக்கும் வரியையோ அல்லது வட்டியையோ அல்லது கோயில் நிலத்தை உழுது கொடுக்கும் மேல்வாரத்தையோ கொடுக்கமால் விட்டால் அக் கோயில் நிருவாகிகள் அவர்களின் வீட்டுக்கு வந்து 'மண்கலம் தகர்த்து வெண்கலம் பறித்துக் கொள்ளலாம்' எனக் கல்வெட்டுக்களில் எழுதப்பட்டுள்ளது.

ஒரு சிலரிடம் வெண்கலம் மட்டுமே இருக்கலாம்; அவர்கள் இல்லத்தில் மேற்கண்டவைகளுக்காகப் பறிமுதல் (ஜப்தி) செய்யும்போது மண்கலம் தந்து வெண்கலம் பறிக்க வேண்டும் என்று கருணையுடன் ஆணை பிறப்பித்து நீதி செலுத்தும் நற்பண்பில் நேர்மையைக் கையாண்டவர் சாத்தந்தை குலத்தினர் தலைவர் காலிங்கராயர் ஆவார்.

இராசா தெய்வம் நமது குல முன்னவரின் நடுகல்லே யாகும். நடுகல்லிலே 'தெய்வமா நிற்பார்' 'அவரைக் கைதொழுது வணங்க வேண்டும்' என்ற குறிப்புச் சங்க இலக்கியத்தில் காணப்படுகிறது. புறப்பொருள் வெண்பா மாலையும் இதே கருத்தைக் கூறுகிறது. அரசர்களுக்கும் பெருமக்களுக்கும் எடுக்கப்பட்ட நினைவுக் கோயிலைப் 'பள்ளிப்படைக் கோயில்' என்பர். அவ்வகையில் இராசாக் கோயிலும் பள்ளிப்படைக் கோயிலேயாகும்.

சங்க காலத்தில் நடுகல் அல்லது வேறு தெய்வம் சிறப்பாக வணங்கப்படவில்லை; இக்கருத்தை மாங்குடி கிழார் என்ற புலவர் புறநானூற்றில் (335) விளக்கிப் பாடுகின்றார்.

'ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி
ஒளிறு ஏந்து மருப்பின் களிறு எறிந்து வீழ்ந்தென
கல்லே பரவின் அல்லது
நெல்லுகுத்துப் பரவும் தெய்வமும் இலவே'

என்பது அப்பாடல் பகுதியாகும்.

இவ்வாறு வீரம் கருதி வீழ்ந்த பெருவீரர்கட்கு எடுத்த நடுகற்கள் பெரும்பாலும் மக்கள் இயங்கும் வழிகளின் ஓரத்திலேயே எடுக்கப்பட்டன. அப்போதுதான் நடுகற்களை மக்கள் வணங்கிச் செல்ல முடியும். நடுகற்களை வணங்கிச் சென்றால் வழியின் வெம்மை குறைந்து தண்மை ஆகித் துன்பம் நீங்கும் என்பது பண்டைய மக்களின் நம்பிக்கையாகும்

'நல்லமர்க் கடந்த நாணுடை மறவர்
பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்
பீலிசூட்டிய பிறங்கு நிலை நடுகல்'

என்ற அகப்பாடலில் மக்கள் இயங்கும் வழியிலேயே நடுகல் நடப்பட்ட மரபு விளக்கிக் கூறப்படுகிறது. இவ்வாறு பெரும்பாலும் வழியிலேயே நடுகல் நடப்பட்டது என்பதை

அகநானூற்றின் பிற பாடல்களும், மலைபடுகடாஅம் போன்ற நூல்களும், பிற இலக்கியங்களும் விளக்கமாகக் கூறுகின்றன.

நமது இராசாக் கோயில் தொன்மையான வழியிலேயே அமைந்திருப்பது சங்கப்பாடல் கூறும் கருத்தை விளக்கு வதாக அமைந்துள்ளது. வெள்ளோடு கனகபுரம் வழியில் சாலையின் வடபால் கிழக்கு நோக்கி இராசா எழுந்தருளி யுள்ளார்.

இராசா சாத்தந்தை குலத்துப் பெருந்தலைவர் என்பதும், படைக்குத் தலைமை பூண்ட குறுநிலத் தலைவர் என்பதும் ஒரு பழம் பாடலால் அறியப் பெறும் அரிய வரலாற்றுச் செய்தியாகும்.

திருமாது சர்வலிங் கேசுரர்பா டகவல்லி
தேவிஉமை யாள்கணபதி
சிவசுப்பிர மண்ணியர் ஆதிநா ராயணர்
சீதைஅல மேலுமங்கை
பொருசூலி பொன்காளி அத்தனூர் ஆயியும்
புகழ்பெற்ற அண்ணன்மாரும்
பொன்னிலகு முப்பத்து முக்கோடி தேவர்கள்
புவிமீதில் வந்துகாக்க
திருமேவும் வடசோலை நந்தன வனங்களும்
தர்மமட சாலைநிலையும்
தண்டா மரைக்கமல மேவுதிரு மாலுடன்
சரசுவதி கலைவாணியும்
இருமாது பிரியாமல் அனுதினமும் விளையாடும்
எழிலான வெள்ளோடையில்
எண்டிசை மதிக்கவரு தண்டிகைத் துரையான
எங்கள்குல ராசாக்களே.

என்பது அப்பழம் பாடலாகும். 'தண்டிகைத்துரை' 'எங்கள் குல ராசாக்கள்' என்ற தொடர்கள் சிறப்புமிக்க சான்றுகளாகும்.

கீரன், செல்லன், தூரன், கூறை ஆகிய கொங்கு வேளாளர் குலத்தினர் சில ஊர்களில் இராசாவை எழுந்தருளச் செய்து வழிபடு கடவுளாக வழிபட்டு வருகின்றனர்.

மூலத்தானத்தில் மூன்று கருவறைகள் உள்ளன. நடுநாயகமான இடைக் கருவறையில் இராசா, நல்லமங்கை அம்மன், உச்சணன், சார்க்கணன் ஆகியோர் உள்ளனர். நல்ல மங்கை அம்மன் 'இராசா பங்கில் வளர் நல்லமங்கை' என்று கூறப்படுவதால் நல்லமங்கை அம்மன் இராசாவின் திருத்தேவியர் ஆவர். நல்ல மங்கை அம்மன் இராசாவின் தேவி ஆதலால் இராசாத்தாள் இராசாயி என்றும் அழைக்கப்பெறுகிறார். கொங்கு வேளாளர்களில் மணியன், காடை குலத்தினர் சில ஊர்களில் இராசாத்தாள் தெய்வத்தை வழிபடுகின்றனர். உச்சணன், சார்க்கணன் இருவரும் எப்பொழுதும் இராசாவின் அருகிருந்து மெய்க் காவல் புரிபவர்கள். இராசாவுக்கு நல்ல மந்திரியராக விளங்கியவர்கள். உடன் உறைந்து காவல்புரிந்து அவர்கள் இராசா வீரமரணம் எய்தியவுடன் தங்களையும் பலி கொடுத்துக் கொண்ட வீரஞ்செறிந்தவர்கள் ஆவர். சார்க்கணன் தெய்வத்தை சாக்கணன், சாக்கியணன் என்றும் கூறுவர்.

கருவறைகளுக்கு முன்பு மகாமண்டபத்தின் இடதுபுறம் கிழக்கு நோக்கி விக்கினங்களைத் தீர்க்கும் விநாயகர் உள்ளார். அவருக்கு அருகிலேயே நாகர் தெய்வ வடிவில் எழுந்தருளியுள்ளார். நாகர் வழிபாடும் தமிழ்நாட்டின் பழைய வழிபாடாகும். நமது ஊர்ப்பகுதியில் சின்னஞ் சிறுவர்கள் கூடக் 'காக்காயிக்குப் பொங்க வச்சுக் கைமுறிஞ்சு போச்சு நாகருக்குப் பொங்க வச்சு நல்லாப் போச்சு' என்று பாடுவதை இன்றும் காணலாம். இவைகட்கு உட்பக்கம் அர்த்த மண்டபத்தின் இடதுபுறம் வடக்கு நோக்கிச் சப்தமாதர் எழுவரும் வரிசையாக வீற்றிருந்தருள் புரிகின்றனர். சிவபெருமானின் ஏவலுக்குரிய ஏழு மாதர்களான பிராம்மி, மகேசுவரி, கௌமாரி, வைஷ்ணவி,

வராகி, இந்திராணி, சாமுண்டி ஆகிய எழுவருமே இங்கு உள்ளனர்.

சப்த மாதரை அடுத்துக் காவல் தெய்வமான வீரத் தெய்வம் கருப்பண்ணன் தனிக் கருவறையின்றி அர்த்த மண்டபத்திலேயே குடிகொண்டிருந்தார்.

கருப்பண்ணன் திருமாலின் அம்சம். 'கருப்பண்ண துரை' என்றும், 'கருப்பண்ண மகாதேவன்' என்றும் இவர் தனிப்பாடலில் அழைக்கப்படுகின்றார். இரவு வேட்டைக்கு வந்த முனியைக்கூடக் குண்டு தடியால் கருப்பண்ணன் விரட்டிய காட்சியைப் பாடல்கள் விளக்குகின்றன. சிவபெருமானின் திருக்கூட்டத்துள் அதிகார நந்திபோலக் கருப்பண்ணன் உள்ளார்.

கருப்பண்ணனைத் திருமாலின் அம்சம் என்றே பாடலில் காண்கின்றோம். கருப்பண்ணன்—கிருஷ்ணன் என்ற சொல்லின் தமிழ் மூல வடிவமே ஆகும். கருப்பண்ணனையே வடமொழியாளர் கிருஷ்ணன் ஆக்கிவிட்டனர்.

'கடவுள்தே வர்க்காக இரணியன் தனைவென்ற
கண்டகண் டீரவன்நீ'

'கண்ணியாம் சீதைவழி ஐந்துரா வணனைஒரு
கைக்குள்அணைத் திட்டவன் நீ'

என்றெல்லாம் இராசாக்கோயில் கருப்பண்ணன் புகழப்படுகின்றார். காவல் தெய்வமான கருப்பண்ண சுவாமிக்குப் பக்தர்கள் பலியும் கொடுப்பதால் இராசாக் கோயிலின் வெளியே தனிச்சந்நிதியில் இப்போது எழுந்தருள்விக்கப் பெற்றுள்ளார்.

இராசாவின் வலப்புறம் உள்ள முதல் கருவறையில் கூச்சக் குமார் குடிகொண்டுள்ளார். உச்சக் குமாரை முத்துக் குமார் என்றும் கூறுகின்றனர். இவர் குமார், குமாரர் என அழைக்கப்படுவதால், இராசாவின் திருமகன் ஆக இருக்கலாம்.

இராசாவின் இடப்புறம் உள்ள மூன்றாம் கருவறையில் பெரியண்ணன் தெய்வம் உள்ளார். பெரியண்ணன் கருவறையின் வெளியே மகாமண்டபத்தின் வடக்குக் கோடியில் தனி வீரனின் நடுகல் தெய்வம் ஒன்றும், அம்மன் சிலை ஒன்றும் உள்ளது. அம்மனைத் துவரடி அம்மன் என்று அழைக்கின்றனர். கிழக்கு நோக்கி இச்சிற்பங்கள் உள்ளன.

அதற்கும் அருகே தெற்கு நோக்கி இரண்டு திருமேனிகள் உள்ளன. ஆணும் பெண்ணுமான அதனைக் கோயில் அய்யன், கோயில் ஆத்தாள் என்று கூறுகின்றனர். இவர்கள் முதலில் கோயிலைக் கட்டியவர்களாக இருக்கலாம். அதற்கும் அருகில் துர்க்கையம்மன் எழுந்தருள்விக்கப் பட்டுள்ளது. வெளிப் பிரகாரத்தின் வடகிழ்ப்பக்கம் கிழக்கு நோக்கி மசரியாத்தாள் கோயில் உள்ளது. எதிரில் ஆண் தெய்வம் ஒன்றுள்ளது.

கோயிலில் நான்கு குதிரைகள் உள்ளன. இரண்டு தூரிகள் இராசாவின் எதிரில் உள்ளன. நடுவே உள்ள தூரியைக் கணக்குப் பிள்ளைகளும், வடக்கே தள்ளி உள்ள தூரியைப் பிரமாதி வருசம் மார்கழி மாதம் 10ஆம் தேதி பெருந்தொழு வெள்ளை ஆண்டி மகன் நஞ்சய ஆண்டியும் உபயமாக அளித்துள்ளனர். குதிரைகள் செய்தவர்களைப் பற்றித் திருப்பணிகள் பகுதியில் கூறப்பட்டுள்ளது.

கொங்கு நாட்டு ஆலயங்களின் தனிச்சிறப்புக்குரிய அமைப்பில் கோயிலுக்கு வெளியே தீபத்தம்பம் அழகிய மண்டபத்துடன் உள்ளது. தீபத்தம்பத்தில் சமூகப் பெரியவர்களின் உருவச் சிற்பங்கள் தலைக்குமேல் சிவலிங்கத்துடன் அமைக்கப்பட்டுள்ளன. பூசை செய்யும் பெரியவர் ஒருவர் சிற்பம் அழகிய முறையில் செதுக்கப்பட்டுள்ளது.

தீபத்கம்பத்தின் அருகே மேற்கு நோக்கி இராசா எழுந்தருளி இருக்கும் இடமாகிய கருவறையை நோக்கி வீரசாம்பான் அல்லது வீரமலைச் சாம்புவன் நின்ற நிலை

யில் எழுந்தருளியுள்ளார். துடிப்புள்ள பெருவீரனாகச் சாம்புவன் இலக்கியங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளார்.

முன் மண்டபத்தூண்களில் இருபுறமும் துவாரபாலகர் இருவர் அமைக்கப்பட்டுள்ளனர். அம்முன்மண்டப முகப்பின் விதானத்தில் புலிவேட்டைச் சிற்பம் ஒன்று சிறிய அளவில் அழகிய முறையில் செதுக்கப்பட்டுள்ளது. இரண்டு வீரர்கள் குதிரையில் ஏறியுள்ளனர். அவர்கள் கைகளில் நீண்ட வேல்கள் இருக்கின்றன. வீரர்கள் இருவரும் அச்சமின்றித் தம் கைகளில் இருக்கும் வேல்களால் புலியைத் தாக்கிக் கொல்லுகின்றனர்.

இவ்வாறு புலிவேட்டைச் சிற்பம் வேறு அமைப்பில் மகாமண்டபத் தூண் ஒன்றிலும், குதிரைச் சிற்பத்தில் சுதையிலும் உள்ளது. சாத்தந்தை குலத்தாரின் சில காணி ஊர்களிலும் இதுபோன்ற புலிக்குத்திச் சிலைகள் உள்ளன. இது அக்காலத்தில் நிகழ்ந்த வீர வரலாற்று நிகழ்ச்சியைச் சித்தரிப்பதாக இருக்கிறது.

கொங்கு நாட்டில் பல பகுதிகளில் காடுகளில் வசித்த புலிகளும் வேறு பல விலங்குகளும் நாட்டுக்குள் வந்து கால் நடைகளையும், பயிர்களையும் அழித்து மக்களுக்குத் துன்பம் கொடுத்து வந்தன. அவைகளைக் கொன்று நாட்டைக் காத்த பெருவீரர்களில் சாத்தந்தை குலத்தாருக்குப் பெரும்பங்கு உண்டு. இதனையே இச்சிற்பங்கள் கூறுகின்றன.

முன் மண்டபத்தின் வெளியிலும், மகாமண்டபத்திலும் சாத்தந்தை குலத்து முன்னோர்கள் சிலருடைய உருவச் சிலைகள் சில உள்ளன. சில வணங்கிய நிலையில் உள்ளன. அவர்கள் கோயில் திருப்பணி செய்தவர்களுடைய உருவச் சிலைகள் ஆகும். இவ்வாறு அமைக்கப்பட்ட சிற்ப அமைப்பில் ஒரு தம்பதியரைத் தீபத்தம்பத்திலும் காணுகின்றோம். தூண்களில் சில பெண்கள் சிலைகளும் உள்ளன. பல நூற்றாண்டுகட்கு முன்பு வாழ்ந்த நம்முடைய குல

முன்னவர்களாகிய அவர்கள் சிலையாகி நின்று நம்மை வாழ்த்தி வரம் தந்துகொண்டுள்ளனர்.

சில தலைவர்கள் குதிரைமேல் அமர்ந்துள்ளனர். சிலர் போர் வீரர்கள்போல் காட்சியளிக்கின்றனர். கேடயம், வாள், தலையலங்காரம் ஆகியவை. அக்காலப் பண்பாட்டையும் கலைச் சிறப்பையும் எடுத்துக் காட்டுகின்றன. இவைகளில் கல்வெட்டு எழுத்துக்கள் இல்லாமையால் இவர்கள் யார், இவர்கள் எக்காலத்தைச் சேர்ந்தவர்கள் என்று கண்டு பிடிக்க இயலவில்லை.

சில தூண்களில் விநாயகர், மயில் வாகனத்துடன் சுப்பிரமணியர், தண்டாயுதபாணி சிற்பங்களும், இடும்பன் சிற்பங்களும், சிவலிங்க சிற்பங்களும், இலிங்கத்தின்மீது பால்சொரியும் பசுக்களின் சிற்பங்களும், காமதேனு சிற்பங்களும் காணப்படுகின்றன. காளை வாகனத்தில் சிவபெருமான் அமர்ந்திருப்பது அழகிய முறையில் ஒரு தூணில் செதுக்கப்பட்டுள்ளது. நாகர் சிற்பங்களும் சில உள்ளன.

யானை, ஆடு, யாளி, ஒட்டகம், பசு, ஆடு, புலி, பன்றி நாய் முதலிய பல விலங்குகள் சிற்பங்களையும், அன்னம், கிளி, மயில் போன்ற பறவைகள் சிற்பங்களையும் சில தூண்களில் காணுகின்றோம்.

காலிங்க நடனம், இராமர், அனுமன், நரசிம்மாவதாரம் போன்ற வைணவச் சிற்பங்களையும் சில தூண்களில் காணுகின்றோம்.

குரங்குகள் சிவலிங்கத்தை வணங்கும் காட்சிகள் உள்ளன. இசைக் கருவிகளில் வீணை, கொம்பு போன்றவைகளின் சிற்பங்களும் உள்ளன. இவைகள் இயக்கும் நிலைகளில் அழகுடன் திகழ்கின்றன.

கொங்கு 24 நாடுகளிலும் வாழும் குலாலர்கள் தங்களின் வழிபடு கடவுளாகவும், இல்லுறை தெய்வமாகவும் அண்ணன்

மாரையும், இராசாவையுமே வணங்குகின்றனர். அவர்களில் பாதிப்பேர் குலத்தின் இன்றியமையாச் சடங்காகிய தெவம் செய்யும்போது பெட்டிகளில் பரம்பரையாக வைத்துப் பாதுகாத்து வரும் இராசாக்கள் தெய்வத்தையும் ஏனைய பரிவார தெய்வங்களையும் சிறப்புடன் பூசை செய்கின்றனர். யார் தெவம் செய்கிறார்களோ அவர்கள் வீட்டில் தெய்வங்களின் திருமேனிகள் பாதுகாக்கப்பெறும். பின்னர் மீண்டும் வேறு யார் தெவம் செய்கிறார்களோ அவர்கள் இல்லங்கட்குப் பெட்டியுடன் எடுத்துச் செல்லப்படும்.

சேரசோழ பாண்டியர்கள் தங்களுக்குள் எல்லைத் தகராறு செய்து கொள்ளவே, மதுக்கரைச் செல்லாண்டியம்மன் கோயிலில் கொங்கு வேளாளர்களில் கோலாத்தாக் கவுண்டர் மூவேந்தர்களுக்குப் பாகம் பிரித்த வரலாற்றை விரிவாக அண்ணன்மார் சுவாமி கதை கூறுகிறது.

தட்டய நாட்டார் தெவம் என்ற இராசாக்கள் வழிபாட்டைக் கூறும் நூல் அவ்வாறு மூவேந்தர்கள் நாடு பிரித்தபின் அனைவரும் இராசாவைக் கும்பிட வருகின்றனர் என்ற அரிய தகவல் கூறுகிறது.

'நாங்கள் பாகம் பிரிப்பதிலே தகராறு தானும்வந்து
இப்படி நாங்கள் இருக்கிறோம் இவ்விடத்தில்
நீங்கள் பசியைத்தணித்தீர் பாகம் பிரித்துவையும்
என்றுமே ராஜாசொல்ல ஏதுசொல்வார் கவுண்டருமே
மூவர் ராஜாவுட பேர்களையும் சொல்லுமென்றார்
மேற்குமுக மாய்இருக்கும் ராஜாவும் சொல்லுகிறார்
என்பேரு சேரன் என்றுமே சொன்னாரே
சேரனுக்கு மேல்தேசம் சொந்தமென்றார் கவுண்டருமே
கிழக்குமுகமாக இருக்கும் ராஜாவும் சொல்லுகிறார்
என்பேரு சோழராஜன் என்றுமே சொன்னாரே
அப்போது கவுண்டருமே அன்புடனே சொல்லுகிறார்
கீழ்தேசம் உங்களுக்குக் கீர்த்தியுள்ள மன்னவரே
என்றுமே சொன்னாரே இயல்பெரிய கவுண்டருமே
நடுமுகமாய்த் தான்இருக்கும் ராஜாவைத் தான்பார்த்து

உங்களுட பேரு உத்தமரே சொல்லுமென்றார்
அப்போது ராஜா அன்புடனே சொல்லலுற்றார்
என்பேரு பாண்டிராஜன் என்றாரே அப்போது
பார்த்தார் கவுண்டருமே பாண்டிய ராஜனுக்கு
நடுத்தேசம் பூராவும் நலமுடனே கொடுத்திடுவோம்
என்றுபாகம் பிரித்தாரே பாங்கான கவுண்டருமே
அப்போது ராஜா அன்புடனே ஏதுசெய்வார்
வாருமையா கவுண்டரே வகையுடனே எங்களுக்கு
பாகம் பிரித்துமேதான் பாங்காய்க் கொடுத்ததற்கு
என்ன வெகுமதிகள் ஈந்திடுவோம் உங்களுக்கு
தீராதஞாயம் எங்களுக்குத் தீர்த்துக் கொடுத்ததற்கு
எங்களுட தேசத்திலே நீர்இருந்து அரசாள வேண்டும்
என்றுமே ராஜாக்கள் இன்பமுடனே தானுமப்போ
கல்லாண்டாங் காடு கருநொச்சித் தோட்டமது
எழுபது வள்ளம்பூமி இனாமாய்க் கொடுத்தார்கள்
வடக்கிருந்து வந்ததனால் வளநாட்டார் என்றுசொல்லி
கங்கைகுல கோத்திரமும் காராள வங்கிசமாய்
வட்டாரம் பதியாளும் வளநாடு கோட்டையென்று
கோட்டைக்குப் பேருவைத்து குணமுடனே இருக்கையிலே
மணியம் கணக்குகளும் மன்னவரும் தான்கொடுத்தார்'

என்ற பகுதி அண்ணன்மார் கதைப்பகுதியில் வருவதாகும். இதே செய்தி தட்டயநாட்டார் தெவத்திலும் கீழ்வருமாறு கூறப்பட்டு இறுதியில் இராசாவை வணங்கும் செய்தி காணப் படுகிறது.

'சேரன் சோழன் பாண்டியன் மூவேந்தற்குப்
பங்குத்தகராறு வந்ததாம் அப்போது
வடகைலாசம் சென்று பத்திரகாளி அம்மனைக் கூட்டிவந்து
காவேரியும் ஆம்பராந்தியும் கூடும்துறையிலே உட்கார்ந்து
சோழனுக்குக் கிழக்கேயும் சேரனுக்கு மேற்கேயும்
பாண்டியனுக்குத் தெற்கேயும் பாகம் பிரிவினை செய்த

ஆழங்கண்ட சோழன் நீளங்கண்ட வல்லங்கரையில்
மண்ணைப் பிரித்த மதுக்கரைச் செல்லாயி
எல்லை பிரித்த ஏழுகரை நாச்சி
எட்டுக் கூடைமண் எடுத்து தங்கக்கரை போட்டுப்பின்
எங்கள் ராசனுடைய பூசைக்கு வரும்போது'

என்ற பகுதி தட்டய நாட்டார் தெவத்தில் காணும் பகுதியாகும்.

இத்தட்டய நாட்டார் தெவத்தில் இராசா மிகச் சிறந்த வீரராகவும், வீரர் தலைவராகவும் சித்தரிக்கப்படுகின்றார். ஆயுதப்படைகள், கேடயக்காரர், வேல்படைக்காரர் ஆகியோர் இராசாவிடம் இருக்கின்றனர். இராசன் தேவி இராசாயி என்று அழைக்கப்பெறுகின்றார்.

இராசாவின் படை கீழ்க்கண்டவாறு வருணிக்கப்படுகிறது:

'வெள்ளிப் புடிஅறுவாள் வளநாட்டு வீச்சறுவாள்
தங்கப் புடிஅறுவாள் தலைபெற்ற வீச்சறுவாள்
போட்ட பக்கம் தலைஅறுக்கும் பொன்னுப்புடி அறுவாள்
வெச்ச பக்கம் தலைஅறுக்கும் வெள்ளிப்புடி அறுவாள்
வீச்சறுவாள் கையில் வாங்கி
எங்கள் இராசனுடைய பூசைக்கு வரும்போது'

என்பது தட்டய நாட்டார் தெவப் பகுதியாகும்.

இவ்வருணனைகள் இராசா நிலவுலகில் தோன்றி வாழ்வாங்கு வாழ்ந்த பெருந்தலைவர் என்பதும், அவர்தம் சிறப்பால், பெருமையால், வீரத்தால், தலைமைப் பண்பால், அருள் தன்மையால் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்டார் என்பதும் நாம் உணருகின்றோம். வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்கள் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவர் என்பது வள்ளுவர் வாக்கு அல்லவா?

சாத்தந்தை குலத்தினர் தம் வழிபடு கடவுளாம் இராசாவின் பெயரையும் நல்லமங்கை பெயரையும் இராசப்ப

கவுண்டர், இராசாயி என்று தம் மக்களுக்குப் பெயராக வைக்கும் வழக்கத்தை அண்மைக் காலம் வரை வைத்துக் கொண்டிருந்தனர் என்பதைக் காணுகின்றோம். இராசாவை வணங்கி நல்வாழ்வு பெற்றவர்கள் பலர். திருமணம், மகப்பேறு, நோய் நீக்கம், வழக்கு வெற்றி, காணாது போன உடைமை கிடைத்தல் போன்ற இகநலம் யாவும் வழிபடுவோர்க்கு இராசாக்கள் அளித்து வருவது கண்கூடு.

மூன்று கருவறைகளின் மேல் அமைக்கப்பட்ட விமானங் களிலும், முன்மண்டப முகப்பிலும், தீபத்தம்பத்துக்கு முன்னரும் அழகிய சுதைச்சிற்பங்கள் சமயச் சிறப்புடன் அமைக்கப்பட்ட ஏற்ற வண்ணப் பூச்சுக்களுடன் திகழு கின்றன.

இராசாவின் தெய்வத் திருமேனியையும் இங்கு காணு கின்றோம்.

பல ஆண்டுகளாக திருப்பணி முடிவுறாமல் இருந்த இராசாக்கோயில் இப்போது குல அன்பர்கள் ஆர்வத்தாலும் உதவியாலும் ஊக்கத்தாலும் திருப்பணி முடிவுற்றுக் குடமுழுக்கு விழாவும் மிகச் சிறப்புடன் நடந்துள்ளது.

முன்பு நமது கோயிலைக் கட்டியவர்களைக் காட்டிலும், இப்போது திருப்பணி செய்தவர்கள் நான்கு மடங்கு புண்ணியத்தைப் பெறுகின்றனர். ஏனெனில் புதியதாக ஓரிடத்தில் கோயிலைக் கட்டுவதைக்காட்டிலும் ஏற்கனவே கட்டிய பழைய கோயில்களைத் திருப்பணி செய்வது நான்கு மடங்கு புண்ணியத்தைத் தரும். இதனை,

'முரிந்து வீழ்ந்தன வெடித்தன உடைந்தன முதிய
நெரிந்த வாகிய கோபுர நெடுமதில் பிறவும்
தெரிந்து முன்னையில் சீர்பெறப் புதுக்குவோர் பண்டு
புரிந்துளோர்பெறும் புண்ணியம் நான்மடங்கு உறுவர்'


என்ற காஞ்சிப் புராணம் சிவபுண்ணியப் படலப் பாடல் விளக்குகிறது.

தென்பாண்டி நாட்டுத் தென்காசி விசுவநாதர் கோயிலைக் கட்டிய அரிகேசரி பராக்கிரம பாண்டியன், தான் அமைத்த ஆலயம் தெய்வச் செயலால் அமைந்தது என்றும், மீண்டும் அக்கோயிலை விரிவு செய்பவர்களின் திருவடியிலும், அக்கோயிலைப் பராமரித்துப் பாதுகாப்பவர்கள் திருவடியிலும் விழுந்து வணங்குவதாகவும் பாடிய பாடல் உள்ளத்தை உருக்கும் தன்மை வாய்ந்ததாகும். நமது அருள்மிகு இராசாக்கோயில் அழகுடன் பல திருப்பணிகள் பாங்குடன் செய்யப்பட்டுப் பொலிவுடன் திகழ்வதைக் காணும்போது தென்காசி அரிகேசரி பராக்கிரமவர்மன் பாடிய அப்பாடல்தான் நமது நினைவுக்கு வருகிறது.

'சேலே றியவயல் தென்காசி
ஆலயம் தெய்வச்செய
லாலே சமைந்ததிங்கு என்செயல் அல்ல
அதனை இன்னம்
மேலே விரிவுசெய் தேபுரப்
பார்அடி வீழ்ந்துஅவர்தம்
பாலேவல் செய்து பணிவன்
பராக்கிரம பாண்டியனே'

என்பது அப்பாடலாகும்.


இன்னும் விரிவான பெரிய முழுமையான திருப்பணியை நமது அருள்மிகு வெள்ளோடு இராசாக்கோயில் கண்டு சிறப்புடன் விளங்க இராசா அருள்பாலிப்பாராக.




மயில் சின்னம்



பாலமடை அம்மன் கோயில்



வீறுடைக் குதிரை



புலி கொல் வீரம்